திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"



கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில்.

மாலை 6] சோபகிருது - பங்குனி - ஏப்ரல் 1964 [மணி 7

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

ஸ்ரீகாமாட்சியம்மை
தழுவக் குழைந்த
திருவேகம்ப நாதர்

பொருள் அடக்கம்

1. திருப்பாசுரம்
2. சிவன் எனும் நாமம்
3. இன்னுயிர் மன்னும் புனிதன்
4. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
5. சிவஞான போதம்
6. தொண்டை நாட்டுத் திருப்பதியநுபவம்
7. அர்ச்சாவதாரம்
8. ஸ்ரீ நாச்சியார் கோயில்
9. பரமேசுவர மங்கலம் கல்வெட்டுக்கள்
10. ஸ்ரீசார்தலிங்க சுவாமிகள்
11. ஆழ்வார் அநுபவம்
12. ஒரு நம்பி

ஆண்டுச் சந்தா ரூ. 10/- ★ தனி இதழ் விலை ரூ. ஒன்று

சந்தா தாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை 34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்தமாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்தல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 6] சோபகிருது பங்குனி-ஏப்ரல் 1964 [மணி 7

திருப்பாசுரம்

முன்னுரை :

திருப்பாசுரம் என்பது திருஞான சம்பந்தப் பெருமான் அருளிய திருப்பதிகங்களுள் ஒன்று. "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் பாடலை முதலாகக் கொண்டது, இத் திருப்பதிகம். "பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்" என்று, இப்பதிகத்தில் வந்திருத்தல் காணலாம். சேக்கிழார் சுவாமிகள் இதனை "மெய்ப்பாசுரம்" (2743) என்று வியந்து போற்றி யருளிச் செய்தார். சைவ சித்தாந்தச் சான்றோர் ஆகிய ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள், இதனைத் தாம் இயற்றி யருளிய இருபா இருபஃது என்னும் சித்தாந்த சாத்திர நூலில், "மெய்ஞ்ஞானம்" எனச் சிறப்பித்துப் பாராட்டி யுரைத்திருக்கின்றார்!

இத் திருப்பதிகம் எழுதப் பெற்ற ஓலையேடே, வைகையாற்று நீரின் வெள்ளத்தில் எதிரேறிச் சென்றது! மருவுறும் பிறவியாற்றில் மயங்கி அமிழாது மாதவர்களின் மனமானது, எதிர்நீந்திச் சென்று முத்தியாகிய கரையை அடைவது போல, இப்பதிகம் எழுதிய ஏடும், உண்மைப் பொருள் இது என்று உலக மக்களுக்கு உணர்த்தி, வைகையாற்று வெள்ளத்தை எதிர்த்தேறிச் சென்றது.

"திருவுடைப் பிள்ளை யார்தம்
திருக்கையால் இட்ட ஏடு
மருவுறும் பிறவி யாற்றின்
மாதவர் மனம்சென் றாற்போல்,
பொருபுனல் வைகை யாற்றில்
எதிர்ந்துநீர் கிழித்துப் போகும்
இருநிலத் தோர்கட் கெல்லாம்
இதுபொருள் என்று காட்டி!"

என இந்நிகழ்ச்சியைக் குறித்துப் பெரிய புராணம் விளக்கி யிருத்தல் காணலாம்.

இங்ஙனம், இப்பதிகம் எழுதிய ஏடு வெள்ளத்தை எதிர்த்துச் சென்று சேர்ந்த இடமே, திருவேடகம் என்னும் தலமாகப் பெயர்பெற்றுத் திகழ்கின்றது. "வைகை நீர் ஏடு சென்று அணைதரும் ஏடகம்" என்று, "வன்னியும் மத்தமும்" எனத் தொடங்கும் பதிகத்தின் இறுதிப் பாடலில் வந்திருத்தல், இவ்வுண்மைக்குச் சான்று பகரும். மேலும்,

தெற்றென்று தெய்வம் தெளியார்
கரைக்கு ஓலை தெண்ணீர்ப்

பற்றின்றிப் பாங்கெதிர் விரவும்
பண்பு நோக்கில்...''

என இப் பதிகத்தின் பதினொன்றும் பாடலில் வரும் குறிப்பும், ஈண்டுஎண்ணி இன்புறுதற் குரியது.

இத் திருப்பதிகம் ஏனைய எல்லாப் பதிகங் களினும் மிக்க சிறப்புடைய தாதல் கருதியே, ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் இதற்கு மிக விரிவான முறையில் இருபத்திரண்டு செய்யுட் களால், சிறந்த இனிய உரை விளக்கங்களைச் செய்திருக்கின்றார்கள். இங்ஙனம் திருப்பாசுரத் திற்கு உரை விரித்தருளிய சிறப்புடைமை பற் றியே, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள்,

''நகுபா சுரமுத லுரைசெய் தலினல்
நவில்உரை யாசிரியன் ;
நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர்
நீப்பப் போதனைசெய் நிலையாற்
போதகா சிரியன்; இவை
நிகழ்தொறும் நிகழ்தொறும்
ஆடிய ஞானத் திறன்உற லால்
ஞானா சிரியனும்நீ !''

என்று சேக்கிழார் சுவாமிகளைத் தாம் பாடிய பிள்ளைத் தமிழிற் சிறந்தெடுத்துத் துதித்து மகிழ்ந்தனர்! இத் துணைப் பெருஞ் சிறப்பு வாய்ந்த திருப்பாசுரத்தின் பொருள் நலங்களை ஈண்டு நாம் இயன்ற வரையிற் கண்டு மகிழ முயல்வோமாக!

வாழ்க அந்தணர் :

வாழ்க அந்தணர், வானவர், ஆன்இனம்!
வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக!
ஆழ்க தீயது! எல் லாம்அரன் நாமமே
சூழ்க! வையக மும்துயர் தீர்கவே!

1. பொருள் :

அந்தணர்கள் வாழ்க! தேவர்கள் வாழ்க! பசுக் கூட்டங்கள் வாழ்க! குளிர்ந்த நீர் ஆகிய மழை பொழிக! அரசனும் உயர்ச்சி யுறுக! தீயது ஆகிய அயல் நெறி களின் தொகுதி, வலிமையற்று அடங்குக! மக்கள் எல்லாரும் சிவபிரானின் திருப் பெயர் ஆகிய திருவைந்தெழுத்தை ஓதி வழிபடுக! உலகமும் துயரங்கள் தீர்ந்து, நலம் பெறுக!

திருப்பாசுரம் என்னும் இச் சிறந்த திருப் பதிகத்தின் மெய்ம்மொழிப் பயன், உலகுயிர்கள் யாவையும் துன்பம் நீங்கி இன்ப வாழ்வு எய்து தலேயாம். ஆதலின், உலகுயிர்களின் நலங் குறித்துச் சிவ வேள்விகளும் சிவார்ச்சனைகளும் இடையறாது நிகழ்தல் வேண்டும் என விரும்பி, ''வாழ்க அந்தணர் - வானவர் - ஆனினம்'' என்று திருஞான சம்பந்தர் அருளிச் செய்வாரா யினர்.

(1) 'வாழ்க' என்றே முதற்கண் அமை யத் தம் முடைய திருப்பாசுரத்தினைத் தொடங்கி யிருத்தல், திருஞானசம்பந்தரின் அருள்கனிந்த திருவுள்ளத்தின் நல்லியல்பைப் புலப்படுத்து கின்றது.

பரார்த்தமாகிய வேத வேள்விக்குரிய வைதிகர்களும், ஆகம வேள்விக்குரிய சிவ வேதியர்களும், ஈண்டு அந்தணர் எனப் பட்ட னர். சிவபாத இருதயர், நமிநந்தியடிகள், திரு நீலநக்கர், புகழ்த்துணையார் போன்ற சான் றோர்கள் எனக் கொள்ளினும் பொருந்தும், பரிமேலழகர் 'அழகிய தட்பத்தினை யுடையார்' எனக் குறிப்பிடுதலைத் தழுவி முனிவர்கள் என வும் கொள்ளலாம். பின்னர்த் தேவர்கள் வாழ்த் தப் படுதலால், இனம்பற்றி 'அந்தணர்' என்றது ஈண்டு முனிவர்களைக் குறிப்பதாகக் கொள்ளு தல் அமையும்.

உலக உயிர்கள் அனைத்தின் நலத்தையும் கருதி வேள்வியும் வழிபாடுகளும் இயற்றுதல் குறித்து அந்தணர்களையும், அவற்றையெல்லாம் இறையருள் வழிநின்று ஏற்றுச் செலுத்துதல் பற்றி வானவர்களையும், வேள்வி வழிபாடுகட்கு உரிய ஆனைந்தையும் திருநீற்றையும் அளித் துத் துணை புரிதலால் ஆனினங்களையும் வாழ்க என்று, திருஞான சம்பந்தர் முறையே வைத்து வாழ்த்தியருளினார்.

இதனை ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் ''அந்தணர் - தேவர் - ஆன் இனங்கள் வாழ்க என்ற இந்த மெய்ம்மொழிப் பயன், உலகம்

இன்புறச் சந்த வேள்விகள் முதல், சங்கரர்க்கு முன் வந்த அர்ச்சனை வழிபாடு மன்ன ஆம்'' (2720) என அருளிச் செய்திருத்தல் கொண்டு உணரலாம்,

(2) உலகுயிர்க ளெல்லாம் தழைத்து வாழ்வதற்கு வேள்விகளின் நற்பயனும் இன்றியமையாது வேண்டப்பட்டு விளங்குவ தாதலால், ''வீழ்க தண்புனல்'' என்றார். ''வேள்வி நற்பயன் வீழ்புனல் ஆவது நாளும் அர்ச்சனை நல்லுறுப்பு ஆதலால்'' (2721) என்பது பெரியபுராண விளக்கம்.

(3) வேள்விகள் முதலியன இடையூறு இன்றிச் செவ்விதின் நடைபெறுவதற்கும், உலக மக்க ளெல்லாம் நெறிமுறையே அறத் தாற்றின் வாழ்வதற்கும் காரணமாகத் திகழ்தல் பற்றி ''வேந்தனும் ஓங்குக'' என்றார். ''ஆளும் மன்னனை வாழ்த்தியது, அர்ச்சனை மூளும் மற்றிவை காக்கும் முறைமையால்'' (2721) என்பது காண்க

(4) 'வேந்தன்' என்றது ஈண்டு, நின்ற சீர்நெடுமாறர் ஆகிய கூன்பாண்டியன் என்னும் மன்னனைக் குறித்து நின்றது. தற்கால வரலாற்று அறிஞர்கள் மாறவர்மன் அரிகேசரி என்னும் பாண்டியனாக இவரை வழங்குவர். 'வேந்தனும்' என்பதில் உள்ள உம்மை, முன்பு அவர் சமண்சமயச் சார்பினராக இருந்ததனைச் சுட்டியதாகக் கொள்ளலாம்.

(5) 'ஓங்குக' என்றது, அவ்வேந்தனின் உயிர்ச் சார்பான நலங்களுக்கு மட்டுமேயன்றி, உடற்சார்பான நலத்துக்கும்கூட ஆக்கம் பயக்கும் ஏதுவாயிற்று. அவர் தமக்கு முன்பு இருந்த கூன்நீங்கப் பெற்று, நின்ற சீர் நெடுமாறர் ஆயினார். இதனை, ''எம்பிரான் சிவனே எல்லாப் பொருளும் என்று எழுதும் ஏட்டில், தம்பிரான் அருளால் வேந்தன் தன்னை முன் ஓங்கப் பாட, அம்புய மலராள் மார்பன் அநபாயன் என்னும் சீர்த்திச் செம்பியன் செங்கோல் என்னத் தென்னன்கூன் நிமிர்ந்ததன்றே'' (2745) எனச் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விளக்குதல் கொண்டு தெளியலாம்.

(6) ஒரு சிலர் இப்பாடலைப் பாடுங்கால், ''ஆழ்க தீயதெல்லாம்'' எனப் பாடுவர். அது தவறு. 'தீயது' என்பது ஒருமை. 'எல்லாம்' என்பது பன்மை. ஆதலின் 'தீயதெல்லாம்'' என்று இயைத்தல் பொருந்தாது. எனவே ''ஆழ்க தீயது'' என்று மட்டுமே, ஒரு தொடராகக் கொள்ளுதல் வேண்டும். இதற்குப் பொருள் : 'வேத சிவாகமங்களுக்குப் புறம்பாக உள்ள தீய அயல் நெறிகளின் தொகுதி வலிமை யற்று அடங்குக' என்பது. ''ஆழ்க தீயது என்று ஓதிற்று, அயல்நெறி வீழ்க என்றது'' (2722).

(7) மேற்கூறியபடி 'எல்லாம்' என்பதனைத் தனியே வேறாகப் பிரித்து ''எல்லாம் அரன் நாமமே சூழ்க'' என இயைத்து ஒரு தொடராகக் கொள்ளுதல் வேண்டும். அரன் நாமம், சிவபிரானின் திருவைந்தெழுத்து. சூழ்தல், ஓதித் தியானித்து வழிபடுதல். எனவே ''எல்லாம்'' என்றது ஈண்டுத் திருவைந்தெழுத்தினை ஓதி வழிபடுவதற்குரிய மக்கட் பிறவியினரை மட்டுமே குறிக்குமாயினும், சேக்கிழார் சுவாமிகள் தமது பரந்து விரிந்த திருவுள்ளப் பாங்கினால், ''தொல்லுயிர் யாவையும்'' எனப் பொருள் காண்கின்றார்: ''வேறு எல்லாம் அரன் பெயர் சூழ்க என்றது, தொல்லுயிர் யாவையும் அஞ்செழுத்து ஓதி வளர்கவே'' (2722).

(8) இவ்வுலக வாழ்க்கை துன்பம் நிறைந்தது. சம்பந்தர் தம் முதற் பதிகத்திலேயே 'துயர் இலங்கும் உலகு' எனக் குறிப்பிடுகின்றார். புறநானூறு என்னும் பழந்தமிழ் இலக்கியமும் ''இன்னாது அம்ம இவ்வுலகம்'' எனப் புகலுகின்றது. துன்பம் என்பதற்கு இவ்வுலகில் துன்னுவது என்றும், இன்பம் என்பதற்கு இவ்வுலகில் இல்லாதது என்றும் அறிஞர்கள் விளக்கம் (Etymological derivation) கூறுவர். எனவே, நம் துயர்தீர்தல் மறுமையிலேயே மட்டும் இயலும் எனப் பொதுவாகப் பல சமயங்களும் (Unworldly and other-worldly religions) வற்புறுத்துவது உண்டு. ஆனால் ஞான சம்பந்தரோ ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' (Optimistic View) என்று நமக்கு உறுதி கூறுபவர்.

எனவே, அவர்தம் நோக்கும் வாக்கும் ஓர்த்துணர வல்ல சேக்கிழார் சுவாமிகள், 'மறுமையில் மட்டுமே யன்றி இம்மையிலும் உலகுயிர்கள் துயர்தீர்க (இன்பம் நிறைக)' என ''வையகமும் துயர் தீர்க'' என்னும் தொடருக்குப் பொருள் விரித்துரைக்கின்றார். இதன்படி

"வையகமும்" என்பதில் 'வையகம்' என்பது இகம் ஆகிய இம்மை வாழ்க்கையைக் குறித்து நிற்க, உம்மை எதிரது தழீஇய எச்சவும்மையாய்ப் பரம் ஆகிய மறுமை வாழ்க்கையையும் சுட்டி நின்றது. "சொன்ன வையகமும் துயர் தீர்கவே என்னும் நீர்மை, இக பரத்தில் துயர் மன்னிவாழ் உலகத்தவர் மாற்றிட, முன்னர் ஞானசம்பந்தர் மொழிந்தனர்" (2723).

(9) திருப்பாசுரத்தின் முதற்பாடலாகிய 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்னும் இப்பாடல், பண்டைப் பழம்பெருந் தமிழ் நெறியே பற்றி எழுந்ததொன்றாகும். அந்தணர் (முனிவர்) வானவர் ஆனினம் மழை அரசன் உலகம் என்னும் அறுவகைப் பொருள்களையும் வாழ்த்துதல், பண்டைத் தமிழ் மரபாகத் தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளது. இஃது அறுமுறை வாழ்த்து எனப்படும்.

"அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப"

எனவரும் தொல்காப்பியப் புறத்திணை நூற்பா (81), இவ்வுண்மையைச் செவ்விதின் விளக்கும். தம்மைத் "தமிழ் ஞானசம்பந்தர்" எனப் பல பதிகங்களிலும் சிறப்பித்துக் குறிப்பிட்டுக் கொண்டு பெருமிதம் கொள்ளும் இயல்பினராகிய திருஞானசம்பந்தர், நம் பண்டைத்தமிழ் முன்னோர்களின் நெறி தழுவியே, இச் சிறந்த திருப்பாடலை அருளிச் செய்தனர் என ஈண்டு நாம் கொள்ளலாம்.

(10) இனி இவ்வொரு திருப்பாடலிற்றானே எத்துணைப் பொருள் நுட்பங்கள் அமையப் பெற்றுள்ளன என்பது, கருதி மகிழ்தற்குரியது. 'வாழ்க அந்தணர்' என்றதனால் வாழ்த்தும், 'எல்லாம் சூழ்க' என்றதனால் வணக்கமும், 'அரன் நாமமே' என்றதனாற் சாதனமும், 'துயர் தீர்கவே' என்றதனாற் பயனும் கூறிய வாறுதல் காண்க.

இம்மட்டுமோ! அரன் என்றதனால் சங்கார காரணன் ஆகிய முதல்வனே முதல்வன் என்ற பதியுண்மையும் இலக்கணமும், எல்லாம் சூழ்க—வையகமும் துயர்தீர்க என்றதனாற் பசுக்களின் உண்மையும் இலக்கணமும், தீயது—துயர் என்றதனாற் பாசங்களின் உண்மையும் இலக்கணமும் குறிப்பால் உணர்த்தப்பெற்றன. இத்தகைய நுண்பொருட் குறிப்புக்களால், இத் திருப்பாசுரமானது பின்னே தோன்றிய சைவ சித்தாந்த சந்தானாசிரியர்களுக்கும், அவர்தம் நூல்களுக்கு மெல்லாம் ஒரு சிறந்த முன்னோடியாகத் திகழ்ந்தமை தெளியலாம்.

அரிய காட்சியர் :

அரிய காட்சிய ராய்த்தம தங்கைசேர்
எரியர்; ஏறுகந் தேறுவர்; கண்டமுங்
கரியர்; காடுறை வாழ்க்கையர்; ஆயினும்
பெரியர்; ஆர்அறி வார்அவர் பெற்றியே?

(பொருள்) சிவபிரான், உயிர்களின் பாசஞான பசுஞானங்களுக்கு உணர்வரிய தன்மை யுடையவர். இஃது அவர்தம் சொரூப இலக்கணம் (சிறப்பியல்பு) எனினும், பக்குவம் மிகக அடியவர்களுக்குத் தடத்த இலக்கண (பொதுவியல்பு) நிலையில், அவர் தம் அழகிய கையிற் பொருந்திய நெருப்பினையுடையவராயும், காளை மாட்டினை விரும்பி ஏறுபவராயும், கருமை நிறம் பொருந்திய கண்டம் உடையவராயும், சுடுகாட்டில் தங்கி வாழும் வாழ்க்கையுடையவராயும் எளிமைத் தன்மையுடையவராக விளங்குவார். இங்ஙனம் எளிவந்தருளும் பல அடையாள நிலைகளையுடையவராயினும், அவர் இவற்றிலெல்லாம் அடங்கி நிற்பவர் அல்லர். விண்முதலாகப் பரந்த ஐம்பூதங்களும் பல வுயிர்களும் பல அண்டங்களும் ஆகிய யாவையும், இவர்தம் பெருவடிவில் 'இல்நுழை கதிரின் துன்னணுப் புரைய' அடங்கிக் கிடக்கும். அத்துணைப் பெரிய அவர்தம் பெற்றிமைகளை ஆராய்ந்துணரவல்லார் யாவர்? ஒருவரும் இலர் என்பது கருத்து.

வெந்த சாம்பல் :

வெந்த சாம்பல் விரை எனப் பூசியே
தந்தை யாரொடு தாய்இலர்; தம்மையே
சிந்தி யாஎழு வார்வினை தீர்ப்பரால்;
எந்தை யார்அவர் எவ்வகை யார்கொலோ?

(பொருள்) ஊழி முடிவில் எல்லாப் பொருள்களும் அழிந்து வெந்து நீறாகி



சம்பந்தர்
எலும்பைப் பெண்ணாக்கல்

உமாதேவியார்
மயில் உருவத்தில் பூசை செய்தல்

வாயிலார் நாயனார்
மனக்கோயிலில் இறைவனை வழிபடல்

திருமயிலைக் கபாலீச்சுரம்

ஒழிய, அவற்றின் சாம்பரைச் சந்தன மாகிய நறுமணப் பொருள்போலத் தமது திருமேனியிற் பூசிக் கொண்டு, தாமே எல்லா உயிர்களுக்கும் தந்தையும் தாயு மாக விளங்கித், தமக்கொரு தந்தையும் தாயும் இல்லாதவராக விளங்குபவர் சிவ பெருமான். வைகறையில் தம்மையே சிந் தித்துத் துயிலெழுபவர்களுடைய இரு வினைப் பொய்ம்மை வல்வினைகளை, அவர் போக்கி யருள்புரிவார். அத்தகைய எம் முடைய தந்தையார் ஆகிய சிவபிரான், இவ்வுலகப் பொருள்களை வகைப் படுத்துக் கூறுமாறு போல, நம்மால் இவ்வகையினர் என்று கூறப்படும் நிலையினர் அல்லர்.

இறைவன் எல்லாமாய் அல்லவுமாய், ஒன்றும் நீ யல்லை அன்றி ஒன்றில்லை எனத் தக்க நிலையில் திகழ்பவர் ஆதலின், அவர் தம் இயல்பினை நம்மனோர் ஆராய்ந்து வரையறுத்துக் கூறுதல் இயலாது என்பது இப்பாடலின் கருத்து.

'எந்தையார் அவர் எவ்வகையார்
கொலோ?'

என்றதன் பொருட் குறிப்பை,

எந்தைதான் இன்னன் என்றும்,
இன்னதாம் இன்ன தாகி
வந்திடான் என்றும் சொல்ல
வழக்கொடு மாற்றம் இன்றே

என ஸ்ரீ அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள், சிவஞான சித்தியார் சுபக்கச் செய்யுளில் (1—44) விளக்கியருளிச் செய்திருத்தல் காண லாம். "எப்பொருட் கூற்றினும் முந்தையோரை, எக் கூற்றின் மொழிவது?" எனச் சேக்கிழார் சுவாமிகளும், இத் தொடரின் பொருளை விரித் துரைத் தருளினர். (3)

ஆட்பாலவர்க்கு :

"ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும்,
ஆதி மாண்பும்,
கேட்பான் புகில் அள வில்லை;
கிளக்க வேண்டா!
கோட்பா லனவும், வினையும்
குறுகாமை, எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்று
இவை கேட்க! தக்கார்."

(பொருள்) ஆளாகும் பான்மையுடைய அடியவர்களுக்குச் சிவபிரான் அருள் புரி கின்ற திறங்களையும், அவர்தம் அளவற்ற மாட்சிமைகளையும் பற்றி வினவவும் விடை யிறுக்கவும் தலைப்பட்டால், அதற்கு ஓர் எல்லை இல்லையாய் முடியும். ஆதலின் நீவிர் அவைபற்றித் தன்முனைப்பு உணர் வோடு ஆராய்ச்சி செய்யப் புகுதல் வேண்டா, அநாதியே செம்பிற் களிம்பு போலச் சகசமாய் உயிர்களைப் பற்றிக் கொண்டு நிற்கும் மூல ஆணவ மலமும், பண்டைப் பழவினையாகிய மூலகன்மமும் குறுகி நலியாதிருத்தற் பொருட்டு, எந்தை யாகிய சிவபிரானின் திருவடிகளைத் தகுதி யுடைய அன்பர்கள் அடைந்து பணிந்து, ஞானநிட்டை கைகூடி யுணரப் பெற்று உய்வார்களாக!

மருத்துவன் பிணியின் நிலையும் இயல்பும் அறிந்து, பிணியாளர்களுக்குப் பல்வேறு வகை களில் ஏற்ற பெற்றி மருத்துவம் செய்தலைப் போலவே, இறைவன் அடியார்களின் இயல் பும் தகுதியும் நோக்கி, அவர்களை அவரவர் கட்கு ஏற்ற முறைகளில் ஆட்கொண்டு அருள் புரிகின்ருன். சம்பந்தர்க்கு ஞானப் பால் அளித்ததும், அப்பர்க்குச் சூலைநோய் உண் டாக்கியதும், சுந்தரர்க்கு ஒரு மணத்தைச் சிதைவு செய்து இரு திருமணங்களைச் செய்து வைத்ததும், மாணிக்கவாசகர்க்குக் குரு வடிவில் வந்து திருவைந்தெழுத்தை உபதேசம் புரிந்ததும் ஆகிய அருளிச் செயல்கள், ஈண்டு நாம் எண்ணி யுணரத் தக்கன. அவைகள் இங்ஙனம் வெவ்வேறு வகைகளில் நிகழ்ந் தமைக்குரிய காரணங்களை இறைவனே அறிய வல்லன் அல்லது, நம்மனோர் அவற்றை ஆராய்ந்தறிதல் இயலாததும், வேண்டாதது மாகும் என்பது கருத்து. "பாண்டியன் கேட் பக் கிளக்கும் மெய்ஞ் ஞானம் ஆட்பா லவர்க் கருள் என்பதை அறியே" எனவரும் இருபா இருபஃது செய்யுளின்கண், ஸ்ரீ அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள் இப்பாடலைச் சிறந்தெ டுத்துக் குறிப்பிட்டிருத்தல், அறிந்து இன்புறு தற் குரியது. (4)

ஏதுக்களாலும் :

ஏதுக்க ளாலும் எடுத்த
மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா ! சுடர்விட்
டுளன் எங்கள் சோதி!
மாதுக்கம் நீங்கல் உறுவீர்
மனம்பற்றி வாழ்மின் !
சாதுக்கள் மிக்கீர்! இறையே
வந்து சார்மின்களே!

(பொருள்) காரணங்களாலும் உதாரணங்களாலும்மிகுதியாக ஆராயத்தலைப்படுதல் வேண்டா. எங்கள் சிவபிரான் நெருப்பிற் புறத்தே தோன்றும் ஒளியாயும், அன்பின் உறைப்பினுல் அதனுள் அழுந்திக் காண உள்ளே எழுகின்ற 'சோதியாயும், ஒளி வீசித் திகழுகின்ருன். அவனை மனத்திற் பற்றித் தியானித்து வாழ முற்படுங்கள்! அதனுற் பிறவியாகிய துன்பநெறியினின்று நீங்கி விடுபடுதலைப் பெறுவீர்கள் ! சாதுக்கள் ஆகிய பெரியோர்களே ! விரைவில் வந்து சார்வீர்களாக !

ஏதுக்கள்—காரணங்கள். எடுத்த மொழி-உதாரணம் (Example); பிரதிஞ்ஞை (Proposition, Thesis) எனவும், மேற்கோள் (Quotations) எனவும், கொள்ளுதலும் பொருந்தும். மிக்கீர்—பெரியோர்களே. இறையே—விரைவில்.

தனக்கு ஒப்புமை யில்லாத சால்பினன் ஆதலின், சிவபிரானின் தன்மைகளை ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் அனைய பிற அளவைகளாலும் அளந்தறிதல் இயலாது என்பதும் ; சிவபிரான் கருதலளவை கொண்டு நம்மால் அளந்தறிய ஒண்ணுதவன் எனினும், அன்பினிற் காணும் அடியவர்களுக்குக் காட்சியளவையில் தோன்றி நின்று அருள் புரிவான் என்பதும்; இப்பாடலின் கருத்து.

சுடர் விட்டு உளன் என்பதற்கு '' ஆன்ற அங்கிப் புறத்தொளியாய், அன்பில் ஊன்ற உள்ளெழும் சோதியாய் நின்றனன் '' எனச் சேக்கிழார் சுவாமிகள் பொருள்விளக்குகின்ருர்.

மனம் பற்றி வாழ்மின் என்பதற்கு '' ஆதிச் சுடர்ச் சோதியை அன்பின் அகத்துள் ஆக்கப் போதித்த நோக்குற்று, ஒழியாமற் பொருந்தி வாழ்ந்து, பேதித்த பந்தப் பிறப்பின் நெறி பேர்மின் '' என்பது சேக்கிழார் சுவாமிகள் விரிவுரை.

''மனம்பற்றி வாழ்மின்'' என்பதே 'ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி' (நாடுக) என ஆசிரியர் மெய்கண்ட தேவரால் அருளிச் செய்யப் பெற்றது. சோகம்பாவனையின் தன்மையும், அது பிறவி நீக்கும் முத்தி சாதனம் ஆமாறும், இத்தொடரால் உணர்த்தப் பட்டது.

சாதுக்கள் : தம்மை முழுவதும் இறைவன்பால் ஒப்படைத்துத் தமக்கென ஒரு செயலும் இல்லாதவர்களாகத் திருவருள் நெறியில் நிற்கும் சான்ருேர்கள். '' வேண்டும் வேட்கை எல்லாம் விமலர்தாள் பூண்ட அன்பினிற் போற்றுவோர்'' என்பது பெரிய புராணம் : (5)

ஆடும் எனவும்:

ஆடும் எனவும், அருங்கூற்றம்
உதைத்து வேதம்
பாடும் எனவும், புகழ் அல்லது
பாவம் நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்குமெனக்
கேட்டிர் ஆகில்,
நாடுந் திறத்தார்க் கருளல்லது
நாட்டல் ஆமே?

(பொருள்) சிவபிரான் ஐந்தொழிற் கூத்து ஆடுவான் என்றும், ஆற்றல் மிக்க கூற்றுவனை உதைத்தான் என்றும், வேத சிவாகமங்களை அருளிச் செய்து பாடுவான் என்று மெல்லாம் கூறப்பெறும் செயல்கள், அவன் தனக்குப் புகழ் பெருகும்படி செய்தனவோ ? அன்றி உயிர்களின் இறப்பும் பிறப்பும் ஆகிய துன்பங்களை நீக்குதற் பொருட்டுச் செய்தனவோ ? என்று, பிறவிக்கு அஞ்சி, வீடுபேறு காதலித்து நீவிர் ஆராய்வீர்களானுல், இங்ஙனம் ஆராயும் தகுதி பெற்ற அன்பர்களுக்கு, இவைகளெல்லாம் உயிர்களின் துன்பம் நீக்குதலாகிய அருள் காரணமாக நிகழ்வன என்று கூறுவதே யன்றி, வேறு பிறிதொரு காரணத்தைக் கூறிநாட்டுதல் இயலுமோ?

இறைவனின் செயல்கள் யாவும் உயிர்களின் நலங்கருதி, அருள் காரணமாகவே நிகழ்வன என்பது, இப்பாடலின் கருத்து.

இத்தேவாரப் பாடலில் உம்மைகள் இரண்டே வந்திருப்பினும், ஆடுதல்—கூற்று உதைத்தல்—வேதம் பாடுதல் என இறைவனின் செயல்கள் மூன்று, ஈண்டுக் குறிப்பிடப் பெற்றனவாகக் கொள்ளுதல் வேண்டும் என்று உணர்த்த, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் "ஆடும் என ஆம் திருப்பாட்டின் அமைத்த மூன்றும்" என அத்தொடர்ப் பொருளை விரித்துரைத்து விளக்கிக் காட்டியருளினார்.

அங்ஙனமே "புகழல்லது பாவம்...பிறப்பும் அறுக்கும்" என்னும் தொடரின் பொருள் விளங்காமல் நமக்கு மயக்கம் விளைவித்தலின் அத் தொடரின் பொருள் நம்மனோர்க்கு எளிதில் விளங்கும்படி, "நீடும் புகழோ? பிறர் துன்பம் நீக்குதற்கோ?" என்று தெளிவுபடுத்தி அருளிச் செய்தார்.

இவ்வாறே "அருளல்லது நாட்டலாமே?" என்றதன் கருத்துப் பொருளைச் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் முறையில் "இவை செய்தது ஈசர் கூடும் கருணைத் திறம்" என்று தெளிவுற எடுத்து மொழிந்தருளினார் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள்.

இறைவன் ஐந்தொழிற் கூத்து ஆடுதல், உலகம் கண்டு சிந்தித்து உணர்ந்து உய்யும் பொருட்டாகலானும்; மார்க்கண்டேயர்க்காகக் கூற்றுவனை உதைத்தமை, அவர் பொருட்டு மட்டுமேயன்றி, உலக மக்கள் அதன் உண்மையுணர்ந்து கொண்டு தம்மை வந்து அடைந்து பிறப்பு இறப்புத் துன்பங்கள் நீங்குதற் காகலானும்; வேதம்பாடுதல் உலக மக்கள் விதிவிலக்குகளை உணர்ந்தொழுகி நலம் பெறற் பொருட்டாகலானும்; இவையெல்லாம் உயிர்களின் பொருட்டு இறைவன் தன் அருள் காரணமாக இயற்றுவனவே என வற்புறுத்தி, "ஈசர் இவை செய்தது கூடும் கருணைத்திறம்" என்று இனிது விளக்கப் பெற்றது. (6)

கடிசேர்ந்த போது:

கடிசேர்ந்த போது மலரான
கைக் கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங் காட்டிடத்
தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட,
முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார்
சொலக் கேட்டும் அன்றே!

(பொருள்) மணம் பொருந்திய அன்றலர்ந்த மலர்களைக் கொண்டு, பசுக்கள் தாமே நல்ல முறையில் அன்பு பெருகிச் சொரிந்த பாலைக் கொண்டு, விசாரசருமர் தாம் மண்ணி யாற்றின் மணலால் அமைத்த சிவலிங்கத்திற்குத் திருமஞ்சனம் ஆட்டி வழிபாடு செய்ய, அது கண்டு பொருது இலிங்கத் திருவுருவினைச்சிதைக்க முற்பட்ட தந்தையாகிய எச்சதத்தன் கால்களை யறும்படி வெட்டி வீழ்த்த, அஃது ஒரு பாதகச் செயலாக இருந்தும், அதனைச் செய்த விசாரசருமர் முக்கண் மூர்த்தியாகிய சிவபெருமான் திருவடிகளைச் சேர்ந்து, முற்காலத்தில் சண்டேசுரப்பதம் பெற்றார் எனும் வரலாற்றினை, அறிவுடைய பெரியோர்கள் சொல்லுதலை, நாம் கேட்டு உணர்கின்றோம் அன்றோ?

திருப்பாசுரத்தின் முன்னைந்து திருப்பாடல்களால், வேத சிவாகமங்களிற் கூறப் பெறும் பதி-பசு-பாசம் என்னும் முப்பொருள்களின் உண்மையும் இலக்கணமும், வீடு பேற்றிற்குரிய சாதனமும் அவற்றின் பயனுமாகிய கருத்துக்கள் உணர்த்தப் பட்டன. இனிவரும் பின்னைந்து திருப்பாடல்களில், மேற்கூறிய கருத்துக்களைப் புராண வரலாறுகள் கொண்டு விளக்கி யருள்கின்றார் திருஞானசம்பந்தர். இப் பாடலின் பொருளைச் சேக்கிழார் சுவாமிகள் பின்வருமாறு தெளிவித் துரைக்கின்றார்:

கருதும் கடிசேர்ந்த எனும் திருப்
பாட்டில், ஈசர்
மருவும் பெரும்பூசை மறுத்தவர்க்
கோறல், முத்தி
தருதன் மையதாதல் சண்டீசர்தம்
செய்கை; தக்கோர்
பெரிதும் சொலக்கேட் டனம்
என்றனர்பிள்ளை யார்தாம்!

சித்தம் சிவமாயின சிவநேசர்கள் செய்யும் செயல்க ளெல்லாம், தவமேயாகும் என்பது இப்பாடலின் கருத்து. "சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும் அத்தன்" "பாதகமே சோறு பற்றினவா தோள் நோக்கம்" (திருவாசகம்) "பாதகத்துக்குப் பரிசு வைத்தான்" (திருப்பல்லாண்டு) "பரிவாற் பாதகத்தைச்செய்திடினும் பணியாக்கி விடுமே"(சித்தியார்) எனப் பல இடங்களிலும் வரும் அருளுரைகள் ஈண்டுக் கருதி யுணர்தற் குரியன. "அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும்: பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவம் ஆகும்; வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி, நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே!"

என இப்பாடலின் பொருளை இனிது வடித்தெடுத்து, உடன்பாடு எதிர்மறை எனும் இருதிறத்தானும் சிவஞான சித்தியார் செய்யுள் தெளிவித்திருத்தல் காண்க. (7)

வேத முதல்வன் முதலாக
விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர்
ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே
முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே
கலிக்கோவை சொல்லே

(பொருள்) வேதங்களாற் குறிக்கப்படும் முதல்வன் ஆகிய சிவபெருமான், முழுமுதற் பரம்பொருளாகத் திகழ்ந்து, உலகுயிர்கள் துன்பப் படாதிருத்தற் பொருட்டும், உலக மக்கள் படித்துணர்ந்து போற்றி ஏத்துதல் செய்து உய்தற் பொருட்டும், அருளிச் செய்தவை புராணங்கள்! பூத முதல்வன் எனத் திகழும் சிவபிரான் ஆகிய முதல்வனையே முழுமுதற் பொருள் என்று தெளிவுற விளக்குவன, சூதமுனிவர் அறிவுறுத்திய நூல்வரிசையாகிய புராணங்கள் என்று தெளிந்துகொண்டு, அவற்றை நீவிர் முறையே ஓதி யுய்க!

இத் திருப்பாடல், புராணங்களின் இயல்பும் சிறப்பும் இணையனவென விளக்குகின்றது. வேத முதல்வன், பூதமுதல்வன்—சிவபெருமான். ஏதம்—துன்பம். முதலாப் பொலிந்த—முழுமுதற் பொருளாகக்கொண்டு விளங்குகின்ற. சூதன்—சூதமகாமுனிவர். ஒலிமாலை—நூல்வரிசை. கலிக்கோவை — புராணங்கள். சொல்—ஓதுக.

உலகம் துன்பப்படா திருத்தற்பொருட்டும், முழுமுதற் பொருளின் இயல்பை யுணர்ந்து கொண்டு வழிபட்டு உய்தற் பொருட்டும், புராணங்கள் சிவபிரானால் முதற்கண் அருளிச் செய்யப் பெற்றன என்பதும்; புராணங்கள் சிவபிரானின் முழுமுதற்றன்மையினைச் செவ்விதின் எடுத்து விளக்குவன என்பதும்; அவற்றைச் சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்குப் பின்னர் அறிவுறுத்தியருளினர் என்பதும்; புராணங்களை நாம் ஏற்ற பெற்றி போற்றி யுணர்ந்து ஓதுதல் வேண்டும் என்பதும்; இப்பாடலில் இனிது விளக்கப் பெற்றுள்ளன.

வேத முதல்வன் எனும் மெய்த்
திருப்பாட் டினில் நேர் :
ஆதி யுலகோர் இடர்நீங்கிட,
ஏத்த, ஆடும்
பாதம் முதல்ஆம் பதினெண்
புராணங்கள் என்றே
ஓதுஎன் றுரைசெய் தனர்! யாவும்
ஓதாது உணர்ந்தார்!

எனச் சேக்கிழார் சுவாமிகள், இப்பாடலின் பொருளை இனிதெடுத்து விளக்கி யிருத்தல் காணலாம்.

உயர்ந்த உண்மைகளை, ஒன்றும் அறியாத பாமர மக்களும் உணர்ந்துகொள்ளும்படி, எளிய இனிய கதைகளால் சுவைமிக விளக்குகின்ற சிறப்பினை யுடையவை புராணங்கள்! * ஆதலின் அவற்றினைச் சிறந்தெடுத்துச் திருஞான சம்பந்தர், இப்பாடலில் போற்றிக்கூறி யருளினர் (8).

* "The puranas contain the truth dressed up in myths and stories, to suit the weak understanding of the majority. The hard task of interesting the multitude in metaphysics is acheived in India"

—Dr. S. Radha Krishnan.

பாராழி வட்டம் :

பாராழி வட்டம் பகையால்
நலிந்தாட்ட வாடிப்
பேராழி யானது இடர்கண்டு
அருள்செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சு
இடம்கொண் டவர்க்குப்
போராழி ஈந்த புகழும்
புகழ்உற்ற தன்றே

(பொருள்) வட்டமாகிய கடல் சூழ்ந்த உலகமானது அசுரர் ஆகிய பகைவரால் நலிவுறுத்தி அலைக்கப்பட வாட்டமுற்று, பெரிய திருப்பாற்கடலிற் பள்ளி கொண்டுள்ள திருமால் படும் துயரத்தைப் பார்த்து, அவருக்குத் தாம் அருள் செய்தலை விரும்பி, அவர் திருப்பாற் கடலை விட்டுத் திருவாரூர்க்கு வந்து, தம்மை உள்ளத்தின் கண் அமைத்து வழிபாடு நிகழ்த்த, அவ்வழிபாட்டிற்கு மகிழ்ச்சியுற்றுச் சிவபிரான் அவருக்குப் போர்புரிதற்குரிய **சுதரிசனம்** என்னும் சக்கரத்தினைக் கொடுத்து அருள் புரிந்த புகழும், சிவபிரானின் ஏனைய புகழ்ச் செயல்களுடன் ஒன்றாக வைத்துப் புராணங்களிற் சிறப்புறப் புகழப் பெற்றிருக்கின்றது அன்றோ?

சிவபிரானின் அருள்பெற்றே, தேவரும் மூவரும் யாவரும், தத்தம் தொழிலைத் திறம்படச் செவ்விதிற் செய்து போதருவர் என்னும் உண்மை, இப்பாடலில் வலியுறுத்தப் பெறுகின்றது. திருமால் சக்கரம் வேண்டிச் சிவபிரானை வழிபட்டுப் பெற்ற இடம் திருவீழிமிழலை எனவும் கூறப் பெறும். திருமால் சிவபிரான் பால் சக்கரம் பெற்ற செய்தியினை,

பாவுற்ற பாராழி வட்டத்
திருப்பாட்டின் உண்மை;
காவற் றொழிலான் எனும்
கண்ணனும் காவல்பெற்றது,
யாவர்க்கும் மேலாய ஈசன்
அருள் ஆழி பெற்று
மேவுற்ற சீர்உற்றது, என்றனர்
வேத வாயர்!

எனச் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விளக்கியிருக்கும் திறம், அறிந்து இன்புறுதற் குரியது. (9)

மாலாயவனும் :

மாலா யவனும் மறைவல்ல
நான்மு கனும்
பாலாய தேவர் பகரில்
அமு தூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு
அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டுஅங்கு அமரர்க்கு
அருள்செய்த தாமே

(பொருள்) திருமாலும் வேதங்களில் வல்ல பிரமதேவனும், அவர்களின் பக்கல் சேர்ந்த தேவர்களும் அமுதம் உண்ணுதலை விரும்பி, காற்றினால் அலைக்கப்படும் திருப்பாற்கடலைக் கடைய முற்பட, அங்ஙனம் கடையுங்கால் தம்மால் தாங்கு வதற்கு அரியதாக வெளிப்பட்ட ஆலாலம் என்னும் கொடிய நஞ்சினைச் சிவபிரான் தாமே உட்கொண்டு, அங்கே அத்தேவர்களை இறவாமற் காத்து இரக்கம் காட்டி அருள் புரிந்த சிறந்த செயலுக்கு, இணையாக வேறொரு பிற செயலும், சொல்லப் புகில், உளதாமோ? இல்லை.

சிவபிரானின் அருளிச் செயல்கள் பலவற்றுள், அப் பெருமான் ஆலாலம் என்னும் நஞ்சினை யுண்டு தேவர்களை யெல்லாம் காத்தருளிய அருஞ்செயல், பெருஞ்சிறப்பினதாய்த் திகழ்வ தொன்றாகும்.

புராணங்களுட் கூறப்பெறும் சிவபிரானின் முழு முதற்றன்மையினை விளக்கும் வரலாறுகளுள், தாலிபுலாக நியாயம் பற்றி இரண்டெடுத்துக் குறிப்பிட்டு, அவற்றின் நுண்பொருள்கள் இவையெனத் திருஞானசம்பந்தர் தேற்றியருள்கின்றார்.

மாலா யவன்என வருந்திருப்
பாட்டில், மாலுந்
தோலா மறைநான் முகனும்
தொடர்வாம் அமரர்

ஏலா வகைசுட்ட நஞ்சு
உண்டு, இறவாமை காத்த
மேலாங் கருணைத்திறம், வெங்குரு
வேந்தர் வைத்தார்!

எனச் சேக்கிழார் சுவாமிகள் தெளிவுறுத்திப் பாடுவது போல, இப்பாடல் சிவபிரான் ஆலாலம் உண்டருளிய செயலைக் குறிப்பிட்டு, அவர்தம் சிறந்த கருணைத் திறத்தினைவிரித்துரைத்து விளக்குகின்றது. (10)

அற்றன்றி அந்தண் :

அற்றன்றி அந்தண் மதுரைத்
தொகை ஆக்கி னனும்
தெற்றென்று தெய்வந் தெளியார்
கரைக்கு ஓலை, தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வின் ஊரவும்,
பண்பு நோக்கில்,
பெற்றொன் றுயர்த்த பெருமான்
பெருமானும் அன்றே

அத்தகையதே அல்லாமல், அழகிய குளிர்ந்த மதுரை மாநகரின்கண் தமிழ்ச் சங்கம் அமைத்து வளர்த்த பாண்டியர் குலத்தே தோன்றிய மன்னன் (நின்ற சீர் நெடுமாறர்), தெற்றென்று தெய்வம் தெளிந்து கொள்ளவும், தாம் மட்டும் அங்ஙனம் தெளிந்து கொள்ள விரும்பாதவர்களாகிய சமணர்கள், தம்முடைய வாதத்திற்கு எல்லையாக வகுத்து உடன்பட்டுக்கொண்டபடியே 'வாழ்க அந்தணர்' எனத் தொடங்கும் பதிகம் எழுதப் பெற்ற இவ்வோலையானது, தெளிந்த வைகையாற்றின் நீரில் பற்றுக் கோடு யாதும் இன்றி முறைப்படி அதனை எதிர்த்து மேல் நோக்கிச் செல்லும் திருவருட் செயலை ஆராய்ந்து தெளிந்தால், எருதினைக் கொடியாக உயர்த்தியுள்ள சிவபெருமான் ஒருவன் மட்டுமே பெருமான் (தலைவன்) ஆவான்! ஏனையர் அல்லர்.

ஆதலின் அத்தகைய ஒப்புயர்வற்ற சிவபெருமானின் சிறப்பியல்புகளை அறிந்து கொண்டு, அப்பெருமானை வழிபடும் அன்பைப் பெறுதலே சிறந்த ஞானம் ஆகும் என்பது கருத்து.

ஆனஅற் றன்றி யந்தண் எனும்
திருப் பாட்டில், கூடல்
மாநகர்ச் சங்கம் வைத்தவன்
தேறத் தேரு
ஈனர்கள் எல்லைக்கு இட்ட
ஏடு எதிர்ந்து செல்லில்,
'ஞானம் ஈசன்பால் அன்பே'
என்றனர் ஞானம் உண்டார்!

எனவரும் பெரிய புராணப் பாடலில், ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள் "ஞானம் ஈசன் பால் அன்பே" என வற்புறுத்துதல் தான், இப் பாட்டிற்குத் திருஞான சம்பந்தர் கருத்தாக விளக்கியிருத்தல் காணலாம். (11)

நல்லார்கள் சேர்புகலி :

நல்லார்கள் சேர்புகலி ஞான
சம்பந்தன் நல்ல
எல்லார்க ளும்பரவும் ஈசனை
ஏத்து பாடல்
பல்லார்க ளும்மதிக்கப் பாசுரம்
சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோர் உலகாளவும்
வல்லர் அன்றே.

கற்றும் கேட்டும் சிந்தித்தும் தெளிந்த மெய்யன்பர்கள் வாழ்கின்ற திருப்புகலி எனப்படும் சீர்காழியில் தோன்றிய திருஞான சம்பந்தன் (ஆகிய யான்), நல்லவர்கள் ஆக உள்ள எல்லோரும் புகழ்ந்து பணிகின்ற சிவபிரானைத் துதிக்கின்ற முறையிற் பாடல் வடிவில், பலவகைப் பட்டவர்களும் மதித்து வியக்கும்படி பல நுண் பொருள்களை அமைத்துக்கூறிய பாசுரங்கள் பத்தையும் கற்றுணர்ந்து பாட வல்லவர்கள், இம் மண்ணுலகை மட்டுமேயன்றி, அவ்விண்ணுலகையும் கூட ஒரு சேர ஆளவல்ல சிறப்பினை யடைவார்கள்.

இது திருஞான சம்பந்தர் தமக்குரிய வழக்கம் போலத் திருக்கடைக்காப்பாகப்பாடி யருளியது. இப்பதிகம் பன்னிரண்டு பாடல்களைக்

கொண்டதாக இருப்பினும், பொதுமை முறை பற்றிப் பத்து என்றே குறிப்பிட்டருளினுர்.

விநாயகப் பெருமானை மும்மதத்தன் எனவும், முருகப் பெருமானைப் பன்னிரண்டு கண்ணுடைய பரமன் எனவும், கூட்டியோ குறைத்தோ ஏற்ற பெற்றி சான்றோர்கள் வழங்கும் முறைபோல் இதனையும் கொள்க. [ஏனைய யானைகளைப்போல விநாயகருக்குப் பீஜமதம் இல்லையாதலின், விநாயகர்க்குரிய மதங்கள் இரண்டே என்பர் சிலர். ஒரு சிலர் ஞான மதம் என்பதனைப் பீஜமதத்திற்குப் பதிலாகக் கூட்டி, விநாயகர்க்கு மும்மதம் கொள்வர். சிவபிரானைப் போலவே, முருகனுக்கும் முகத்திற்கு மூன்று கண்களாக மொத்தம் பதினெட்டு கண்கள் உண்டு என்று வண்ணச் சரபம் ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் அவர்கள் தம் பாடல்களிற் குறிப்பிடுவர்.] (12)

முடிவுரை :

திருப்பாசுரம் என்னும் இச்சிறந்த திருப்பதிகத்திற்குத் தமது பெரிய புராணத்தில் இருபத்திரண்டு பாடல்களால் விரிவுரை வகுத்தருளிய சேக்கிழார் சுவாமிகள், "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் திருமொழிக்கு இலக்கியமாகவும், தம்முடைய பணிவும் பிற சான்றாண்மை நலங்களும் தோன்றுமாறும், பின்வரும் கருத்து அமைந்த உருக்கம்மிக்க சிறந்த பாடலை அருளிச் செய்துள்ளார்.

"திருஞான சம்பந்தர் அருளிய திருப்பாசுரத்தின் பொருளை, யான் முற்ற முடிய அறிந்து விளக்கினேன் இல்லை. சிறியவன் ஆகிய என்னுடைய அறிவுக்கு, அவர்தம் திருவடிகள் துணையாக இருந்து உணர்த்தியருளியபடி, யான் அறிந்த அளவில், ஒரு சிறிது கூறி, மேலும் விரித்து விளக்கிக் கூற ஆற்றலின்மையினுல் அன்பு ஒன்றே கொண்டு திருஞான சம்பந்தர்க்கு யான் என் வணக்கங்களைச் செலுத்திக் கொண்டேன்" என்னும் கருத்து அமைய,

"வெறியார்பொழிற் சண்பையர் வேந்தர்
மெய்ப்பா சுரத்தைக்
குறியே றியஎல்லை அறிந்து
கும்பிட்டேன் அல்லேன்!
சிறியேன் அறிவுக்கு அவர்தம்
திருப்பாதம் தந்த
நெறியே சிறிதுயான் அறிநீர்மை
கும்பிட்டேன் அன்பால்"

என்று ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் அவர்களே மிகவும் பணிவு தோன்றும் வண்ணம் குறிப்பிட்டுக் கொள்கின்றுரெனின், நம்மனோர் எம்மாத்திரம்?

ஆதலின், நாமும் சேக்கிழார் சுவாமிகள் அவர்களின் திருமொழியினையே விதந்தெடுத்து வழிமொழிந்து கூறிக் கொண்டு, நம்முடைய புல்லிய வணக்கங்களைத் திருஞான சம்பந்தப் பெருமானின் பொன்னடிகளிற் செலுத்தித் தொழுது, உய்ய முயல்வோமாக!

—ஆசிரியர்.

இறைபணியாளர் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்ட இடம்
திரு. A.R. சுப்பிரமணியம்,	விடுமுறையில் இருந்தவர்	ஸ்ரீ கச்சபேஸ்வரர் முதலிய கோயில்கள், காஞ்சிபுரம்.
திரு. S. சோமசுந்தரம்	ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் கோயில், திருநாராயணபுரம்.	ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில், நாச்சியார் கோயில்.
திரு. T. நாகராஜன்	ஸ்ரீ அட்சயலிங்க சுவாமி கோயில் கீழ்வேளுர்.	ஸ்ரீ வேதாரண்யேசுவரர் கோயில், வேதாரண்யம்.
திரு. T. P. வெங்கடாசலம்	ஸ்ரீ வேதாரண்யேசுவரர் கோயில், வேதாரண்யம்.	ஸ்ரீ மந்திர புரீசுவரர் கோயில், கோவிலூர்.

—x—

சிவன் எனும் நாமம்

முன்னுரை :

எல்லாப் பொருள்களிலும் சிறந்த மேலான பொருளாக விளங்குபவன் இறைவன். பிற பொருள்கள் எல்லாவற்றையும் விடச் சிறந்த பொருளாகத் திகழ்தலின், கடவுள் அல்லது இறைவனுக்குச் "சிறந்தது" என்றே ஒரு காரணப் பெயர் உண்டு. 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" எனவரும் தொல்காப்பிய நூற்பாவில், 'சிறந்தது' என்னும் சொல் இறைவனைக் குறித்து நிற்கின்றது.

திருவடி :

இறைவன் சிறந்தவனேயாயினும், நமக்கு உறுதுணையாக விளங்குதலில், அவனுடைய திருவடியே, அவனைக் காட்டிலும் நமக்குப் பெரிதும் சிறப்புடையது. பாலுண் குழவிக்குத் தாயின் தனங்களைப் போல, அன்பர்களுக் கெல்லாம் இறைவனின் திருவடிகளே பற்றுக் கோடும் இன்றியமையாத பெருந்துணையுமாக இருந்து பெருநலம் புரிந்து வருகின்றன. இது குறித்தே பரிபாடல் என்னும் சங்ககாலப் பனுவல், இறைவனைக் காட்டிலும் அவனுடைய திருவடிகளே மிகவும் சிறப்புடையவை என்னும் கருத்தில், "நின்னிற் சிறந்த நின்தாள் இணையவை" எனப் புகழ்ந்து பாடுகின்றது.

திருநாமம் :

வேறொரு வகையிற் பார்த்தால், இறைவனின் திருவடிகளைக் காட்டிலும்கூட, மிகவும் சிறப்புடையது வேறொன்றுளது! அதுதான் இறைவனுடைய திருநாமம். அதன் அருமை பெருமைகள் அளவிடற்கு அரியன.

'நாமம்' என்னும் பெயர்ச்சொல், 'நாம்' என்னும் உரிச்சொல்லின் அடியாகத் தோன்றியதாகும். கேட்ட மாத்திரத்திலேயே அன்பும் இன்பமும் மதிப்பும் வியப்பும் விளைக்க வல்ல சிறப்புடைய பெயர்களையே 'நாமம்' என்னும் சொல் குறிக்கும். இறைவன் ஒரு பசுவைப் போன்றவன் எனக் கொண்டால், அவனது திருவடி பசுவின் மடியையும், அவனது திரு நாமம் மடியின் காம்பினையும் போன்றது எனக் கூறலாம். இறைவனின் திருநாமமே, அவனது திருவடியை நினைந்து நாம் தியானிப்பதற்குப் பெரிதும் துணைபுரிகின்றது.

> கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
> ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
> நெல்லு நீள்வயல் நீலக் குடிஅரன்
> நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேன் அன்றே"
>
> —தேவாரம்

என்னும் பாடலில், "சமணர்கள் கல்லினோடு சேர்த்துக் கட்டிக் கடலில் தள்ளியபோது, சிவபிரானின் நல்ல நாமம் நவிற்றியே, நான் யாதோர் இடுக்கணும் இன்றிக் கரையேறி உய்தி பெற்றேன்" எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் குறிப்பிடுகின்றார். இதனால், இறைவனின் திருநாமச் சிறப்பு எத்தகையது என, நாம் எண்ணி யுணர்ந்து மகிழலாம்.

சிறந்த விளக்கம் :

இறைவனின் திருநாமச் சிறப்பினைப் பின்வருமாறு வியந்தெடுத்துச் சிறந்த வைணவப் பெருமக்கள் அழகுற விளக்குவார்கள். அவ் விளக்கம் சைவ சமயத்திற்கும்-ஏனைய பிற சமயங்களுக்கும் கூட-ஏற்புடையதாக எழில் மிக்குச் சுவை நிரம்பித் திகழ்கின்றது.

"சகல சாஸ்த்ரங்களாலும் பிறக்கும் ஞானம் ஸ்வயம் ஆர்ச்சிதம் போலே; திரு மந்திரத்தாற் பிறக்கும் ஞானம் பைத்ருக தநம் போலே.

இத்தை வேதங்களும் ரிஷிகளும் ஆழ் வார்களும் ஆசார்யர்களும் விரும்பினார்கள்.

வாச்யப்ரபாவம் போலன்று, வாசகப்ர பாவம். அவன் தூரஸ்தனானாலும், இது கிட்டி நின்று உதவும். த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமம் இறே.

சொல்லும் க்ரமம் ஒழியச் சொன்னாலும் தன் ஸ்வரூபம் கெட நில்லாது இது தான் 'குலந்தரும்' என்கிறபடியே எல்லா அபேக்ஷிதங்களையும் கொடுக்கும்.

ஐச்வர்ய கைவல்ய பகவத் லாபங்களை ஆசைப்பட்டவர்களுக்கு அவற்றைக் கொடுக்கும்; கர்மஞான பக்திகளிலே இழிந்தவர்களுக்கு விரோதியைப் போக்கி அவற்றைத் தலைக்கட்டிக் கொடுக்கும்; ப்ரபத்தியிலே இழிந்தவர்களுக்கு ஸ்வரூப ஞானத்தைப் பிறப்பித்துக் காலக்ஷேபத்துக்கும் போகத்துக்கும் ஏதுவாய் இருக்கும்.

''மற்றெல்லாம் பேசிலும்'' என்கிற படியே அறியவேண்டும் அர்த்தமெல்லாம் இதுக்குள்ளேயுண்டு.

பூர்வாசார்யர்கள் இதில் அர்த்தம் அறிவதற்கு முன்பு தங்களைப் பிறந்தார்களாக நினைத்திரார்கள்; இதில் அர்த்த ஞானம் பிறந்த பின்பு 'பிறந்த பின் மறந்திலேன்' என்கிற படியே இத்தை ஒழிய வேறொன்றால் காலக்ஷேபம் பண்ணி யறியார்கள்.''

திருநாம செபம் :

இத்தகைய இறைவனின் திருநாமத்தினை மெல்லென நவிற்றிக் கொண்டு தியானம் செய்வது, இறைவனுக்கு அவனுடைய திருவடிகளை இனிதாக வருடி விடுவது போல, மிக்க உவகை யளிக்கின்றது. இதனை,

''தூயவெண் நீறு துதைந்தபொன்
மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும்
சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போல் அன்பு நீர்பொழி
கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார்
புகுந்தனர் வீதியுள்ளே''

என வரும் பெரிய புராணச் செய்யுளிற் சேக்கிழார்பெருமான் குறிப்பிடுதல் காணலாம்.

பேராயிர முடைய பெருமான் :

இறைவன் தன்னியல்பில் ஒரு நாமம் ஒரு ருவம் ஒன்றும் இல்லாதவன். ஆயினும், அன்பர்கள் தமது அன்பின் பெருக்கால், அவனுக்கு ஆயிரம் திருநாமம் வழங்கி வழிபடுகின்றார்கள்.

ஒரு நாமம் ஓருருவம்
ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம்
தெள்ளேணம் கொட்டாமோ

என்பது திருவாசகம். இங்ஙனம் பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமானுக்குரிய திருநாமங்களுள், சிவன் என்பது முதன்மை வாய்ந்த தொன்றாகும். எந்நாட்டவர்க்கும் உரிய இறைவனைத் தென்னாட்டவர் 'சிவன்' எனும் சிறப்புப் பெயரால் தொன்றுதொட்டுப் புகழ்ந்து போற்றி வழிபட்டு வருகின்றார்கள்.

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

என்பர் மணிவாசகர். எனவே, இறைவனைச் சுட்டுதற்குரிய குறியீடுகளுள், ''சிவன்'' எனும் சொல்லையே தென்றமிழ்நாட்டவர்கள் சிறந்த தொன்றாகத் திறனறிந்து தேர்ந்து கொண்டமை தெளியப்படும்.

திருநின்ற செம்மை:

கடவுள் இலக்கணத்திற்குரிய எல்லாப் பண்பு நலங்களையும் உள்ளடக்கி, ஒரே சொல்லாற் குறிப்பிடுதற்குத் தென்றமிழ் நாட்டுப் பெருமக்கள் வழங்கிய சிறந்த இனிய சொல்லே சிவன் என்பது! இதனாற் சிவன் என்னும் சொல்லுக்குப் பல சிறந்த உயரிய பொருள்கள் படிப் படியே அமைவன வாயின. அச்சொல்லின் கண் அடங்கி நிற்கும் பொருள் நலங்களின் திறங்களை யெல்லாம் கருதியே,

'' சிவன் எனும் நாமம் தனக்கே
யுடையசெம் மேனி எம்மான்''

எனவும்,

"சிவன்எனும் ஓசையல்லது அறையோ
உலகில் திருநின்ற செம்மை யுளதே ?"

எனவும் திருநாவுக்கரசர் அருளிச் செய்தனர். இங்ஙனம் சிவன்எனும் சொல்லை விதந்தெடுத்து வியந்து போற்றி, இஃதல்லது வேறோர் ஓசை உலகில் திருநின்ற செம்மைத்தா யுளதோ? என அறைகூவி வினவியருளிய சிறப்புடைமை பற்றியே, திருநாவுக்கரசர் பெருமானைச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் "திருநின்ற செம்மைத் திருநாவுக்கரசர்" எனத் தம் திருத்தொண்டத் தொகையிற் குறிப்பிட்டருளிச் செய்தனர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்:

இறைவனுக்கு இத்தகைய சிவன் எனும் நாமம் சிறப்புற அமைந்த பொருட்டிறத்தினை, யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் பின்வருமாறு அழகுற விளக்கியருள்கின்றார் :

"பதியானவர் அநாதியே உள்ள முற்றறிவு முற்றுத்தொழில் ஆகிய சிவத்துவம் இயைதலாற்றான், சிவத்துவம் என்னும் அதிசுத்தம் இயைதலாற்றான், சீ என்னும் தாது கிடத்தல் எனப் பொருள் படுதலின் இறுதிக்காலத்து உலகமெல்லாம் தம்மிடத்து ஒடுங்கிக் கிடத்தலாற்றான், சற்சனங்களுடைய மனங்கள் தம்பாற் கிடத்தலாற்றான், சி என்னும் தாது மெலிவித்தல் எனவும் கூருவித்தல் எனவும் பொருள்படுமாதலான் ஆன்மாக்களின் பாச சக்தியை மெலிவித்துச் சிற்சக்தியைக் கூருவித்தலாற்றான், காந்திப் பொருள்தரும் வசி என்னும் சொல் வர்ண விபர்யயம் (எழுத்து நிலைமாற்றம் : Metathesis) உறுதலாற்றான் சிவன் எனப்படுவர்."

ஆசிரியர் மெய்கண்டார் :

இங்ஙனம் சிவன் எனும் சொல்லுக்குப் பலர் பலவகைகளிற் பொருள் கூறுவர். அவைகளெல்லாம் ஒவ்வொரு வகையிற் பொருத்தம் உடையனவே யாயினும், ஆசிரியர் மெய் கண்டார் சிறப்பாக மூன்று பொருள்களைக் குறிப்பிட்டருள்கின்றார் :

" மன்னு சிவன் சந்நிதியில்
மற்றுலகம் சேட்டித்தது
என்னும் மறையின்
இயல்மறந்தாய் !—சொன்னசிவன்
கண்ணா உளம்வினையால்
கண்டறிந்து நிற்குங்காண்
எண்ணான் சிவன் அசத்தை இன்று"

என்னும் சிவஞானபோத வெண்பாச் செய்யுளில், சிவன் என்னும் சொல் மூன்று இடங்களிற் பயின்று வந்துள்ளது. அம்மூன்று இடங்களிலும், அது மூன்று வகையான வெவ்வேறு பொருட்குறிப்புக்களைச் சுட்டி நிற்கின்றது. ஆசிரியர் சிவஞான யோகிகள் தமது சிவஞானபோதப் பேருரையில் பின்வருமாறு விளக்கியிருக்கும் திறம், ஈண்டு அறிந்து இன்புறுதற்குரியது.

"இதனுட் சிவன் என்பது, முன்னையது பேரின்ப காரணன் என்னும் பொருட்டாய்த் தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபுணர நின்றது; நடுவணது முற்றுணர்வினன் என்னும் பொருட்டாய்க் காட்டாதற் குரிய இயைபு குறித்து நின்றது; ஈற்றது தூய தன்மையன் என்னும் பொருட்டாய் அசத்தை எண்ணாமைக்குரிய இயைபு குறித்து நின்றது. ஆதலாற் கூறியது கூறலன்மை யுணர்க. அஃது இம்முப்பொருளுடைத் தென்பது சோம சம்பு பத்ததி வியாக்கியானம் முதலியவற்றுட் காண்க, சிவதத்துவ விவேகத்துள் மூவகைப்படுத்து ஓதிய பொருளும் இவையே யாமாறு கண்டு கொள்க"

திருச்சிற்றம்பலக் கோவையார் :

சைவத் தமிழுலகில் மாணிக்க வாசகப் பெருமானைப் பற்றி அறியாதவர் ஒருவரும் இரார். அவர் அருளிச் செய்துள்ள திருவாசகம் என்பது யாவரும் அறிந்ததொன்று. அவரே திருச்சிற்றம்பலக் கோவையார் என வேறொரு சிறந்த ஞானநூலையும் பாடியிருக்கின்றார். அதற்குப் பேராசிரியர் என்பவர், முழுநலஞ் சான்ற விழுமிய உரையொன்று எழுதியிருக்கின்றார். பழமையும் பெருமையும் மிக்க அவ்வுரையின் கண்,

தவம்செய் திலாதவெம் தீவினையேம்
புன்மைத் தன்மைக் கெள்ளாது
எவம்செய்து நின்றினி இன்றுனை
நோவதென்? அத்தன் முத்தன்
சிவன் செய்த சீர்அரு ளார்தில்லை
யூர! நின் சேயிழையார்
நவஞ்செய்த புல்லங்கள் மாட்டேம்!
தொடல்! விடு நற்கலையே!

—திருக்கோவையார்

எனவரும் சிறந்த செய்யுளிற் (358) பயின்றுள்ள 'சிவன்' என்னும் சொல்லுக்கு, "எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மைகள் செய்தலாற் சிவன்" எனப் பேராசிரியர் அவர்கள் வகுத்திருக்கும் உரை விளக்கமும் ஈண்டைக்கு இயைபுடையதாய் எண்ணி மகிழத் தகும்.

கந்தபுராணம்

இத்தகைய "சிவன் எனும் நாமம்" பற்றிய பொருள் நலத்தினை, ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் பின்வருமாறு தமது கந்தபுராணத்தின்கண் விளக்கியருள்கின்றார். ஊனாகி, ஊனுள் உயிராய், உயிர்தோறும் வானாதியான பொருளாய், மதியாகி வெய்யோன் தானாகி, ஆண் பெண் உருவாகிச் சராசரங்கள் ஆகியும் விளங்குபவன் எவனோ, அவனே சிவன் என்பது, அவர்தம் விளக்கம்.

சிவனுதல் என்னும் சொல்லுக்குப் பொருந்துதல் என்பது பொருள். "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்னும் தொல்காப்பிய நூற்பாவில், அச்சொல் அப்பொருளில் வந்திருத்தல்காணலாம். எனவே, எல்லாப்பொருள்களும் தன்பாற் பொருந்தியும், தான் எல்லாப் பொருள்களிலும் பொருந்தியும் விளக்கமுற்றுத் திகழ்பவன் எவனோ, அவனே சிவன் என்பது அவர் கொள்ளும் பொருள்.

ஊனாகி ஊனுள் உயிராய்
உயிர்தோறும் ஆகி
வானாதி யான பொருளாய்
மதியாகி வெய்யோன்
தானாகி ஆண்பெண் உருவாகிச்
சரா சரங்கள்
ஆனான் சிவன்! மற்றுஅவன்
நீள்கழற்கு அன்புசெய்வாம்!

—கந்தபுராணம்

சிவஞான சுவாமிகள்:

பிற்காலத்தில் விளங்கிய பெரும் புலவர்களுள், சிவஞான சுவாமிகள் பெரிதும் சிறப்புமிக்கவர். அவர் இயற்றியருளிய நூல்கள் பலவற்றுள், காஞ்சிப் புராணம் என்பது கவிதைச் சுவை நிரம்பிய கவின்மிகு நூலாகும். அதன்கண் 'சிவன்' என்னும் சொல்லுக்கு மங்கல குணத்தன் என்றும், அநாதியே மலம் நீங்கி நிற்பவன் என்றும் பொருள் கொண்டு, பின் வருமாறு பாடுகின்றார்,

குறைவிலா மங்கல குணத்தன் ஆகலின்
நிறைமலம் அநாதியே நீங்கி நிற்றலின்
அறைகுவர் சிவன்என அறிவின் மேலவர்!
இறையவன் பெருமையை யாவர் கூறுவார்

—காஞ்சிப் புராணம்

மாக்ஸ் முல்லர்:

இனி, இச் சிவன் எனும் இனிய சொல்லைக் குறித்து, வேறு சில இனிய கருத்துக்களையும் அறிஞர்கள் கூறுவர். பேராசிரியர் மாக்ஸ்முல்லர் அவர்கள், * முழுமுதற்பரம் பொருளைக் குறிப்பதற்கு உருத்திரன்-அரன்-சிவன் எனும் சொற்கள்தாம், பிரம்மம் - ஆத்மா - பரமாத்மா என்னும் சொற்களைவிடப் பழமையாக வழங்கி வரப் பெற்றுள்ளன என்றும், பிரம்மம்-ஆத்மா-பரமாத்மா முதலிய சொற்கள் முழுமுதற் பரம் பொருள் ஆகிய கடவுளைக் குறிப்பனவாக இருக்கு வேதத்தில் யாண்டும் பயின்று வரவில்லை என்றும், ஆராய்ந்து கூறுகின்றார். இஃது எங்ஙனமாயினும், சிவன் என்னும் சொல்லின் பழமையை அவர் உடன்படுகின்றார் என்பதொன்றே, ஈண்டு நமக்குப் போதியதாகும்.

---

* "Prof. Maxmuller has shown the use of such words as **Rudra, Hara, Siva** to denote the Highest God, is much more earlier than the use of such words as Brahman, Atman and Paramatman; and, in fact, these words do not occur in the Rig veda at all, to denote the Highest God."

—**J.M. Nallaswami Pillai**, B.A., B.L.,
Studies in Saiva Siddhantha, p. 4.

அன்பே சிவம் :

இனி, சிவம் எனும் சொல்லுக்குத் திருமூலர் அன்பு என்று பொருள் கொண்டிருப்பது யாவரும் அறிந்தது. கடவுளைப் பற்றி அவரவர்கள் தத்தம் கருத்து வகைக்கு ஏற்ப, வெவ்வேறு பலவகையான விளக்கங்களைக் கூறுவார்களாயினும்,

"அன்பும் சிவமும்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே"

—திருமந்திரம்.

எனக்கடவுளை அன்புருவினனாகத் திருமூலர் கூறியிருப்பது, பெரிதும் பாராட்டி மகிழற்பாலதாகும். கடவுளை அன்பு வடிவினனாகக் கருதுவதினும் மேற்பட்ட சிறந்ததொரு கொள்கை, வேறு பிறிதொன்றில்லை. மிகச் சிறந்த பெரிய விஞ்ஞான மேதைகளும் கூட, வியந்து புகழ்ந்து போற்றத் தகுந்த நல்ல கொள்கை அது! *

முடிவுரை :

இங்ஙனம் சிறந்த பல பொருள் நலங்கள் பொதிந்துள்ள சிவன் எனும் நாமத்தின் சிறப்பினை யுணர்ந்து, அத்திருப் பெயருடைய பெருமானை நாம் நம் மனமொழி மெய்களால், "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினை, என்றும் சிவன் தாள் இணை" என்ற படி அன்புடன் சிந்தித்து வந்தித்து, வையத்து வாழ்வாங்கு வாழத் தலைப்பட்டு, உய்ய முயலுவோமாக!

* "The highest and best conception that we can ever reach of God, describing as it does, His inmost nature, and of course the only way we can know Him, is that God is Love and Blessedness, Sivam.

And such a great scientist as the late **Prof. Romanes** has asked with truth: what has all the science or all the philosophy of the world done for the thought of mankind to be compared with one doctrine, 'God is Love'?"

— **J. M. Nallaswami Pillai**, B.A., B.L., Studies in Saiva Siddhantha, p. 239.

இறைபணியாளர் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்ட இடம்
திரு. B. பத்மநாபன்,	ஸ்ரீ தான்தோன்றீசுவரர் கோயில், சோழம் பேட்டை.	ஸ்ரீ மணவாளேசுவரர் கோயில், திருவேள்விகுடி.
திரு. S. வேணுகோபால்	ஸ்ரீ மணவாளேசுவரர் கோயில், திருவேள்விகுடி.	ஸ்ரீ நீலகண்ட பிள்ளையார் முதலிய கோயில்கள், ஏந்தல்.
திரு. G. பாலகிருஷ்ணன்	புதியதாக நியமிக்கப் பட்டவர்	ஸ்ரீ ஜகந்நாதப் பெருமாள், திருமழிசை ஆழ்வார் கோயில், திருமழிசை.
திரு. A. A. வெங்கடாசலம்	ஸ்ரீ வெங்கடாசலபதி சுவாமி கோயில், ஒப்பிலியப்பன் கோயில்.	ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள், திரு நாராயண புரம், ஸ்ரீ அனலாடீஸ்வரர் கோயில், தொட்டியம்.
திரு. S. தங்கவேலு	ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் கோயில், கும்பகோணம்.	ஸ்ரீ மதன கோபாலசுவாமி கோயில், பெரம்பலூர்.

இன்னுயிர் மன்னும் புனிதன்

'பாலகவி' வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் (தத்புருஷ தேசிகர்) அவர்கள்,
தேவகோட்டை.

பரமபதியாகிய சிவபெருமானது இயல்புகளை எடுத்துக்கூற முயன்றிட்ட வேதங்களுங் கூட, அதில் முழுநிறைவான வெற்றிபெற மாட்டா தனவாயின. "வேதங்கள், ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே" என்பது திருவாசகம். "அல்லை ஈதல்லை ஈதென மறைகளும் அன்மைச், சொல்லினுற்றுதித் திளைக்குமிச் சுந்தர நாடன்" என்பார் பரஞ்சோதி முனிவர். இறைவனது படைப்புக்கு உட்பட்டுத் தோன்றிக் காணப் பெறுகின்ற இவ்வுலகத்தின் இயல்பையும், இதேனுடு தொடர்பு கொண்டு வாழ்ந்து வருகின்ற உயிர்களின் இயல்பையுங் கூட, முற்ற முடியக் கண்டு கூறியவர்களாக உலகப் பேரறிஞர்களில் ஒருவரையும், இது வரை நாம் கண்டதில்லை.

புறக் கண்ணுக்குப் புலப்படத் தோன்றாத கடவுள், நமது அகக் கண்ணுக்கும் அப்பாற் பட்டவராகவே இருக்கிறார். கண்ணுக்கும் கருத்துக்கும் அப்பாற் பட்டிருக்கும் கடவுளை அவரது திருவருள் நம்முடன் கூடிக் காட்டினாலன்றி, நாம் ஒரு போதும் காணமுடியாது.

"காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே"

என்பது அப்பரடிகள் திருவாக்கு. உலகத்திலுள்ள பொருள்களைப் பார்ப்பதற்குரிய கருவியாய் இருக்கிற கண்ணோடு, மனமும் கூடிக் கண்டாலன்றிப் பொருள்கள் புலப் படமாட்டா. அதுபோல உயிர்களாகிய நம்மோடு, கடவுளும் கூடிக் கண்டாலன்றி, நாம் எதனையும் காணுமாறில்லை என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

காணும் கண்ணுக்குக் காட்டும் உள்ளம்போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்"

என்பது சிவஞான போதம்.

இறைவனது இயல்பு இருவகைப் பட்டது. ஒன்று; உலகுயிர்களைக் கடந்த அவனது சொரூப இயல்பு. மற்றொன்று; உலகுயிர்களோடு கலந்த அவனது தடத்த இயல்பு. இவ்விரண்டனுள் முன்னையது, எவ்வாற்றானும் ஆன்ம போதத்திற்குப் பொருளாகாது அப்பாற் பட்டிருப்பது. பின்னையது வேதாகமங்களாலும், அருளாசிரியர்களது திருவாக்குகளாலும் ஆன்ம போதத்திற்கு ஒருவாறு பொருளாகி நிற்பது.

திருக்கயிலாயச் சித்தராகிய திருமூல தேவநாயனார் திருமந்திரத்துக் கடவுள் வாழ்த்தில் இறைவனது தடத்த இயல்பைக் கூற முற்பட்டு,

" போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனும்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே"

என்ற செய்யுளை அருளிச் செய்திருக்கின்றார். சித்தும் சடமுமாகக் காணப்பெறுகின்ற எல்லாப் பொருள்களிலும் கடவுள் நிறைந்திருக்கிறார். அவர் இல்லாத இடமே இல்லை.

"அங்கிங் கெனாதபடி எங்கும்பிர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி, அருளொடு நிறைந்தது
தெது"

என்பது தாயுமான அடிகள் திருவாக்கு. மேலும் அவர்,

"பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே"

என்றும் கூறுவார். சித்துப் பொருள்கள் அனைத்திலும் கடவுள் கலந்து நிறைந்திருக்கிறார்.

சடப் பொருள்கள் எல்லாவற்றிலும் அவர் புகுந்து நிறைந்திருக்கிறார். இதனை "ஊனுருடல் புகுந்தானுயிர் கலந்தான்" என்னுந் திருவாசகம் அறிவிக்கின்றது. இங்ஙனம் எல்லாப் பொருள்களிலும் கலந்திருக்கும் இறைவன் அவையனைத்திலும் வெளிப்பட்டு விளங்குவது இல்லை. விறகில் தீயும், பாலில் நெய்யும், மணியில் ஒளியும் போல அப் பொருள்களில் அவன் மறைந்தே நிறைந்திருக்கின்றான். என்றாலும் அவனுடைய நிறைவு, மறைப்பின்றி வெளிப்பட்டு விளங்குவது, இரண்டு இடங்களில் என்று ஆன்றோர் கூறுவர்.

> "தாபர சங்கமங்க ளென்றிரண் டுருவில் நின்று
> மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க் கருளை
> வைப்பன்"

என்பது சிவஞான சித்தியார்.

சித்தும் சடமுமாகிய இரண்டும் தாபர சங்கமமென்னும் இரண்டு வகைகளில் அடங்கும். தாபரம் நிலை இயல்புடையது. சங்கமம்: இயங்கியலையுடையது. தாபரமாவது திருக்கோயிலும் அதிலுள்ள திருவுருவங்கள் முதலியனவும் எனவும், சங்கமம் என்பது மெய்யடியார்களும் ஞானாசிரியர்களும் எனவும் நூல்கள் கூறும். பிற இடங்களில் மறைந்து நிறைந்திருக்கின்ற ஆண்டவன், தாபரங்களாகிய சிவாலயம் முதலியவற்றிலும், சங்கமங்களாகிய மெய்யடியார் முதலியோர் இடத்திலும், பசுவினுடைய உடம்பு முழுதும் தங்கி மறைந்திருக்கின்ற பால், அதனுடைய முலைக் காம்பு வழியாக வெளிப்பட்டுத் தோன்றிப் புலப்படுவது போன்று, தோன்றி நின்று அருள் செய்வான்.

இம்மையிலும் அம்மையிலும் இறைவன் செய்யும் உதவிகளைப் பெறுவதற்கு அருகதையுடையவர்கள், சித்துப் பொருள்களாகிய உயிர்களே யாவார்கள். சடப் பொருள்களில் ஆண்டவன் கலந்திருப்பதும், சித்துப் பொருள்களாகிய உயிர்களுக்குப் போகத்தை வழங்குவதற்கே யாகும். சித்தென்னும் இனவகையால் தன்னொடொத்த சங்கமர்களிடத்திலும் பல்லாற்றானும் தன்னோடொவ்வாத சடமாகிய திருக்கோயில் ஆதியவற்றினிடத்திலும் அடங்கி நிறைந்திருக்கின்ற தனது இயல்பை, இறைவன் வெளிப்படுத்திப் புலப்படுத்தியருளுவது, அது கொண்டு பயன் பெறுதற்குரிய பக்குவம் பெற்ற உயிர்களின் பொருட்டே ஆகும்.

தடத்த நிலையில் அருவம், அருவுருவம், உருவம் ஆகியமூவகை வடிவங்களில் ஒன்றைமேற்கொண்டு, பழையதும் புதியதுமான பலவகைத் திருமேனிகளுடன் வெளிப்பட்டு இறைவன் பக்குவான்மாவுக்கு அருளை வழங்குவான். அங்ஙனம் அவன் கொள்ளுகின்ற திருவுருவங்கள் இப்படிப்பட்டவை, இன்ன நிறத்தவை, இன்ன வண்ணத்தவை என்று யாராலும் அறுதியிட்டுச் சொல்லமுடியாதபடி, எண்ணற்றனவாய் இருக்கும். இதனைச் சிவஞான சித்தியார் "அரன் தருஞ்சீர் நிலையெல்லாம்" என்று இறுதிப் பாடலில் உரைத்தது.

இந்த நிலவுலகத்தில் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் உடையவர்களாய், மனித உடல் கொண்டு பிறந்து வாழ்ந்து வருகின்ற நமக்கு, நம் போன்ற மனித உடம்பில் வெளிப்பட்டு நின்றே, ஆண்டவன் அருளைப் புரிகின்றான். மக்களினத்தவரில் பெருந்தகுதியுடைய சிலரைப், புதிதாகத் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து ஆண்டருளுவதும், அவரில் பெரும்பாலோரைப், பிறந்துள்ள மக்களில் தக்கவர்களை அதிட்டித்து நின்று ஆண்டருளுவதும் ஆகிய இரண்டு முறைகளை, இறைவன் மேற்கொள்ளுகின்றானென்பது வரலாற்று நூல்களில் காணப் பெறுகின்ற உண்மையாகும்.

எங்கும் மறைந்து நிறைந்திருக்கின்ற இறைவன், தம்மில் வெளிப்பட்டு விளங்கும்படி வாழ்கின்ற சான்றோர்கள், அதற்குரிய நெறிமுறைகளை வழுவில்லாது கடைப்பிடித்து ஒழுகிச், சீவ போதங் கழன்ற சிவ ஞானியராய் இருப்பார்கள். அவர்களது உயிர்க்கும், மற்றையோரது உயிருக்கும் இனவகையால் ஒற்றுமை யிருந்தாலும், நிலைவகையில் பெரிதும் வேற்றுமை உண்டு. அது சீவனாயினும் சிவனே ஆனது. மற்ற உயிர்கள் எல்லாம், மும்மல அழுக்கால் குற்றமுடையனவாயிருக்க, அந்த நல்லுயிர் எம்மல அழுக்குமின்றித் தூய்மையாயிருப்பது. இயற்கையாகவே பாசபந்தங்களில் நீங்கிய புனிதனாகிய இறைவன் செயற்கையினால் அவை நீங்கப் பெற்ற புனிதராகிய சிவஞானியரது நல்லுயிரை இடமாகக் கொண்டு நிலை பெறுகின்றான். சங்க

மர்கள் போற்றி இசைத்தவர்க ளென்பதும், அதனுல் அவர்களது உயிர் இன்னுயிராய தென்பதும், அதுபற்றியே புனிதனுகிய இறைவன் அவ்வுயிரிடமாகி நின்று வெளிப்படுகின்ருனென்பதும் உணரத்தக்கனவாம்.

"போற்றி இசைத்தல்" என்பது, இறைவன் ஆண்டான் எனவும், உயிர்கள் அவனது அடிமைகள் எனவும் உணர்ந்து, மேல் ஒன்றில்லாத அவனது திருவடியையே பற்றுக் கோடாகப் பற்றி நின்று துதித்தல். இவ்வாறு துதிக்கும் உணர்வு, யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடைய இறைவன், பேரறிவும் பேராற்றலும் பெருங் கருணையும் உடையவனுயிருத்தல் பற்றி, யாவர்க்கும் கீழான உயிர்களை நற்கதியில் நிறுத்துதற்குரிய அருளிப்பாடுகளை, இடையீடின்றிச் செய்து வருகின்ருனென்பதை நன்கு தெளிந்தார்க்கன்றி, மற்றையோர்க்கு வாராது. அத்தெளிவு ஞான நூல்களைக் கற்பதன் வாயிலாகவே வந்து பொருந்தும்.

"கலைஞானம்" அல்லது "அபரஞானம்" என்று சொல்லப் பெறுகிற, அந்த நூலறிவு ஒன்றை மட்டும் துணையாகக் கொண்டு, இறைவனையோ, அவனது இயல்புகளையோ அறிய முற்படுவது பொருந்தாததாகும். இறைவனது திருவருள் ஞானம், உயிர்களுக்குப் பக்குவம் வருகிற வேளையில், அவற்றின் கலையறிவோடு ஒன்றிக் கலந்து, அவ்வான்ம அறிவை அடிப்படுத்தி வைத்து, மேல் எழுந்து நிற்கும். அங்ஙனம் சீவபோதம் மடங்கிச் சிவ போதம் மேலெழுந்த நிலையிலேயே, மெய்ஞ்ஞான மென்றும், பரஞான மென்றும் சொல்லப் பெறுகிற மேலான அறிவை உடையவர்களாக, ஆன்மாக்கள் ஆகின்ருர்கள். அத்தகைய மேலான தகுதியுடைய சிவஞானிகளே இறைவனைக் காணவும், இறைவன் இயல்பை அறியவும், இறைவன் தம்பால் வெளிப்பட்டு விளங்கவும் தகுதிபடைத்த சான்ருேர்களாய் இருப்பார்கள். அவர்களது இன்னுயிரை இடமாகக் கொண்டு விளங்குவான் இறைவன். இதனையே "போற்றி இசைத்த இன்னுயிர் மன்னும் புனிதனை" என்று ஆசிரியர் திருமூலதேவ நாயனுர் இத் திருமந்திரத்தின் முதல் வரியில் புலப்படுத்தி அருளினுர்.

சிவபெருமானுடைய திருப் பெயர்களுள் "பாசத் தொடர்புடைய உயிர்களுக்குத் தலைவன்" என்னும் பொருளையுடைய "பசுபதி" என்பதும் ஒன்று. உயிர்கள் இரண்டு வகையின. பாசத் தொடர்புடையவை ஒருவகை. பாசம் நீங்கி முத்தி பெற்றவை மற்ருெருவகை. பாசத் தொடர்புடைய உயிர்களைப் "பசுக்கள்" என்றும் முத்திபெற்ற உயிர்களை 'ஆன்மாக்கள்' என்றும் சொல்வது சைவசாத்திர மரபு. அது போலவே பசுக்களின் உய்தி கருதி ஐந்தொழில்களைச் செய்கின்ற தடத்த நிலையில் "பதி" என்றும், அனைத்தையும் விட்டுத் தனித்திருக்கின்ற சொரூப நிலையில் "சிவம்" என்றும் கடவுள் குறிக்கப் பெறுகிருர். பசுக்கள் பாசநீக்கமுற்றுச் சிவப் பேறடைவதற்குத் துணை செய்வது, இறைவனது திருவருள். அத் திருவருளைச் சத்தியென்றும், உமாதேவியாகிய அம்மை என்றும் வேதாகமங்கள் கூறும்.

இறையாகிய சிவமும், அருளாகிய சத்தியும் நெருப்பும் சூடும் போல, ஒன்றினென்று பிரியாதிருப்பவை. நெருப்பு இருந்த இடத்திலேயே இருக்க; அதன் சூடு வெளிப்பட்டுப் பரவுவதைப் பார்க்கிருேம். அது போலச்சிவம் எங்கும் நிறைந்து அடங்கியிருக்க; அவரது சத்தி புறத்தே வெளிப்பட்டு உயிர்களுக்கு உய்தி உண்டாதற்குத் தொழில் செய்யும். தம் முள்ளும் புறத்திலும் நிறைந்திருக்கின்ற இறைவனைப், பாசத் தொடர்பினுல் காணமுடியாதனவாய், உயிர்கள் அலமருகின்றன. பிள்ளைகளாகிய உயிர்களின் துன்பங்கண்டு, அன்னையாகிய அருட்சத்தி பொறுத்துக் கொண்டிருப்பாளா? இருக்க வேண்டிய மேலான நல்லிடத்தை விட்டுக், கெட்ட சேர்க்கையால் கீழிறங்கி வாடுகின்ற மக்களுக்கு, நல்லறிவு கொளுத்தி உண்மையுணர்த்த அவள் முற்படுவாளல்லவா ?

அங்ஙனம் அவள் புரியும் கருணையின் வினைவாகவே, ஆன்மாக்கள் தம்மையும் தலைவனையும் உணரத் தலைப்படுகிருர்கள். உலகியலிலுங் கூடத் தாய் காட்டத்தானே தந்தையை அறிகின்ருேம்? தாயாகிய திருவருள் அழைத்துச் சென்று தந்தையாகிய சிவத்தைக் காட்ட, அச்சிவத்துடன் கூடி அத்துவிதமாகக் கலந்திருப்பதே முத்தி என்று சொல்லப் பெறுவது. இக் குறிப்பை,

"தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடியத்
தாயைமறந்
தேயு மதே நிட்டை"

என்ற ஆன்ருேர் திருவாக்கு நன்கு புலப்படுத்தும். நாம் உலக போகங்களை நுகருவதற்கும், சிவபோகத்தை நுகருதற்கும், சிவசத்தியாகிய திருவருள் ஒன்றே துணை செய்கின்றது. அச் சிவசக்தி, உலக போகத்தை ஊட்டும் போது "திரோதானசத்தி" யென்றும், சிவபோகத்தை

ஊட்டும் போது "அருட்சக்தி" என்றும் அழைக்கப் பெறுகின்றது.

ஆன்மாக்கள் எண்ணில்லாதன. எல்லா இடங்களிலும் நிறைந்திருப்பன. பருமையும் நுண்மையுமாகிய பலவகை உடம்புகளைக் கொண்டு, அவற்றின் இயக்கம் கட்புலனுக்குப் பொருளாகின்ற நிலையிலும் ஆகாத நிலையிலுமாக நாற்றிசைகளிலும், நிலத்திலும், வானத்திலும் கணக்கிட முடியாத உயிர்கள் வாழ்ந்து வருகின்றன. இவ்வுயிர்கள் அனைத்தும் பாசத் தொடர்புடையனவே. இவைகள் எல்லாவற்றையும் தனது திருவருட் சக்தியின் துணை கொண்டு இம்மையிலும், அம்மையிலும் வாழ வைப்பவன், இறைவனாகிய சிவபெருமான். இதனை அறிவிக்கவே ஆசிரியர் திருமூலதேவ நாயனார் "நாற்றிசைக்கும் நல்ல மாதுக்கும் நாதனை" என்று கூறியருளினர்.

"நாற்றிசை" இடவாகு பெயராய் அங்கு வாழும் உயிர்களைக் குறித்து "மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாத தனையும் முட்டின்றி முடித்தல்" என்னும் உத்தியால் நாற்றிசைகூறவே அவற்றோடு தொடர்புடைய மண்ணும், விண்ணும் கூறப் பெற்றனவாயின. நல்லமாதுக்கு நாதனாயிருந்து புரியும் கருணையே, நாற்றிசை உயிர்களுக்கும் நாதனாய் இருந்து இன்பம் வழங்குவதாதலின், இவ்விரு தலைமைத் தன்மையையும் ஒன்று படுத்தி, ஆசிரியர் இங்கே உரைப்பாராயினர். "உமாபதயே பசுபதயே நம:" என்று உபநிடதத்தில் வரும் சொற்றொடரும், இங்கே நினைவு கூரத்தக்கதாகும். இறைவன் பசுபதியாயிருக்கின்றானென்பதை 'நாற்றிசைக்கும் நாதன்' என்பதனாலும், அவனது திரோதான சத்தித்தலைமையை 'மாதுக்கு நாதன்' என்பதனாலும், அருட்சத்தித் தலைமையை 'நல்லமாதுக்கு நாதன்' என்பதனாலும் இங்கே ஆசிரியர் உணர வைத்துள்ளார்.

சிவபெருமான், பரம்பொருளாந் தன்மையைக் குறிக்கின்ற பழைய வரலாறுகள் பலவற்றுள், இயமனை உதைத்ததும் ஒன்று. இறைவனது அதிகார சத்தியைப் பெற்று எல்லா உயிர்களுக்கும் இறுதியைச் செய்கின்றவன் இயமன். படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களுள் தனக்கே உரியதாகிய "அழித்தல்" தொழிலைச் சிவபெருமான், இயமனுக்கு வழங்கி, அவன் வழியாக உயிர்கள் அத் தொழிலுக்கு உட்படுமாறு செய்துள்ளார். அத்தகைய பெருந் தொழிலுக்கு உரிமையாளனாக இருக்கின்ற இயமனும், ஒரு காலத்தில் ஆண்டவனது உதைக்கு ஆளாகி இருந்தான். எல்லார்க்கும் காலனாக வரும் இயமனுக்கு, இறைவன் காலனாக இருந்து முடிவை உண்டாக்கினான்.

சிவபெருமானது நூற்றெட்டு அர்ச்சனைத் திருநாமங்களுள் "கால காலாய நம:" என்பதும் ஒன்று. சிவனடியார்கள் அல்லாத மற்ற எல்லோரும், இறுதியில் இயமன் கைப் படுபவர்களே! அவர்களை அவன் அழைத்துச் செல்லுவது, அவன் இருக்கின்ற தெற்குத் திசைக்கென்றும், சிவனடியார்கள் மட்டும் சிவ கணங்களால் சிவபெருமானிருக்கும் வடக்குத் திசைக்கு, வந்தனை வழிபாடுகளுடன் அழைத்துச்செல்லப் பெறுவார்களென்றும் நூல்கள் கூறுகின்றன. "சிவனடியார்களை விட்டு நெடுந்தூரம் விலகிச் செல்லுதல் வேண்டும்" என்று இயமன் தனது தூதுவர்களுக்குக் கட்டளை இடுவான் என்பதை,

"தொழூநு நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன்—பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால் பணிந்தகலப் போமின்கள்
எத்தனையும் சேய்த்தாக என்று"

என்ற பதினோராந் திருமுறை அறிவிக்கின்றது.

கிராம நிர்மாணத்தில் "மயானபூமி" கிராமத்தின் தெற்கே இருக்க வேண்டுமென்று விதி இருப்பதும், அங்ஙனமே பெரும்பாலான கிராமங்களில் அது அமைந்திருப்பதும், மக்களிற் பெரும்பாலோர், இறுதியில் தெற்குத்திசை நோக்கிச் செல்பவர்களே என்பதைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. அனைத்துயிர்களுக்கும் இறுதியாங் காலத்தைச் செய்யும் இயமனுக்கும், அவ்விறுதியாங் காலத்தைச் சிவபெருமான் செய்தாரென்றால், அவரது வரம்பிலாற்றலுக்கு இதைவிட வேறு சான்றும் வேண்டுமோ? இத் திரு மந்திரத்தில் "மேற்றிசை" என்பது உயிர்களின் இறுதிக் காலம் ஆகிய, மேல் வரும் காலத்துச் செல்லும் திசைகளான, வடக்குத் தெற்குத் திசைகளைக் குறித்தது. அத் திசைகளுள் ஒன்றாகிய, தென் திசைக்கு வேந்தனை கூற்றை உதைத்தவனை, யான் கூறுகின்றேனென்று சொல்லிக், காலகாலனைச் சிந்திப்போர்க்கு, முடிவில் வடதிசை வாழ்வாகிய முத்தி சித்திக்கும் என்பதை, இத் திரு மந்திரத்தின் இறுதிப் பகுதியில் ஆசிரியர் திருமூலதேவ நாயனார் குறிப்பால் உணர வைத்துள்ளார். ★

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A.,B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இராமநுசரும் அருகில் இருந்த சன்னிதி முதலிகளைப் பார்த்து "ஆண்டான் நம்பி ஸன்னிதியில் ஸ்வரூபசிக்ஷை பெற்றுவந்த வேஷமிருந்தபடியைக் கண்டீர்களோ? என்று கூறி ஆண்டானை முடிபிடித்து எடுத்துச் சென்ற காரியம் என்னவாயிற்று? என்று கேட்டார். ஆண்டானும் நம்பி ஸன்னிதியில் நடந்த வற்றையெல்லாம் ஒன்றும் ஒழியாது உரைத்து வணங்கி நின்றார். உடையவரும் மிகவும் உகந்து ஆண்டானுக்கும் சரமச்லோகார்த் தத்தை அருளி, "இப்போதன்றோ நமக்கும் தண்டும் பவித்திரமும் கைபுகுந்தது!" என்று கூறி உளம் மகிழ்ந்தார்.

இது நடந்த சில நாளிலே திருக்கோட்டி யூர் நம்பிகள் திருவரங்கம் எழுந்தருளினார். அங்கே நம்பெருமாளைக் கண்குளிர சேவித்துத் திரும்பியவர் திருமாலை ஆண்டான் என்ற ஆசாரியரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு எம்பெருமானார் மடத்துக்கு எழுந் தருளினார். எம்பெருமானாரும் இந்த எதிர் பாராப்பேறுகிற ஆசார்ய தர்சனத்துக்கு மகிழ்ந்து நம்பிகளையும், திருமாலையாண்டானை யும் தெண்டனிட்டு நின்றார். திருக்கோட்டியூர் நம்பிகள் அவரை நோக்கி "எம்பெருமானாரே! நீர் இதுமுதல் திருமாலையாண்டானிடம் திரு வாய் மொழிக்கு அர்த்தம் கேளும்" என்று கூறி ஆண்டானிடமும் எம்பெருமானாருக்கு அவ்வர்த்தம் கூறுமாறுரைத்து எம்பெரு மானாரை ஆண்டான் கையில் ஒப்புவித்துக் கோட்டியூருக்கு எழுந்தருளினார்.

நம்பிகள் கட்டளைப்படி திருமாலையாண் டான் எம்பெருமானாருக்குத் திருவாய்மொழி அர்த்தம் கூறிக்கொண்டு வந்தார். அவ்விதம் கூறிக்கொண்டு வரும்போதே எம்பெருமானார் பல பாசுரங்களில் வேறு சில அர்த்தவிசேஷங் களைக் கூற ஆண்டான் "ஸ்ரீ ஆளவந்தார் நீர் சொல்வதுபோலச் சொல்லக் கேட்டிலோம்." என்று கூறி அவற்றை ஏற்காமலும் உதாசீனம் செய்யாமலும் கழித்து வந்தார். அவர் உள்ளத்தே நம்மிடம் கற்க வந்தவர் நம் ஆசார்யர் கூறாத வேறுபொருள் கூறி வருவதா? என்று ஒரு தவறான எண்ணம் தோன்றி வளர்ந்து கொண்டே வந்தது. இப்படி நடந்து வருகையில் திருவாய் மொழியில்,

> "அறியாக் காலத்துள்ளே அடிமைக்
> கண் அன்பு செய்வித்து
> அறியாத மாமாயத்து
> அடியேனை வைத்தாயால்"

என்றவிடம் வந்தது. திருமாலையாண்டான் இப் பாசுரத்தைக் கிடந்த கிடையிலே அந் வயித்து "அறிவு நடையாடாத தசையிலே சம்பந்த ஞானத்தைப் பிறப்பித்து, அப்படிப் பிறந்த ஞானத்தை அழிக்கக்கடவதான தேக சம்பந்தத்தோடே பின்னையும் வைத்தாய் என் கிற இழவாலே ஆழ்வார் அருளிச் செய்கிறார்" என்று உரை கூறினார். இராமாநுசர் இதனைக் கேட்டருளி திருமாலையாண்டானை வணங்கி "ஸ்வாமீ! சீற்றம் படலாகாது. இப் பாசுரம் வரும் பதிகத்தில் இதற்கு முன்னுள்ள பாசுரங் களும் பின்வரும் பாசுரங்களும் பெரிய ப்ரீதியோடு நடவா நிற்கின்றபோது நடுவுள்ள இப் பாசுரத்துக்கு அவ்வன்பு நிலைக்குமாறாக இறைவன் கருணை சோர்ந்ததுபோலப் பொரு ளுரைத்தல் சேருமா? அதனால் இப்பாசுரத்துக்கு

"அறியாமாமாயத்து அடியேனை அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாயால்" என்று அந்வயம் கொண்டு, ஒன்றுமே அறியாச் சூன்யமாக யானிருந்த காலத்திலேயே நீ சம்பந்த ஞானத்தைத் தோற்றுவித்தாயே உன் கருணை தான் என்னே! என்று பொருள்கொண்டு, பெருமாள் அவருக்குச் செய்த பேருபகாரத்துக்கு நன்றியுணர்வோடு கூறுவதே பொருத்தமுடையதன்றோ!" என்று விண்ணபித்தார். திருமாலையாண்டான் உள்ளத்தே தோன்றி வளர்ந்துவந்த எண்ணம் உச்சநிலை எய்தியது. அவர் இராமாநுசரை நோக்கி "இது விசுவாமித்திர சிருஷ்டி போலல்லவா? இருக்கிறது. ஆளவந்தார் இவ்விதம் பொருளுரைக்க நாம் கேட்டறியோம். நீர் இவ்விதம் உமதிஷ்டம் போல் பொருள்கொள்வதாயின் நாம் உமக்கு அர்த்தம் கூறுவானேன். இனி நீர் அர்த்தம் கேட்க வரவேண்டாம் என்று சற்றுக் கடிந்தே கூறி எழுந்துபோய் விட்டார். திருவாய் மொழி அர்த்தம் கேட்கை அப்போதைக்கு நின்று விட்டது.

இச் செய்தி திருக்கோட்டியூர் நம்பிகள் திருச் செவிக்கு மெல்ல எட்டியது. எம்பெருமானரின் உண்மைப் பெருமையை திருமாலையாண்டான் உணர்ந்திலர் என்பதை அறிந்தார். உடனே கோயிலுக்கெழுந்தருளினர். திருமாலையாண்டானைக் கண்டார். ஒன்றுமறியாதார் போன்று அவரை நோக்கி "திருவாய் மொழி அர்த்தம் எவ்வளவில் இருக்கிறது?" என்று வினவினர். ஆண்டான் சற்றுச் சுளிப்போடு "அடியேன் ஸ்ரீ ஆளவந்தார் பக்கல் கேட்ட அர்த்தங்களைக் கூறி வந்தேன். அவற்றை விட்டு உம் இராமாநுசர் வேறே சொந்தக் கற்பனைகளிலே இறங்கி உரை காண முற்பட்டார். அதனுல் அடியேன் அர்த்தங்கூறுவதை நிறுத்திவிட்டேன்" என்று விண்ணப்பம் செய்தார். நம்பிகள் விடவில்லை. "அப்படி இராமாநுசர் உமது உள்ளம் கன்றக் கூறியது தான் என்ன?" என வினவினர். ஆண்டானும் "அறியாக்காலத்துள்ளே"என்றபாசுரத்துக்குத் தாம் கூறியதைச் சொல்லி, எம்பெருமானர் இப்பாசுரத்துக்கர்த்தம் செய்ந்நன்றி கூறும் முறையிலிருக்க வேண்டும் என்று கூறினர். இது ஒன்றல்ல. இப்படிப் பலவிடங்களுண்டு. அடியேனுக்குப் பொறுக்கவில்லை. நிறுத்திவிட்டேன்" என்றுர். நம்பிகள் மிகவும் உவப்புடைய முகத்தராய் ஆண்டானைத் தழுவிக் கொண்டு 'ஆண்டானே! ஆளவந்தாரிடம் உமக்குள்ள பக்தியை மெச்சுகிறேம். எனினும் இராமாநுசர் கூறியபடி ஆளவந்தார் அருளிச் செய்ய நாம் கேட்டிருக்கிறேமே. அது சரி! ஒன்று கூறக் கேளும். திருவாய்ப் பாடியில் வளர்ந்த கண்ணன் சாந்தீபினி பக்கல் வேதாத்யயனம் பண்ணினனே அதுபோல் தான் காணும் இராமாநுசர் உம் பக்கல் திருவாய் மொழிக்கு அர்த்தம் கேட்பது என்பதை உணர்ந்துகொள்ளும். ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளத்திலே தோன்றிய அர்த்தங்களொழிய வேறென்று இவர் மனத்தே தோன்றுது என்றிரும். நீர் ஏதோ இவருக்கு அறியாதன அறிவிக்கிறதாக எண்ணுதேயும்" என்று கூற ஆண்டானும் வியப்பெய்தியவராய் நின்றுர், நம்பிகள் அவரையும் பெரிய நம்பிகளையும் கூட்டிக்கொண்டு எம்பெருமானர் மடத்துக்கு எழுந்தருளினர். எம்பெருமானரும் வியப்பும் மகிழ்ச்சியும் மேலிட அவர்களை எதிர்கொண்டு அவர்கள் திருவடிகளிலே தெண்டனிட்டு நின்றுர். நம்பிகள் ஆண்டானை நோக்கி "ஆண்டானே! திருவாய்மொழி அர்த்தத்தை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடங்கி முழுதும் எம்பெருமானருக்குக் கூறி முடியும்" என்று கூறித் தம்மூருக்கெழுந்தருளினர்.

திருவாய்மொழி அர்த்தம் மீண்டும் தொடங்கியது. முன்போன்றே மற்றேரிடத்தில் இராமாநுசர் ஆண்டான் சொன்ன அர்த்தத்தை விநயத்தோடு ஆக்ஷேபித்து "ஸ்வாமீ! இவ்விடத்துக்கு ஸ்ரீ ஆளவந்தார் தேவரீர் உரைத்தபடி பொருள் கூறியிருக்கவேமாட்டார்" என்று விண்ணப்பித்தார். ஆண்டான் வியப்புற்றுர். "இராமாநுசரே! நீர் ஸ்ரீ ஆளவந்தாரைக் கண்ணுலும் கண்டதில்லையே. அப்படியிருக்க நீர் இவ்விதம் கூறுவது எப்படி?" என்று வினவினர். இராமாநுசர் "ஸ்வாமீ! துரோணுசாரியாருக்கு ஏகலவ்யன் எப்படியோ அப்படியன்றே ஸ்ரீ ஆளவந்தாருக்கு அடியேன்!" என்று பணிவோடு பதிலுரைத்தார். பார்த்தார் ஆண்டான். நம்பிகள் தம்மிடம் கூறியதையும் நினைவுபடுத்திக் கொண்டார். "ஆஹா! இப்படியும் ஒரு திருவவதாரமா?" என வியந்தது அவருள்ளம் எழுந்தார். "எம்பெருமானரே! நாம் ஆளவந்தாரிடம் கேட்கப் பாக்கியம் பெருத அர்த்த விசேஷங்களை எல்லாம் இங்கே கேட்கப் பெற்றேம்" என்று

கூறிக்கொண்டே எம்பெருமானுர் திருவடிகளிலே தண்டனிட்டருளினர். திருவாய்மொழி அர்த்த பாடம் இம்முறையிலே பாங்காக நடந்து முற்றுப் பெற்றது. எம்பெருமானுரும் திருவாய்மொழி சாற்றி (முடிவுப் பாடல்களை வெகு விமரிசையாக ஓதி) அருளி உள்ளம் நிறைவுபெற்றவராய் எழுந்தருளியிருந்தார்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் பெரிய நம்பிகள் இராமாநுசர் மடத்துக்கெழுந்தருள அவரும் இவரை வணங்கி நின்ருர். எம்பெருமானுரை நோக்கிப் பெரிய நம்பிகள் "எம்பெருமானுரே! இன்னும் ஒரு அர்த்த விசேஷத்தை ஸ்ரீ ஆளவந்தார் உமக்காகத் திருவரங்கப் பெருமாளரையரிடம் வைத்துச் சென்றிருக்கிருர். அவரை முறையே வழிபட்டு அவ்வர்த்த விசேஷத்தையும் பெற்றுக்கொள்ளும்" என்று கூறியருளினர். இராமாநுசரும் தம் ஆசாரியன் கட்டளையை ஏற்று திருவரங்கப் பெருமாளரையர் பக்கல் சென்று அவருக்கு உகப்பாகப் பாலமுது காய்ச்சி வைத்தும், திருவத்யயன காலங்களிலே அவர் திருமேனிக்குப் பொருந்த திருமஞ்சட் காப்பு அரைத்து வைத்தும் பணிவிடைசெய்துகொண்டிருந்தார். ஆறு மாதங்கள் சென்றன. ஒரு நாள் அவர் வைத்திருந்த மஞ்சட்காப்பு நன்கு அரைபடாமல் அரையர் திருமேனியில் பூசும்போது உறுத்தியதை அவர் திருமுகச் சுளிப்பால் உணர்ந்து, அதனை நீக்கி உடனே அவர் திருமேனிக்குப் பாங்காக மஞ்சள் காப்பரைத்துச் சமர்ப்பித்து அவரை நீராடப் பண்ணியருளினுர். அரையரும் இராமாநுசரை உள்ள மகிழ்வோடு குளிர நோக்கி "நம்மிடம் உள்ளவற்றை யெல்லாம் கொள்ளவோ நீர் இப்படிப் பணிவிடை செய்கிறீர்? என்று செல்லமாகக் கூறி அவரை நோக்கி "எம்பெருமானுரே! உமக்கு ஒரு சரம புருஷார்த்தம் (முடிவில் பற்றும் பொருள்) சொல்வோம் கேளும் என்று விநயமாக நின்ற எம்பெருமானுரை நோக்கி,

"குருவே பரம் பொருள்
குருவே உயர் தனம்
குருவே விழை பொருள்
குருவே உயர் மறை
குருவே உயர் கலை
குருவே உயர் கதி"

குருவை அதனுல் குறுகிப் பணிந்து
குருஉளம் உவப்பக் கூடுதி பணியே

எனப் பொருள்படும் வசனங்களைக் கூறி,

'குருவே உலகில் அரியின் தடமா
குருவமிதி லையமில்லை ஓர்'

என்றும்

"பீதக வாடைப் பிரானுர் பிரம குருவாய் வந்து" என்றும் சொல்கிறபடியே நம்மைத் தீமனம் கொடுத்தும், மருவித்தொழும் மனமே தந்தும், அறியாத அறிவித்தும் நம்மைப் பேணும் ஆசாரியனையே பற்றும் துணையாகவும் பற்றப்படு பொருளாகவும் உள்ளத்தே நம்பி அவரை உறங்கும் பெருமாளே உலாவும் பெருமாளாய் வந்திருப்பதாகப் பேணக் கடவீர் என்று பஞ்சமோபாய நிஷ்டையான சரம புருஷார்த்தத்தை வழங்கியருளினுர்.

இங்ஙனம் ஆளவந்தார் தம் அந்திம காலத்திலே முதலிகளிடம் கூறிப்போந்த ஐந்தில் நான்கு நிறைவேறியது. பெரிய நம்பிகளிடம் சமாச்ரயணம் செய்துகொண்டு, திருக்கோட்டியூர் நம்பிகளிடம் சரமச்லோகார்த்தம் கேட்டு, திருமாலையாண்டானிடம் பகவத் விஷயம் (திருவாய்மொழி அர்த்தம்) கேட்டு, திருவரங்கப் பெருமாளரையரால் நம்பெருமாளை நன்கு அனுபவித்து ஸேவித்து அவரிடமே பஞ்சமோபாய நிஷ்டையும் பெற்று மிகுந்த மகிழ்ச்சியோடு இராமாநுசர் எழுந்தருளியிருந்தார்.

இங்ஙனம் உபய விபூதி நாயகத்துவமும் (விண்ணுக்கும் மண்ணுக்கும் தலைமை) பெற்றவராய் மேன்மையும் புகழும் பெற்றவராயிருந்தும் எம்பெருமானுர் தம் தேக யாத்திரையைப் போக போக்கியங்களிலே வளர்த்தாரில்லை. தினமும் திருப்பாவைஜீயர் என்று தாம் பெற்ற பெயருக்கேற்ப, திருப்பாவையை ஓதியவராய் வீதியில் சென்று ஏதேனும் ஏழு வீடுகளில் இடப்படும் அமுதுபடியைக் கொண்டே வாழ்ந்து வந்தார்.

அக்காலத்தே மேல் நாடுகளில் வானம் பொய்க்கவே பஞ்சம் தாண்டவமாடத் தொடங்கியது. அப்பஞ்சம் பொறுக்காமல் கொங்கு நாட்டில் கொள்ளைக்களம் (கொள்ளேகால்)

என்ற ஊரின் அந்தணர் தெரு வாசியான சுமதி என்ற ஒரு அம்மையார் தானும் தன் கணவருமாகத் திருவரங்கத்துக்கு வந்து வாழ்ந்து வந்தாள், வந்தவள் தினமும் மாதுகரம் பண்ணிப் போகும் எம்பெருமானரைக் கவனித்து வந்தாள். அவருடைய ஒளி பொருந்திய தேககாந்தி அவ்வம்மையாரை வியப்பில் ஆழ்த்தியது. இப்படி தேஜஸ்வியான ஒருவர் இவ்விதம் பிக்ஷையெடுத்தே ஜீவிப்பானேன் என்று தன்னுள்ளே கருதலானாள். அவள் விசாரணையில் அம்மகான் திருவடிகளிலே அரசர் முதலானாரும் வணங்கித் தொண்டாற்றி வரும் செய்தியும் அவளுக்கெட்டியது. அவளும் கண்டுள்ளாள். இப்படிப்பட்டவர் யாசகம் செய்வானேன் என்று தன்னில்தானே வினவி ஒரு விடைகாண இயலாதவளாய்க் கடைசியில் அவரையே நேரில் கேட்பது என்ற முடிவுக்கு வந்தாள். மறுநாள் எம்பெருமானர் அவளகத்தில் பிக்ஷைபெற்றுப் போகத் தொடங்குகையில் அவ்வம்மையார் தம் இரு கைகளையும் அகல நீட்டி அவர் செல்வழியை மறித்தாள். எம்பெருமானர் வியப்பெய்தி "ஏனம்மா என்னை வழிமறிக்கிறாய்" என்று வினவினர். அவ்வம்மையர் கைகூப்பி ஒன்றுமில்லை ஸ்வாமீ! அடியாள் உள்ளத்தே ஒரு பெரிய ஐயம் எழுந்துள்ளது. அதற்குவிளங்கப்பதிலுரைத்துத்தான் தேவரீர் திருவடி பெயர்க்க வேண்டும்" என்று விநயமாக ஆனல் உறுதியோடு விண்ணப்பம் செய்தாள். இராமாநுசரும் 'அப்படியா! உமது ஐயம் என்னவோ?" எனக் கேட்க அவளும் "ஸ்வாமீ! தினமும் பிக்ஷை பண்ணிக் காலம்கடத்தும் ஒருவருக்கு பிரம்மாதிகளுக்கும் உண்டாகாத மாட்சி யுண்டாயிற்றென்னலாம் படிஅரசனுன அகளங்கனே தொடங்கி, மறையனைத்திலும் வல்லரான மறைக்குல முதல்வரும், மற்றுமுள்ள பெரியார்களும் சிறியார்களும் பலசார்பினரும் ஒருமனத்தராய் அடங்கியொடுங்கி தேவரீர் அடிகீழ் அமர்ந்து காத்திருப்பதைக்காண அடியாளுக்கு ஒரே வியப்பாயிருக்கின்றது. இதற்கு மூலமென்னென்று பல்கால் என்றுள்ளே விசாரம்செய்தும் அடியாளுக்குப் புலப்படவில்லை. தேவரீர் விவரமாகக் கூறியருள் வேண்டும்." என்று விண்ணப்பித்தாள். உடையவரும் 'அம்மணீ! அரசனேயானுலென்ன! அயிராணிகேள் வனுலென்ன! பிரதேவர்களானுலென்ன! பகவத்விஷயமான நல்வார்த்தைகள் ஆயிரத்தில் ஒன்றேனும் உள்ளபடி சொல்லி உணர்த்தப் புக்கால் செவிசாய்த்து முடிவணங்கி அடங்காதொழிவரோ!" என்றருளினர். சுமதியும் "அப்படிப்பட்ட அரும் பொருளை அடியேனும் கற்றுணர்ந்து ஆன்ம உய்வு பெறும்படி தேவரீர் கிருபை செய்ய வேணுமென்று அவர் திருவடிகளிலே விழுந்து கிடந்தாள். உடையவரும் அவளை எழச் செய்து நீர்மடத்துக்கு வாரும்" என்றருளிச் செய்து போனர்.

மறுநாள் சுமதியம்மையாரும் உடையவர் திருமடம் சென்று அவரைத் தண்டனிட்டு நிற்க உடையவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் அவ்வம்மையாருக்கு பஞ்சசம்ஸ்கார பூர்வமாக த்வயத்தை உபதேசித்தருளி "கொங்கர்க் கோன் குலசேகரன்" என்று அருளிச் செய்த நம்மை ஆளுடையார்களில் ஒருவரான குலசேகரப் பெருமானிடைய தேசத்தினின்றும் வந்துள்ளீர் அவருடைய சம்பந்தத்தை நாம் நேரே பெருவிடினும் அவருடைய தேச சம்பந்தத்தையாவது நாம் பெருமாறு செய்தீராகையாலே உமக்கு இனி "கொங்குப் பிராட்டி' என்று தாஸ்ய நாமம் உண்டாகக்கடவது என்றருளிச் செய்து விடைகொடுத்தருளினர். அவ்வம்மையாரும் உடையவர் திருவடி சம்பந்தியாய் மகிழ்ச்சியோடும் வாழ்ந்து வந்தாள்.

சிலகாலம் சென்றவாறே மேல் நாட்டில் நல்ல மழைபொழிந்து நாடு செழித்துப் பஞ்சமும் விலகியது. இச் செய்தி யறிந்ததுமே கொங்குப் பிராட்டிக்கு தன்னூர் செல்ல வேண்டுமென்ற அவா மேலிட்டது. ஆனல் அந்நேரத்திலே உடையவரை சேவித்து விடைகொள்ளத் தக்க சமய மில்லையே என்று புழுங்கினள் பிராட்டி. ஆனல் ஏதோ சொல்லிவைத்ததுபோல யதேச்சையாக உடையவர் அங்கே எழுந்தருளினர். சுமதியும் அவரை மிக ஆவலோடு எதிர்கொண்டு தண்டனிட்டு ஸ்வாமீ! அடியேன் பர்த்தாவோடு எங்களூர் செல்ல முடிவு செய்திருக்கிறது. தேவரீரை தினமும் தெண்டனிட்டு வந்துள்ளேன். அதுபோல இனியும் அடியாள் தேவரீரைத் தினமும் தெண்டனிட்டுக் கொண்டிருக்கும்படி கிருபை செய்து ஏதேனும் தேவரீர் சம்பந்தமுடைய அடையாளவஸ்து ஒன்று அளித்தருளவேணும்.

(தொடரும்)

சிவஞான போதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

9-ஆம் சூத். 3-ஆம் அதிகரணம்.

சூத்திரப் பகுதி: "விதி எண்ணும் அஞ் செழுத்தே".

வார்த்திகம்: இனி இவ்விடத்து ஸ்ரீ பஞ் சாக்கரத்தை விதிப்படி உச்சரிக்க என்றது, இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கிநிற்கும் ஆகலின், அது நீக்குதற்கு எனக் கொள்க.

பொருள் இயைபும் விளக்கமும்:

எட்டாஞ் சூத்திரத்தில் ஓதியபடி தன்னைத் தத்துவங்களின் வேறு எனக்கண்ட ஆன்மா, பின்னும் அசத்தாயுள்ள உலகப் பொருள்களைப் பொருட்படுத்தாது பற்றற்றுநிற்பின் அந் நிலையில் அவ்வுணர்வில் சிவஞானம் எனப்படும் வியாபக உணர்வு உலகப் பொருள்களுக்கு வேருக இன்ப ஒளியுடையதாய்த் தோன்றும்; அங்ஙனம் வெளிப்படும் சிவஞானங் கண்ணுகத் தன் உணர்வில் நாட, ஞேயமாகிய (அறியப் படுவது) சிவம் காட்சிப்படும் — என்பது இச் சூத்திரத்தில் இதுவரை கூறப்பட்ட கருத்து.

அங்ஙனம் கண்டகாட்சி சலியாதிருத்தற் பொருட்டு, அந்நிலையில், மேல்விதித்த பொருளை நினைப்பிக்கும் முத்தி பஞ்சாக்கரம் எண்ணத் தக்கது எனக் கூறுகிருர் ஆசிரியர். 'சிவ ஞானத்தால் ஞேயத்தைக் காண்டலே அமை யாதோ? மேலும் திருவைந் தெழுத்தை எண்ணுதலால் வரும்பயன் யாது?' என்பார்க்கு விடையும் கூறுகின்ருர்: வேப்ப இலையை உண்டுவந்த புழு பக்கத்தில் கரும்பு விளைய அதைத் தலைப்பட்டு அதன் சுவையை நுகர்ந்த பின்னும் முன்னைப் பழக்கம்பற்றி வேப்ப இலையை அவாவி நிற்கும். அதுபோலச் சுட்டு ணர்வு உடையதாய் உலகத்தைநுகர்ந்து வந்த ஆன்மா ஆசான் அருளால் சிவஞானம்பெற்றுச் சிவத்தைக் காணப் பெறினும் பழைய வாதனை காரணமாக உலகை நோக்கித் தன் வியாபக உணர்வை இழக்க நேரும். அங்ஙனம் நேராத படி தன் உடம்பின்கண் நெஞ்சு, கொப்பூழ், புருவநடு என்னும் இடங்களை முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தான மாகக் கொண்டு முதற்பொருளை உணர்ந்து நிற் றற்கு ஞாபகமாய் (அறிவிப்பதாய்) அமைவது திருவெழுத்தைந்து எனக்கொள்க என்கின்ருர். இக்கருத்தை உதாரண வெண்பாக்களால் மேலும் விரித்து உணர்த்துகின்ருர் ஆசிரியர்:—

செவ்வாய், புதன், வியாழன் முதலிய கோள்களுள் இராகு கேதுக்கள் ஏனைய கோள்களுள் தனித்துக் காணப்படமாட்டா; கிரகணகாலத்தில் சூரியன் அல்லது சந்திர னிடத்துவைத்தே அவை காணப்படும். அது போல, பசு பாசம் பதி என்னும் முப்பொருள் களுள் பசுபாசங்கள் ஒருவாற்ருல் நம்மறிவில் தட்டும். 'யான் இதைக் கேட்டேன், கண் டேன், அறிந்தேன், என நிகழும் உணர் வில் யான் என்பதன் விடயம் பசு. கேட் டேன், கண்டேன், அறிந்தேன் என்பன வற்றின் விடயம் செவி முதலிய தத்துவங் களால் விளங்கும் பாச அறிவு. "யான் அறிந்திலேன்" என்பதில் அறியாமையை விளைத்து நிற்பது மலம். இவ்வாறு முதல்வன் எந்த வகையிலும் நம் உணர்வில் தட்டுவ தில்லை. ஆதலால் அம்முதல்வனை நம் உடம் பில் ஒரு குறிக்கண் வைத்தே காண்டல் வேண்டும். முதல்வனை நெஞ்சக் கமலத்தில் திருவைந்தெழுத்து ஓது முறையில் காணின் விறகில் மறைந்துள்ள நெருப்புக் கடையும் போது வெளிப்படுவதுபோல வெளிப்பட்டுத் தோன்றி இரும்பின் கறையினையும் திப்பத்

தையும் மாற்றித் தன் வண்ணமாக்கும் நெருப்பைப் போல முதல்வன் ஆன்மாவின் ஏக தேச உணர்வைக் கழற்றித் தன் சுதந்திரத்தில் அடங்கக் கொண்டு தன் வண்ண மாக்குவன்

திருவைந் தெழுத்தின் பொருள்நிலைபற்றி ஆன்மா முதல்வனுக்கு அடிமை என்பதை உணர்ந்து, நெஞ்சக் கமலத்தில் ஆன்மாவும் எண்ணப்படும் எழுத்தைந்தும் முதல்வனுக்குச் சூக்கும தூல வடிவம் எனக்கொண்டு கொல்லாமை, ஐம்பொறியடக்கம், அருளுடைமை, பொறை, அறிவு, தவம், அன்பு, வாய்மை என்பவையே எட்டு மலர்களாகக் கொண்டருச்சிக்க; உந்தித்தானத்தில் ஞான அனலை எழுப்பிச் சுழுமுனை இடை நாடிகளால் விந்துத்தானத்து அமுதைச் சொரிந்து ஓமம் செய்க. புருவநடுவில் சி ய வ என்னும் எழுத்துக்களால் குறிக்கப்படும் பொருள்களை முறையே தத்பதப் பொருளாக, துவம் பதப் பொருளாக, அஸி பதப் பொருளாகக் கொண்டு உணர்க. இங்ஙனம் செய்யும் சிவோஹம் பாவனையால் வியாபக உணர்வும் அவ்வுணர்விற்குக் கோசரமாம் சிவமும் விளங்கி உன்னைச் சேட சேடிபாவத்தால் தன்வயப் படுத்திச் செலுத்துவன் முதல்வன்.

இதய கமலத்தைப் பின்வருமாறு கருதுக: உந்தியில் மூலமலமாகிய சேற்றில் கன்மமாகிய முளையை உடையதாய் விளைந்த ஆன்ம தத்துவம் 24ம் எண் விரல் அளவினதாகிய அடித்தண்டு அதன்மேல் வித்தியாதத்துவம் ஏழும் சுத்தவித்தையும் எட்டு இதழ்கள்; அவற்றுக்குள் ஈசுரம் சதாசிவம் என்னும் இரு தத்துவங்களே 64 கேசரம்; அவற்றின் இடையே சத்தி தத்துவமே பொகுட்டு; அதன்கண் சிவதத்துவம் ஐம்பத்தொரு விதைகள்; அதன் மேல் முதல்வன் திருவடி எனப்படும் திருவருள்: இங்ஙனம் கருதி முன் கூறியபடி திருவைந்தெழுத்தால் அகத்தே ஞானபூசையைச் செய்க

பின்வரும் உதாரண வெண்பாக்கள் மேற் கூறிய கருத்துக்களைக் கொண்டுள்ளவை:—

அஞ்செழுத்தால் உள்ளம் அரனுடைமை
கண்டு அரனை
அஞ்செழுத்தால் அர்ச்சித்(து) இதயத்தில்
அஞ்செழுத்தால்
குண்டலியிற் செய்தோமம் கோதண்டஞ்
சானிக்கில்
அண்டனும்; சேடனும் அங்கு.

இந்துவிற் பானுவில் ராகுவைக்
கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணும்—
உந்தவே
காட்டாக்கிற் றேன்றிக் கனல்சேர்
இரும்பென்ன
ஆள்தான் ஆம்; ஓதஞ் செழுத்து.

மண்முதல் நாளமலர் வித்தை கலாரூபம்
எண்ணிய ஈசர் சதாசிவமும்—கண்ணின்
கலையுருவாம் நாதமாம் சத்தியதன்
கண்ணும்
நிலையதிலாம் அச்சிவன்தாள் நேர்

பின்வரும் திருவிருத்தம் அகப்பூசை செய்வார்க்கு உதவியாம்:—

இருதய நாப்பண் அஞ்செழுத் துருவின்
இறைவனை உயிர்க்கொலை செயாமை
அருள்பொறி யடக்கல் பொறைதவம் வாய்மை
அன்பறி வென்னும் எண்மலர் கொண்டு
ஒருமையொ டருச்சித் திடுகஎன் றடியார்க்(கு)
ஒள்ளிய தீக்கைசெய் துணர்த்தத்
திருவமர் துறைசை உறையருட் குருவாம்
திருநமச் சிவாயர்தாள் போற்றி.

ஒன்பதாம் சூத்திரம் முற்றிற்று.

★

தொண்டை நாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

திருப்பாடகம்

காஞ்சிபுரியில் விளங்கும் திவ்விய தேசங்களுள் ஸ்ரீ பாண்டவ தூதப் பெருமாள் ஸன்னிதியென வழங்கப்படும் தலம் ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தங்களில் 'பாடகம்' என வழங்கப் பெறுகின்றது. பாடு தோற்ற எழுந்தருளியிருக்குமிடம் பாடகம் என்றதாகும். பாடு—பெருமை, கண்ணபிரான் பாண்டவ தூதனாகச் சென்ற ஸமயத்தில் பாடு தோற்ற எழுந்தருளியிருந்த ஸந்தர்ப்பம் ஒன்றுண்டு. இப்பெருமானது வருகையை யறிந்து துரியோதனன் தனது சபா மண்டபத்தில் மிகப் பெரிய பிலவறை யொன்றைத் தோண்டுவித்து அதில் ஆயுத பாணிகளான சில மல்லர்களை நிறுத்தி, மேலே பிரப்பம்பாயை விரித்து, அதன் மேலே மிகக் கனத்த ரத்தினக் கம்பள மொன்றைப் பரப்பி வைத்தான். கண்ணபிரான் இவர்களோடு சந்தி பேசுவதற்காக வந்து சேர்ந்தவுடனே அந்தப் பொய்யாஸனத்திலே வீற்றிருக்குமாறு துரியோதனன் வேண்ட, கண்ணனும் அப்படியே அதில் வீற்றிருந்ததும் ஆசனம் உள்ளிறங்க, கண்ணனும் அப்பிலவறையினுள்விழுந்து தன்னோடு போர் புரியவெழுந்த மல்லர்களைக் கண்டதும் தான் விசுவரூபங் கொண்டதாக (அதாவது மிகப் பெரிய வடிவெடுத்ததாக)ப் புராண வரலாறு. இதனைத் திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் (9-1-9) "அரவுநீள் கொடியோன் அவையுளாசனத்தை அஞ்சிடாதேயிட, அதற்குப் பெரியமாமேனி அண்டமூடுருவப் பெருந்திசையடங்கிட நிமிர்ந்தோன்" என்னுஞ் செய்யுளினால் வெளியிட்டுள்ளார்.

அர்ச்சாவதாரத்தில் வீற்றிருந்த திருக்கோலத்தில் இவ்வளவு பெரிய திருவுருவம் வேறு எங்கும் காணக் கிடைப்பதில்லை. கச்சிப் பதியில், சயனத் திருக்கோலத்தில் யதோக்தகாரிப் பெருமாளும், நின்ற திருக்கோலத்தில் உலகளந்த பெருமாளும், வீற்றிருந்த திருக்கோலத்தில் இப்பாண்டவ தூதப் பெருமாளும் பூமண்டலத்திலேயே மிகப் பிரசித்தி பெற்ற திருமூர்த்திகளாவர். சயனத் திருக்கோலப் பெருமாள்கள் திருவரங்கம் திருப்புளிங்குடி முதலான விடங்களிலும், நின்ற திருக்கோலப் பெருமாள்கள் திருக்கோவலூர் முதலான விடங்களிலும் ஒருவாறு காணக் கிடைப்பர்களாயினும், வீற்றிருந்த திருக்கோலத்தில் இவ்வாறு பெரிய திருவுருவம் திருநாட்டிலும் காணக் கிடைக்காதென்னத் தட்டில்லை.

இத்தலம் ஆழ்வார்கள் ஐவரின் பாடல் பெற்றது. பூதத்தாழ்வார் தமது திருவந்தாதியில் 94. "உற்று வணங்கித்தொழுமின்... பூம்பாடகத்துளிருந்தானை." பேயார் தமது திருவந்தாதியில் (30) "சேர்ந்த திருமால்...வாய்ந்த மறை பாடகம்" (64) "இசைந்தவரமும்... கச்சியிருந்து" திருமழிசைப்பிரான். திருச்சந்த விருத்தம். (63) "நன்றிருந்த ...குன்றிருந்த மாட நீடு பாடகத்து." (64) "நின்றதெந்தை யூரகத்து இருந்ததெந்தை பாடகத்து." நம்மாழ்வார். திருவாய் மொழியில் (5-10-6) "நின்றவாறும் இருந்தவாறும்" திருமங்கையாழ்வார். பெரிய திருமொழி(6-10-4) "கல்லார் மதில் சூழ் கச்சி நகருள் நச்சிப் பாடகத்துள்," திருநெடுந்தாண்டகம் (15) "கல்லுயர்ந்த...கச்சிமேயு களிறு"

இத்தலத் தெம்பெருமானுடைய வலத் திருக்கை முத்திரையை நோக்குங்கால் அர்ச்சுனனுக்குக் கீதா சாஸ்திரத்தை உபதேசித் தருளும் ஸந்நிவேசமாகவும் தோன்றுவதாலும் இத்தலத்துப் புராணத்தில் இரண்டு அத்யாயங் களில் கீதா சாஸ்த்திரத்தின் பொருள் விளக்கம் காணப்படுதலாலும், இப்பெருமானுக்கு கீதாசார்யனென்கிற ப்ரஸித்தியுமிருப்பதனாலும் இங்கு கீதா சாஸ்திரத்தின் சில உட்பொருள்களையெடுத்துரைக்கும் முகத்தினால் இப்பெருமானை யநுபவிக்கலாமென்று தோன்றி "மாயனன்றைவர் தெய்வத் தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள் தெரியப் பாரினிற் சொன்னவிராமாநுசன்" என்று போற்றப்பட்ட ஸ்ரீ ராமாநுஜரைச் சிந்தை செய்து கொண்டு சிலவெழுதுன்றேன்.

பரமகாருணிகனென்றும் பேரருளாளனென்றும் போற்றப்படுகிற பகவான் தன் அருளினால் செய்த உபகாரங்கள் நமக்குக் கரணகளேபரப்ரதானம் முதலானவை பலபலவுண்டானாலும் அவற்றுள் மிகச் சிறந்த உபகாரம் ஒன்றே. அதுதான் சாஸ்த்ர ப்ரதானமென்பது. "அறிவினாற் குறைவில்லாவகன் ஞாலத்தவரறிய நெறியெல்லாமெடுத்துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி" என்று நம்மாழ்வாரும், "கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள் தானும், மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினாலருள் செய்து" என்று திருமங்கையாழ்வாருமருளிச் செய்தவை இங்கு நினைக்கத்தக்கன.

அவன் தான் செய்தருளுமிந்த வுபகாரத்தை நேராகவும், பிறர் முகமாகவும் செய்து போருவதுண்டு. "முனிவரையிடுக்கியும் முந்நீர் வண்ணனாயும் வெளியிட்ட" என்பது ஆசார்ய ஹ்ருதய திவ்ய ஸூக்தி. வ்யாஸர் பராசரர் வால்மீகி முதலான மஹர்ஷிகள் வாயிலாக வெளியிட்டவை போலன்றிக்கே தானே ஸாக்ஷாத்தாக வெளியிட்டது பகவத் கீதா சாஸ்த்ரம்.

"வேதேஷு பௌருஷம் ஸூக்தம் தர்ம சாஸ்த்ரேஷு மாநவம், பாரதே பகவத் கீதா புராணே ஷிச வைஷ்ணம்" * என்னும் வசனமானது வேதங்களுக்குள்ளே புருஷ ஸூக்தமும், தர்ம சாஸ்த்ரங்களுக்குள்ளே மநுஸ்ம்ருதியும், மஹா பாரதத்தினுள்ளே ஸ்ரீ கீதையும், புராணங்களுக்குள்ளே புராண ரத்னமென்று ஆளவந்தார் திருநாமஞ் சாத்தின ஸ்ரீ விஷ்ணு புராணமும் சிறந்தவையென்று தெரிவிக்கின்றது. பஞ்சம வேதமான மஹாபாரதத்தினுள்ளே கீதோபநிஷத்தின் சிறப்பைப் பற்றிநாம் விவரிக்க வேணுமோ? ஸகல மதஸ்தர்களும் ஆதரித்து ஸகல மதஸ்தர்களும் வியாக்கியானங்களும் மொழி பெயர்ப்புகளும் பாஷ்யங்களும் இயற்றப் பெற்ற கீதையின் சிறப்பு ஒப்புயர்வற்றதே.

பதினெட்டு அத்யாயங்கள் கொண்ட கீதா ஸாஸ்த்ரத்தை மூவாறாகப் பிரித்து ஷட்க த்ரயமென்று முன்னோர்களே வியபதேசித்தார்கள். ஒவ்வோரத்யாயத்திற்கு ஒவ்வொரு ப்ரமேயமிருப்பது போல ஒவ்வொரு ஷட்கத்திற்கும் ஒவ்வொரு ப்ரமேயம் என்று விவக்ஷித்தே ஷட்கபேதம் பண்ணினார்கள் முன்னோர்கள். ஆளவந்தாருடைய கீதார்த்த ஸங்க்ரஹத்தில் ஒவ்வொரு ஷட்கத்திற்கும் ப்ரமேய மின்னதென்று சிக்ஷிக்கப்பட்டிருக்கின்றமை காண்க.

முதலத்யாயம் முழுவதும் கீதைக்கு அவதாரிகை போன்றது. போன்றது என்ன வேண்டா. அவதாரிகையே. இதர க்ரந்தங்களுக்கு அவதாரிகை நாம் வைக்க வேண்டியிருக்கும். கீதைக்கு அப்படியன்றிக்கே அது தன்னிலேயே அவதாரிகையுள்ளது. கீதா சாஸ்த்ரம் தானவதரித்த காரணத்தைத் தானே தெரிவிக்கின்றதென்க. கண்ணபிரான் பாண்டவர்கட்காகத் துரியோதனாதியரிடம் தூது சென்று ஸமாதான வழிகள் பல பேசியும் "வீரபோக்யா வஸுந்தரா" ஆகையாலே போர்க்களத்தில் வீரத்தனத்தைக் காட்டி வெற்றி பெறுமவர்களே ராஜ்யமாளக் கடவர்களென்று கௌரவர்கள் கூற, பிறகு யுத்தமே நடத்தக்கடவதாக முடிவு பெற்றது. பிறகு இருவகுப்பினரும் படைத் துணை வேண்டிக் கண்ணபிரான் பக்கலிலே வந்து சேர, துரியோதனன் கண்ணபிரானைத் துணையாக விரும்பிற்றிலன். "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்னும் புகழ்பெற்ற பாண்டவர்களுக்கே கண்ணபிரான் துணைவனாக நிற்க வேண்டிற்று. பக்த பரதந்திரனான ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா தன் பரம பக்தனான அர்ஜுனனுக்குத் தேர்ப் பாகனாக இருந்து கொண்டு, குருக்ஷேத்திரத்

தில் வந்து போர்புரிய அணிவகுத்து நின்றனர்; அப்பொழுது அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி 'பெருமானே! இந்தப் போரில் நான் யாருடன் போர் புரிவது தகுதியானது? துர்ப்புத்திவாய்ந்த துரியோதனனுக்குத் துணை புரிவதற்காக யார் யார் வந்திருக்கிறார்கள் என்பதை நான் கண்டு தெரிந்து கொள்ளுமாறு தேரை இருசேனைகளிடையில் நிறுத்துவாயாக' என்று கூற, அப்படியே கண்ணபிரான் இருபடைகளினிடையே தேரை நிறுத்தி 'அர்ஜுனனே! இவ்விரு படைகளிலுமுள்ள போர்வீரர்களைப் பாராய் என்று கூற, அப்போது அர்ஜுனன் போர்க்களத்தில் வந்து நின்றிருக்குமவர்கள் தந்தைகளாயும், மக்களாயும், பேரன்மார்களாயும் தோழன் மார்களாயும் ஆசாரியர்களாயுமிருப்பது கண்டு அவர்களிடத்து இரக்கங் கொண்ட மனத்தனாய் வில்லைக்கீழே போகட்டு வருத்தமும் கலக்கமும் மிகப்பெற்றுத் தேரிடையே உட்கார்ந்து விட்டான். இவர்களோடே நான் போர்புரிய மாட்டேனென்று உறுதியாய்க் கூறிவிட்டான் — என்னுமிதுவே முதலத்யாயத்தின் ப்ரமேயம். இப்படி அஸ்தாநே கலங்கின அர்ஜுனனுடைய கலக்கத்தைப் போக்கி அவனை யுத்தத்திலே மூட்டுவதற்காக இரண்டாமத்தியாயத்திலிருந்து பலபல வுபதேசங்களைச் செய்தருள; அவனும் தெளிவுபெற்று "ஸ்திதோஸ்மிகத ஸந்தேஹ: கரிஷ்யே வசநம்தவ" என்று சொல்லிப் போர்புரிய இசைந்தானென்பது கீதையின் ஸாரமான பொருள்.

போர்புரிய உத்ஸாஹத்தோடு வந்த அர்ஜுனன் திடீரென்று நான் போர்புரிய மாட்டேனென்றது எதனாலே? என்று இங்கு ஒரு கேள்வி பிறக்கும். எம்பெருமான் சக்ரவர்த்தி திருமகனாய்த் திருவவதரித்துப் பதினோராயிரமாண்டு இந்நிலவுலகில் வாழ்ந்திருந்தும் ஸம்ஸாரி சேதநோஜ் ஜீவநார்த்தமாக ஒரு சாஸ்த்ரமும் இட்டருளவில்லை. தன்னடிச் சோதிக்கெழுந்தருளின பிறகு இக்குறை மிகவும் தோன்றிற்று. அடுத்தபடி மண்ணுலகில் அவதரிக்க நேரும் போது இக்குறையைத் தீர்த்துக் கொள்வதாக அப்போதே திடமான ஸங்கல்பம் செய்து கொண்டார் வைகுண்டபதி. ராமாவதாரத்திற் கடுத்தது க்ருஷ்ணாவதாரம். இவ்வவதாரத்தில் அத்யாத்ம சாஸ்த்ர மொன்று வெளியிட வேணுமென்ற ருசி கண்ணனுக்குத் தீவிரமாக இருந்தது. பாண்டவர்கள் ஐவருள் அர்ஜுனனே உபதேச ஸத்பாத்ரமென்றும், அவனுக்கே உபதேசிக்க வேணுமென்றும் திருவுள்ளம் பற்றினான். இந்த சமயம் தவறிவிட்டால், யுத்தம் முடிந்து ராஜ்யபோகங்களை பெற்ற பின்பு இதைக் கேட்பாரில்லை யென்று தோன்றிற்று. உபதேசத்தை திடீரென்று தொடங்கி விடலாகாது. 'நான் சிஷ்யனாக இருக்கிறேன், எனக்குஉபதேசிக்கவேணும்'என்று பிரார்த்தித்தாலொழிய உபதேசம் ரஸ்யமாகாது. நெஞ்சில் நிர்வேதமுண்டானாலொழிய உபதேசம் கேட்க ருசியுண்டாகாது. ஆகவே அர்ஜுனனுக்கு நிர்வேதத்தை யுண்டு பண்ணி அவனை சிஷ்யனாக்கிக் கொண்டு உபதேசிக்க வேண்டியிருந்ததனால் மாயப் போர்த் தேர்ப்பாகனான கண்ணபிரான் [இக்காரணத்தினால்] அவனுக்கு நிர்வேத முண்டாம்படி பண்ணியும், "ப்ருச்சாமி த்வாதர்மஸம் மூடசேதா: சிஷ்யஸ் தேஹம்சாதி மாம்த்வாம் ப்ரபந்நம்" என்று அவன் வாயில் வருவித்தும் இந்த கீதாசாஸ்த்ரத்தை உபதேசிக்கத் தொடங்கினானாயிற்று.

அர்ஜுனனைப் போரில் மூட்டுவதற்குத் தானே இந்த கீதோபதேசம். அதற்கு இவ்வளவு விரிவான பலபல உபதேசங்கள் தேவையோவென்று கேள்வி பிறக்கும். ஸ்ரீ ராமநுஜரிட்டருளின கீதா பாஷ்ய அவதாரிகையில் அர்ஜுனனைப்போர் புரிய உத்ஸாஹப்படுத்துவது வியாஜமாத்ர மென்றும், பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனமான பக்தி யோகத்தை அவதரிப்பிப்பதே இந்த சாஸ்திரத்திற்கு ப்ரதான லக்ஷ்யமென்றும் உணர்த்தியுள்ளார். முமுக்ஷுக்களுக்கு உபஜீவியங்களான ஸகலார்த்த ஸாரங்களும் பிரஸக்தாநு ப்ரஸக்தமாக இதில் நிருபிக்கப் பட்டனவென்றதாயிற்று.

இந்த கீதா சாஸ்த்ரம் இரண்டு ஸம்வாத ரூபமாக அவதரித்துள்ளது. கீதையின் ஆரம்பமே "த்ருதராஷ்ட்ர உவாச" என்றிருப்பதால் ஸஞ்ஜயனை நோக்கி த்ருதராஷ்டரன் கேள்வி கேட்பதாகவும், அவனுக்கு ஸஞ்ஜயன் விடைகூறுவதாகவுமுள்ளது. ஆக, த்ருதராஷ்ட்ர ஸஞ்ஜய ஸம்வாதமென்பது ஒன்று. இனி உள்ளே புக்கால், "அர்ஜுந உவாச: பகவாநுவாச" என்று பலகால் வருவதால் அர்ஜுனனுச்கும் கண்ணபிரானுக்கும் ஸம்வாத

மாக இந்த கீதை அவதரித்ததென்பது தெரியவரும்.

ஆகவே இது இரண்டு ஸம்வாத ரூபமென்று உணரத்தக்கது. 18—73ல் க்ருஷ்ணார்ஜுன ஸம்வாதம் முடிந்து, அதற்கு மேலுள்ள ஐந்து சுலோகங்களும் த்ருத்ராஷ்டிரனுக்கு ஸஞ்ஜயன் சொல்லி முடிப்பதாக கீதையின் அமைப்பு.

இரண்டாமத்யாயத்தின் பன்னிரண்டாவது சுலோகத்திலிருந்து கீதா சாஸ்த்ராரம்பமென்று கொள்ளலாம். அதற்குக் கீழுள்ள பாகங்களெல்லாம் அவதாரிகையாக நிற்கிறது. அந்த பன்னிரண்டாவது சுலோகம் எவ்விதமாக உள்ளதென்று பார்க்கவேணும்.

" நத்வேவாஹம் ஜாது நாஸம் நத்வம் நேமே ஜநாதிபா; நசைவ நபவிஷ்யாமஸ் ஸர்வே வயமத: பரம்." என்பதே அந்த ச்லோகம். இதன் பொருள் யாதெனில், ஸர்வேச்வரனாகிய நானும் இதற்குமுன் கழிந்த அநாதி காலத்திலும் இருந்தவனே; அர்ஜுநா! நீயும் இந்த அரசர்களுமான க்ஷேத்ரஜ்ஞர்களுங்கூட முன்பும் இருந்தவர்களே. முன்பு இருந்தது மட்டுமேயன்றிக்கே மேலுள்ள காலமுமெல்லாம் நானும் நீங்களும் இருக்கப் போகிறவர்களே என்பதாம். ஸர்வேச்வரனாய் பரமாத்மாவான நான் நித்யன் என்பதில் எப்படி ஸந்தேஹமில்லையோ, அப்படியே க்ஷேத்ரஜ்ஞர்களாய் ஜீவாத்மாக்களான நீங்களும் நித்யர்களென்பதில் ஸந்தேஹமில்லையென்று பகவான் தானே சோதிவாய்திறந்து பணித்துளன். இதனால் ஸர்வேச்வரனான பகவானைக் காட்டிலும் ஜீவாத்மாக்களுக்குண்டான பேதமும், அந்த ஜீவாத்மாக்களுக்குப் பரஸ்பரமுண்டான பேதமும் பாரமார்த்திகமென்று பகவான் தானே வ்யக்தமாகத்தெரிவித்ததாய்த் தேறுகிறது.

கீழே அர்ஜுனன் (2—7) தத்துவார்த்தம் தெரியாமையினாலே தான் தளும்பியிருப்பதாகவும் தன்னுடைய கலக்கம் தீர தத்துவார்த்தத்தை அறுதியிட்டு அருளிச் செய்ய வேணுமென்றும் சொல்லித் திருவடிகளில் விழுந்து யாசித்திருக்கிறான். அப்படிப் பட்டவனுக்கு தத்வோபதேசம் செய்யவே இந்த கீதா சாஸ்த்ரம் அவதரித்தது. கீதாசார்ய கலங்கினவனுக்குச் சொல்லும்போது தெளிவான பொருளைச் சொல்லுவனேயல்லாது கலங்கின பொருளையே சொல்லமாட்டானன்றே? ஆகவே இந்த சாஸ்த்ரத்தில் கூறப்படும் பொருள்கள் யாவும் ஸர்வாத்மநா பாரமார்த்திகமென்றே வைதிகர்கள் கொள்ளக் கடவர்கள். அதிலும் ஆரம்ப ச்லோகமானவிதனில் கூறப்படும் விஷயம் உபநிஷதாதிகளில் வடிகட்டின பொருளாகவே யிருக்கத் தகும். இதில் ஜீவாத்ம பரமாத்மபேதம் முதலியன தெரிவிக்கப்படுமவை அபார மார்த்திகமாக இருக்கச் சிறிதும் ஔசித்யமில்லை. ஆக இந்த நிருபணங்களினால் ஸ்வாமி யெம்பெருமானார் உபநிஷத்து, ப்ரஹ்மஸூத்ரம் கீதை முதலானவற்றின் பொருள்களை ஆர்ஜவத்துடன் அறிந்து அறுதியிடுபவர் என்பது தேறும். " நத்வேவாஹம் ஜாது நாஸம்" என்கிற ச்லோகத்திலே ஜீவாத்ம பரமாத்ம பேதமும் ஜீவர்களுக்குப் பரஸ்பர பேதமுமாகிறவிவை காட்டப் பட்டதுபோல் அதற்கடுத்த (13) ச்லோகத்தில் ப்ரக்ருத்யாத்ம விவேகமும் காட்டப்பட்டது. அசேதநம் வேறு, சேதநன் வேறு என்கிற பகுத்துணர்வே ப்ரக்ருத்யாத்ம விவேக மெனப்படும். நிர்விசேஷ சிந்மாத்ரமான ப்ரஹ்மமொன்று தவிர வேறு சேதநா சேதநங்கள் உண்மையில் கிடையா என்கிறவாதம் இங்கு நிராகரிக்கப்பட்டதாகிறது. மேலே ஆத்மா நித்யனென்றும் தேஹம் அநித்யமென்றும் பரக்கச் சொல்லுகிற முகத்தாலும் சேதநா சேதநங்களின் உண்மை பாரமார்த்திகமாகவே முதலிக்கப்பட்டதாகிறது.

(2-45) [" த்ரைகுண்ய விஷயா வேதா: நிஸ்த்ரைகுண்யோ பவா ஜுந"] இங்கு ஆதி சங்கராச்சாரிய ஸ்வாமிகளின் பாஷ்யத்தில் த்ரைகுண்யமாவது ஸம்ஸாரம் என்றும், நிஸ்த்ரைகுண்யோபவ' என்பதற்கு (நிஷ்காமோபவ) என்று பொருளென்றும் எழுதப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தில் சிறிது விளக்கமும் விரிவுமுள்ளது. ஸத்வம், ரஜஸ் தமஸ் என்கிற முக்குணங்கள் மலிந்த புருஷர்கள் இங்குத்ரைகுண்ய சப்தத்தினால் சொல்லப் படுகிறார்கள். அன்னவர்களைப் பற்றியவை வேதங்கள் என்றபடி வேதங்களானவை கேவலம் ஸாத்விகர்களுக்கே வழிகாட்டுகின்றனவென்றில்லை. (தொடரும்)

அர்ச்சாவதாரம்

[உருவ வழிபாடு]

திரு. என். எஸ். தாத்தாச்சாரி, தஞ்சை.

1. **ஆகமக்குறிப்பு :**

எவ்வளவுக் கெவ்வளவு நல்ல மருந்தாயினும், முறையுடன் உண்டால்தான் நோய் குணப்படும். கடவுள் வழிபாடும் அவ்வாறேதான். கடவுளுடைய "உருவம், வழிபாடு, இவைகளில் நம் மனம் போனபடி நடந்துகொள்ளக் கூடாது. அவ்வாறாயின் சில சமயங்களில் பெரும் துன்பம் ஏற்படலாம். ஆகம நூல்களைப் பயின்ற பெரியோர்கள் வகுத்த வழியிலே செல்வதுதான் நம் கடமையாகும். "ஆகமம்" என்ற சொல்லிற்குப் பொதுவாகத் தொன்றுதொட்டுவரும் நல்லறிவு எனப் பொருளாகும். மல இருளைப் போக்கி மோக்ஷத்தைத் தரவல்லது என்றும் பொருள் கூறுவார்கள். "ஸ்ருஷ்டிச்ச ப்ரலயச் சைவ..." என்ற முன்னோர் கருத்திற்கிணங்க; ஆகமம் 7 இலக்கணங்கள் கொண்ட நூலாகும். இதை "சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், என 4 பிரிவுகளாகவும் வகுத்தார்கள். சைவ ஆகமங்களைச் சிவபெருமானே தம் 5 முகங்களால் வெளியிட்டார் எனக் காரண ஆகமம் கூறுகிறது. அவற்றில் சிவபேதம் 10, உருத்திரபேதம் 18ஆகும். ஆக 28 சிவாகமங்கள்.

வைணவ ஆகமங்கள் **"வைகானஸம், பாஞ்சராத்திரம்"** என இருபெரும் பிரிவுகள் கொண்டவை. திருமாலின் மார்பிலிருந்து தோன்றிய விகனஸ் என்ற முனிவரும், அவருடைய சீடர்களான **மரீசி, அத்திரி, பிருகு, காசியபர்** என்ற நால்வரும் சேர்ந்து 4 லக்ஷம் கிரந்தங்களில் (செய்யுள்களில்) வைகானஸ ஆகமத்தை வகுத்ததாகச் சிந்தாமணி கூறுகிறது. விகனஸர் சூத்திரம் 11 பிரச்னமும், மந்திரம் 8 பிரச்னமும் கொண்டதாகும். ஆலய நிர்மாணம், திருவிழா, பிராயச்சித்தம், முதலியன அவைகளில் விரித்துரைக்கப்படுகின்றன. இந்த ஆகமத்தைப் பின்பற்றுகிறவர்கள் "வைகானஸர்" என அழைக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு வேதமே பிரமாண நூலாகும்.

பாஞ்சராத்திரம் "பாத்மம்" முதல் பிராசேதஸம் வரை 108 வகையாகும். இதற்கு "பகவத் சாஸ்திரம், ஸாத்வத தந்திரம் என்று வேறு பெயர்களும் உண்டு. இந்த ஆகமத்தைப் பின்பற்றுகிறவர்களை, "பகவர்; பாகவதர், பாஞ்சாரத்திரிகர், ஸாத்துவதர்" என்றெல்லாம் அழைக்கிறோம். இவர்கள் பாஞ்சராத்திர ஆகமத்தையே பிரமாண நூலாகக் கொண்டார்கள். இந்த ஆகமம், மந்திர சித்தாந்தம், ஆகமசித்தாந்தம், தந்திரம், தந்திராந்திரம் எனப் பலபிரிவுகள் கொண்டது. பஞ்ச+ராத்திரம் என்று சொல்பிரிவு கூறி 5 நாட்கள் இரவில் திருமால், ஸ்ரீ தேவிக்கு இதை உபதேசித்தார். அதனால் பாஞ்சராத்திரம் என்று பெயர் வந்தது என்பார்கள். ஈசுவரஸம்ஹிதை "நரநாராயண ஆசிரமத்தில், பகவான் 5 இர்வு நாரதருக்கு இந்த ஆகமத்தை உபதேசித்தார் என்கிறது. மற்றும் "பஞ்சேதராணி சாஸ்திராணி ராத்ர்யாயந்தே' என்றபடி யோகம் முதலிய 5 சாஸ்திரங்கள் இதன் முன்பு இரவுபோல் ஆகின்றன என்றும், ஸ்ரீ வைணவர்களுக்கு முக்கியமான 5 தத்துவங்களை இது உபதேசிக்கிறது என்றும் உரைப்பார்கள். அர்த்த பஞ்சகம், ஐந்துஸம்ஸ்காரங்கள், பகவானுடைய ஐந்து தோற்றங்கள் முதலியன

இதில் கூறப்படுகின்றன. இன்னும் 108 ஸ்ரீ வைணவ க்ஷேத்திரங்களில் வைகானஸம், பாஞ்சராத்திரம் என்ற இரண்டு ஆகமங்களில் ஒன்றின் வழியில் பூஜை முதலியன நடந்து வருகின்றன. உதாரணமாக ஸ்ரீ ரங்கத்தில் பாஞ்சராத்திரமும் திருப்பதியில் வைகானஸமும் பின்பற்றப்படுகின்றன.

இவைகளைப் பற்றிய விரிவான கருத்துக்களைத் தனித் தலைப்பில்தான் எழுத வேண்டும். "கலைகளும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருளும்... நீர்மையினால் அருள் செய்து" என்ற திருமங்கையாழ்வார் பாசுரப்படி திருவுடன் கூடிய பகவானே பாஞ்சராத்ரத்தைத் தானே கூறினார் "வக்தா பாஞ்சராத்ர ஸ்யயஸ்வயம்" என்றும் (பாஞ்சராத்திரத்தைக் கமலாபதியே கூறினார்) ஸ்ரீ வேதாந்த தேசிகன் கூறினார். அவ்விதமான பகவான் பக்தர்களைக் காக்கும் நோக்குடனே "விண்மீது இருப்பாய்; மலைமேல் நிற்பாய், கடல் சேர்ப்பாய், மண்மீது உழல்வாய், இவற்றுள் எங்கும் மறைந்து உறைவாய்" என்ற ஆழ்வார் திருவாக்கின் படிக்கே, "பரம், வியூகம், விபவம், அந்தர்யாமி அர்ச்சை" என 5 வடிவம் தாங்கி விண்ணையும், மண்ணையும் அங்காதும் சோராமே தனிக்கோலோச்சிக் காத்தருளுகிறான். பாஞ்சராத்திரத்திலும் இதைப் பற்றிப் பேச்சு உண்டு.

2. நான்கு பிரிவுகள் :

"ஜீவாத்மா-உடல்" என்ற இரண்டு பொருள்களில் "உடன்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துளான்" என்றபடி பரமாத்மாவாக உள்ளே உறைந்திருக்கும் பகவான் நித்தியர்கள் என்று அழைக்கப்படும் ஆதிசேஷன், கருடன், ஸேனை முதலியார்களாலும், முக்தர்கள் என்ற இங்கிருந்து மோக்ஷம் சென்றவர்களாலும் எப்பொழுதும் ஸேவிக்கப்பட்டவராய், அறிவு, பலம், ஐச்வரியம், வீரியம், சக்தி, தேஜஸ் என்ற 6 வகை குணங்களுடன் "ஸ்ரீ தேவி, பூமாதேவி, நீளா தேவி" என்ற மூன்று தேவிகளுடன் திருநாடென்னும் வைகுண்டத்தில் பரவாசுதேவன் என்ற பெயருடன் இருக்கும் இருப்பைப் பரம் என்கிறார்கள். "நலம் அந்தம் இல்லதோர் நாட்டிலே நித்ய-முக்தருக்கு போக்யனாய்க் கொண்டு எழுந்தருளியிருக்கும் இருப்பு"—(பரம்) எனத் **தத்துவத்ரயம்** என்ற ஸம்ப்ரதாய நூல் கூறுகிறது.

பரஸ்வரூபத்திற்குள்ள 6 குணங்களில் முறையே இரண்டு இரண்டு குணங்கள் மிகுந்து நிற்கும், சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் என்ற 3 வடிவங்களுடன் (சிலர் வியூகவாசுதேவனையும் நான்காவதாகச் சேர்ப்பார்கள்) வெள்ளையம்தீவில் லக்ஷ்மியுடன் பள்ளி கொண்டிருக்கும் இருப்பை 'வியூகம்' என அழைப்பார்கள். "மீனமை, கோல நெடு நரசிங்கமாகி" என்றபடி மத்ஸ்யம், கூர்மம் முதலிய இவருடைய அவதாரங்களை (தோற்றத்தை) "விபவம்" என அழைப்பார்கள். எல்லோருடைய இதயத்தில் தன் ஸ்வரூபத்தையும் கலந்து கொண்டு, சூழ்ந்திருந்து ஜீவர்களுடைய மெய், நாக்கு, மனம் முதலியவைகளை இயக்கிக் கொண்டிருக்கும் இருப்பை "அந்தர்யாமி" என்பார்கள். 5 வது தான் அர்ச்சை (உருவ அமைப்பு).

3. அர்ச்சை :—

அர்ச்சை என்ற சொல்லுக்கு "வழிபாடு, வடிவம்" எனப் பொருள். ஸ்வயம் வ்யக்தம் (தானே தோன்றியது), ஆர்ஷம் (முனிவர்களால் ஏற்படுத்தப்பட்டது), பௌராணிகம் (புராண நூல்களில் கூறப்பட்டது), திவ்விய க்ஷேத்திரம் (ஆழ்வார்கள் பாசுரம் பெற்றது) முதலிய க்ஷேத்திரங்களில் (ஸௌவர்ணீம் ராஜதீம்வாபி தாம்ரீ ரத்னமயீம்ததா) என்றபடி 11 பொருள்களில் உருவம்கொண்டு மூலவர்-உத்ஸவர் என்ற பெயர்களுடன் கோயில் கொண்டிருப்பவரே "அர்ச்சை" என்பவர். வீடுகளில் எழுந்தருளி இருப்பவருக்கு "கிரஹார்ச்சை" என்று பெயர். "பரம் வியூகம்" என்ற 4விதமான நிலைகளில் ஏதாவது ஒரு நிலையைப் பக்தர்கள்

இந்த அர்ச்சையில் ஆவாஹனம் செய்ய லாம். 'அர்ச்சக பராதீனுகிவாத்ம ஸ்திதி:' என்றபடி அர்ச்சகர்களுக்கு அதீனப்பட்டு அழகே அழகுசெய்து கொண்டதுபோல் மிடுக்குடன் காட்சி தருகிருர். 'ஆபீடான் மௌளிபர்யந்தம் பச்யத: புருஷோத்த மம் பாதகாந்யாசு நச்யந்தி கிம்புநஸ்து உபபாதகம்' என்றபடி பீடத்திலிருந்து திருமுடிவரை தொட்டுத் தொட்டு, "கண்டேன் கண்டேன் கண்ணுக்கு இனியது கண்டேன்" என்று வாய் வெருவி அனுபவித்தால் பாதகங்கள் யாவும் தீயினில் தூசாகும் என்பது சாஸ் திரவாக்கு.

"பிம்பாக்ருத்யா ஆத்மனேபிம்பே ஸமாகத்ய அவதிஷ்டதே" (பகவான் தன் முழுச்சக்திகளுடன் படிவத்தில் எழுந்தருளி இருக்கிருன்) என்று ஸாத் வத ஸம்ஹிதையும் "ஸர்வாதிசாயி ஷாட் குண்யம் ஸம்ஸ்திதம் மந்த்ரபிம்பயோ:" என விஷ்வக்ஸேன ஸம்ஹிதையும் கூறு கின்றன. எல்லாவற்றையும் விஞ்சி நிற் கும் 6 குணங்களுடன் நிறைந்து, தெளிந்து, எளிமையும் ஏற்றமும் காண் காண் என்று காண நிற்க, நம்மவர்கள் கண்களுக்கும் தோற்றும் வண்ணம் அந் தக் கட்கிலி (கண்ணிற்குத் தெரியா தவன்) காட்சி தந்தருளுகிருன். இத ஞலேயே அர்ச்சை ஏற்றம் பெற்றது.

"அடியார் உகந்த உருக்கொண்டு
அருச்சகன் அண்டும் உள்ளப்
படியே யொழுகி யிப்பார்த்தளி
வீட்டிற் பரிவுடனே
குடியேறி அன்பர் குறித்தன நல்கிக்
குலவும் அர்ச்சை
வடிவாகு நம்பெருமான் அடிவாழ்த்தி
வணங்கு நெஞ்சே!" என்ற

முதியோர் செய்யுளையும் நோக்க வேண் டும். மதியுடன் நிலவு கலந்தாற்போல் என்றும் அவனுடன் கலந்து, அவன்படிக் கெல்லாம் தன்படியாக்கி அவதரிக்கும் லக்ஷ்மியும் (பெரிய பிராட்டியாரும்) "லயார்ச்சை" (திருமால் திருமார்பில் இருப்பது) "போகோர்ச்சை" (அருகே உபயநாச்சிமார்களாய் இருப்பது) "அதி காரார்ச்சை" (தனிக்கோயில் கொண் டிருப்பது) என்ற பெயர்களுடன் விக்கி ரக வடிவத்துடன் கோயில்களில் காட்சி அளிக்கிருள். "ஸௌலப்யதோ ஜகத் ஸ்வாமி ஸுலபோஹி உத்தரோத்தர:" என்ற பாஞ்சராத்ர வசனப்படி மற்றைய 4 வடிவங்களில் இந்த அர்ச்சையே சிறந் திருக்கிறது. "பின்னனுர் வணங்கும் ஜோதி" என்ற திருமொழியின்படி இன் ஞர், இனியர் என்ற பாகுபாடில்லாமல் யாவரும் வணங்கும் சமரஸத் தன்மை வாய்ந்தது இந்த அர்ச்சை வடிவம். "செய்ய தாமரையின்" என்ற (3-6-1) திருவாய் மொழியின் ஈட்டு உரையிலே, பகவான் ஆலயத்தில் மட்டுமின்றி வீடு களிலும் அர்ச்சை வடிவத்துடன் எழுந் தருளுவான் என்ற அவன் எளிமையைப் பேசப் புகுந்து, பிரமாண்டத்திற்கு அப் பாற்பட்ட, ஆவரண ஜலம் போல் பர ரூபம், அடையமுடியாப் பாற்கடல் ஜலம் போல் வியூகம், அப்பொழுது பிறந்தவர் கள் மட்டும் அனுபவிக்கும்படியான காட் டாற்றின் ஜலம் போல் விபவம், கண் ணுக்குத் தெரியாத ஊற்று நீர்போல் அந் தர்யாமி என்று இவை நம்போன்ருர்க்கு அணுகமுடியாது என்றுகூறிக் கடைசியில் எவரும், எப்பொழுதும் மூழ்கித் தாபம் தீர்த்துக் கொள்ளும் ஆற்றுநீர், குளத்து நீர் போன்றது அர்ச்சை என்று கூறப்பட் டுள்ளது. மற்றும் இந்த மூர்த்தங்கள் யோகிகளுக்காக யோக மூர்த்தியாயும், நம் போன்ருர்களுக்காகப் போக மூர்த்தி யாயும், வீரர்களுக்காக வீரமூர்த்தியாயும், பிறரைத் துன்புறுத்த விரும்புகிறவர்களுக் காக ஆபிசாரிக மூர்த்தியாயும் காட்சி தருவான். இவைகளுக்குள் போக மூர்த்தியே சிறந்தது என்றெல்லாம் ப்ரு ஹத் ஸம்ஹிதையில் பொதுவாக உருவ இலக்கணம் கூறப்பட்டுள்ளது. மேலும் தைத்திரீயம் என்ற உபநிஷத்-நாராயணீ யத்தில் "அம்பஸ்ய பாரே" என்று தொடங்கும் பகுதியில் மூன்ரும் அடியில் 'சுக்ரேண ஜ்யோதீம்ஷி ஸமநுப்ரவிஷ்ட' என்று கூறும்பொழுது அர்ச்சையைப் பற்றிய பேச்சு வருகிறது. ருக்வேதத்தில் 8 வது அஷ்டகத்தில் "அதோ யத்தாருப்

பவதே'' என்ற ருக்கின் பகுதிக்கு உப நிஷத் பாஷ்யத்தில் அர்ச்சை என்றே பொருள் கூறப்பட்டுள்ளது. இதனால் இந்த அர்ச்சை வழிபாடு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. வேதகாலம் தொடங்கியே நடந்து வருகிறது என்றும் சொல்லக் கிடக்கிறது. மற்றும் கண்டகி என்னும் புண்ணியநதியில், விஷ்ணு ஸாந்நித்யத்துடன், 2, 4, 7, 14 உள் சக்கரங்களுடன் அமைந்த 'சாளக்கிராமம்' என்ற உருவத்தை வழிபடுவதும் அர்ச்சை வழிபாட்டில் சேர்ந்ததே. "சாளக்ராம சிலாம்யஸ்து கோமணே ஸ்துளஸீதளை: அர்ச்சயேத்யதி துஷ்டாத்மா ஸர்வபாபை ப்ரமுச்யதே'' (துஷ்டன் ஆனாலும் மிருதுவான துளஸீ தளங்களால் சாளக்ராமத்தை அர்ச்சனை செய்தால், எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுவான்) எனப் பாத்மத்தில் உரைக்கப்பட்டிருக்கிறது.

ப்ரம்ம வைவர்த்த புராணமும் சாளக்ராமத்தின் பெருமையை விரிவாகப் புகட்டுகிறது. சிறிய திருமடலின் "ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பின் போவதே'' (தரையில் சுலபமாகக் கிடைக்கும் முயல் மாமிசத்தைவிட்டு, வானில் பறந்துபாயும் அற்பக் காக்கை மாமிசத்திற்கு ஓடுவார் உண்டோ) என்ற பாசுர அடியில் அர்ச்சையின் ஏற்றம் புகழப்படுகிறது. முதல் திருவந்தாதியில் "தமர் உகந்தது எவ் வுருவம் அவ்வுருவம் தானே''(44) என்ற பாசுரத்தில் பொய்கை யாழ்வார், அடியார்கள் ஏற்படுத்திய உருவமே தம்முருவமாகவும், அவர்கள் சூட்டியபெயரே தம் பெயராகவும், மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு அடியார்களுக்கு ஆட்பட்டிருக்கிறான் என்று அர்ச்சையின் சிறப்பை சித்தம் தெளியக் கூறினர். திருமங்கை ஆழ்வாரும் மாயவரம்-இந்தளூர் பரிமளரங்கனைப் பாடும் பொழுது "அடியோமுக்கே எம்பெருமானல்லீரோ'' என்றார். "பித்த பரிஹாரார்த்தமாக க்ஷீரஸேவை பண்ணுவாரைப் போலன்றிக்கே, அயத்ந லப்தமான ஔஷதத்தாலே அவலம் பிதமாக ஆரோக்யம் பெற்றவர்கள் பால் வார்த்துண்ணுமாப் போல உகந்துபண்ணவும்'' (பித்தம் தலைக்கேறினவன் பாலை மருந்து போல் பருகுவது மாதிரி இல்லாமல், நோயற்றவன் விருப்பத்துடன் பாலைப் பருகுவது போல் அர்ச்சையில் ஈடுபட வேண்டும்) என்று வேதாந்த தேசிகனும் கூறினர். போக்தாக்களுக்கு (உண்பவர்களுக்கு) பிடிதோறும் நெய் வேண்டுமா போலே அடிக்கடியும், கையும், திருவாழியுமான சேர்த்தியை ஆழ்வார் அனுபவிக்கிறார்'' என்ற உரையையும் பார்க்க வேண்டும். "அச்சுவை பெறினும் வேண்டேன்'' என்று தொண்டரடிப் பொடி யாழ்வார் பாசுரமும் "என் அமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே'' என்று திருப்பாணாழ்வார்பாசுரமும் "கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப் பிறவிசெய்யாதே இனிப்போய் செய்யும் தவம்தான் என்''என்றஸ்ரீசூக்தியும் அர்ச்சையின் பெருமையைப் பேசுகின்றன. ஆண்டாள் அகம் குறைந்ததும் அர்ச்சையில்தானே!

4. ஸ்ரீதரன் உகந்த சிற்பம்—

அர்ச்சையை உலக இயலில் பேசினால் சிற்பமாகும். சிற்பத்திலன்றோபகவான் வந்து புகுந்தான். ஆகவே அச் சிற்பத்தைப் பற்றி இரண்டொரு சொற்கள். சிற்பநூல்கள் "விசுவகர்மியம்'' முதல் 'சௌரம்' வரை 32ஆக உள்ளன. சிற்ப சாஸ்திரங்களுக்கு "வாஸ்துசாஸ்திரம்'' எனவும் பெயருண்டு. சிற்பி தன் கண்ணால் கண்டதையோ, அல்லது கற்பனையின் மூலம் கண்ட வடிவத்தையோ பொன், வெள்ளி, வெண்கலம், மரம், தந்தம், கல், மண் போன்ற பொருள்களால் அமைப்பாளுயின் அதற்குச் சிற்பம் எனப் பெயர். கி. பி. 2ம் நூற்றாண்டில் சிற்பக்கலை வளர்ச்சியுற்றது. இவைகளில் குஷானிய முறையும், சாதவாகன முறையும் சிறந்தவை. சோழர் காலத்திலும் சிற்பக்கலை சிறந்தது எனலாம். பல்லவர்காலத்தைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். கண்ணிற்கு இனியவை எல்லாம் சிறந்த வடிவங்களாகாது, சாஸ்திர முறைப்படி அமைக்கப்பட்டவைகளே சிறந்தவை எனச் சுக்ரநீதி என்னும் நூல் சொல்லுகிறது. விக்கிரஹத்தை முற்காலத்தில் ஸ்தபதிகள் மெழுகு முறையில் வார்த்தார்கள் எனத் தெரிய வரு

ஸ்ரீ நாச்சியார் திருக்கோயில்

[கல்வெட்டுக்களின் அருமை]

கோவைகிழார் திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A.,B.L,

ஸ்ரீ வில்லிபுத்தூர் சூடிக்கொடுத்த நாச்சியார் திருக்கோயில் மிகப்புகழ் பெற்றதொரு திவ்விய தேசம். அத்திவ்விய தேசத்திற்கு ஆண்டுதோறும் கணக்கற்ற அன்பர்கள் சென்று வணங்குகிறார்கள். அத்திவ்விய தேசம் பெரியாழ்வாரும் அவருடைய திருமகளார் ஸ்ரீ ஆண்டாளும் தோன்றிச்சிறந்த பாசுரங்களை அருளிச் செய்த புனித இடமாகும். அங்கே இரண்டு திருக்கோயில்கள் இருக்கின்றன. அவைகள் ஆண்டாள் கோயிலும் வடபத்திரசாயிகோயிலும் ஆகும். அவைகள் அடுத்தடுத்து இருக்கின்றன. அவைகளில் நிரம்பக் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஆண்டாள் கோயிலில் காணும் கல்வெட்டுக்கள் சிறந்த வகையில் எழுதப்பட்டுள்ளன. அவைகளைப் பொதுமக்கள் அறியார்கள். ஆகவே அவைகளில் காணும் சில அரிய குறிப்புக்கள் இங்கே எழுதப்படும்.

பாண்டிய நாட்டில் கி. பி. 1450 முதல் ஒரு நூற்றாண்டு வரையில் வாணர் என்ற மன்னர் குலத்தார்கள் ஸ்ரீ வில்லிபுத்தூர் பிராந்தியத்தில் குறுநில மன்னர்களாக ஆண்டு வந்தார்கள். அவர்கள் பெயர்களும் பட்டங்களும் மிகக் கம்பீரமாக இருந்தன. 'மகாபலிவாணாதிராசர்' என்பது அம்மன்னர்களின் பொதுப் பெயர். அவர்களில் :

1. திருமாலிருஞ்சோலை நின்றான் —1350 கி. பி.
2. சுந்தரத் தோளுடையார்—1374
3. உறங்காவில்லிதாசன் —1375
4. திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் —1399
5. சுந்தரத் தோளுடையான் சார்வ பௌமன் —1398
6. சுந்தரத் தோளுடையான் மாவலி வாணன் 11 —1450—68

இப் பெயர்கள் வகித்த தலைவர்கள் ஆண்டாள் கோயிலுக்குப் பல தான தருமங்களைச் செய்துள்ளார்கள். அவர்கள் காலத்தில் ஒரு நூற்றாண்டு திருக்கோயில் விளங்கிக் கொண்டிருந்தது.

கிறது. முதலில் மெழுகினால் உருவம் செய்துகொண்டு, பின் அதன்மீது களி மண்ணைப் பூசி, உலர்த்தி, அச்சை அமைப்பார்கள். பின் உள்ளே உள்ள மெழுகைத் தீயினால் உருக்கி விடுவார்கள். கடைசியில் களிமண் அச்சு எஞ்சிநிற்கும். அதற்குள் உலோகத்தை உருக்கிக் கொட்டி விரும்பிய உருவத்தை வார்ப்பார்கள். முற்காலத்தில் சீனர்களும், எகிப்தியர்களும் இந்த முறையைக் கையாண்டனர். கி. மு. 4500 முதல் கி. மு. 252 வரை பண்டை எகிப்தியர் சிற்பக்கலையைப் பேணி வளர்த்தனர்.

(கலைக்களஞ்சியம்)

"மண்டலம் நிறைந்த திங்கள்
வதனமும் கமலக் கண்ணும்
குண்டலம் சுடரும் காதும்
குறுநகைப் பவள வாயும்
தண்து ழாய் அலங்கல் மார்பும்,
தடக்கையோர் நான்கு மாகக்
கண்டனன் மறையும் காணாக்
கரியவன் உருவம், அம்மா!"

ஆண்டாள் திருக்கோயில் மூலத்தானத்திற்கு முன் உள்ள மண்டபத்தில் தென் சுவரில் ஒரு கல்வெட்டு (534/26)—சூடிக் கொடுத்த நாச்சியார் திருக்கோயில் மகாமண்டபத்தை சுந்தரத் தோளுடையார் சார்வபௌம மகாபலி வாணதிராஜன் கட்டினதாகக் கூறுகிறது. அதாவது இன்றைக்கு ஐந்து நூற்றாண்டுகளின் முன் இம்மகா மண்டபம் கட்டப்பட்டது. இனி இந்தக் கல்வெட்டின்கீழ் இரண்டு பகுதிகளாக மற்றொரு சிறந்த கல்வெட்டு சகம் 1375 ஸ்ரீமுக ஆண்டில் (1454 மார்ச் 13) உறங்காவில்லி தாசன் என்ற மாவலிவாணதிராயர் பொறிக்கப் பட்டு திடியன் என்ற திருவரங்க நல்லூரை ஆண்டாள் கோயிலுக்குத் தானம் செய்த செய்தி கூறுகிறது. (597/1926)

இந்தக் கல்வெட்டின் அமைப்பு வெகு விசித்திரமானது. புதுவை (சீவில்லிபுத்தூர்) விஷ்ணு சித்தர் திருமகள் கோதைக்கு அரங்கநாதர் அனுப்பிய பிரணய பத்திரம் ஒன்று அரங்கப் பெருநகரில் சேரனை வென்றான் மண்டபத்தில் சுந்தர பாண்டியன் பந்தல்கீழ் அரியராயன் கட்டிலில் வீற்றிருக்கும்போது தானம் செய்யப் பட்டதாம். அரசன் தன்னையே அரங்கநாதனாகப் பாவனை செய்த நிலையில் அது வரையப் பட்டுள்ளது. அதன் முன்னுரையாக நாச்சியார் பெருமான்மீது கொண்ட திவ்விய காதல் நிலை கூறி இடையிடையே நாச்சியார் திருமொழியில் உள்ள பாசுரங்களில் சிறந்த பகுதிகளைச் சேர்த்தி வரையப்பட்டுள்ளது. காதல் வினைவாக அரங்கநாதர் ஆண்டாளுக்குக் கொடுத்தருளிய வரிசைகளில் திடியன் என்ற ஊரைத் தேவதானமாகக் கொடுத்ததாகப் பிணைக்கப் பட்டுள்ளது: இதனை அக்காலத்துக் கவிதா முறை என்று கொள்ளவேண்டும்.

திருக்கோயிலில் பொறிக்கப்பட்ட சாசனம் பிழைபடப் பிரதி செய்யப்பட்டபடியால் அதன் திருத்தமான வடிவில் இங்கே எழுதப்படுகிறது.

(துதி)

''ஏதத் த்ரை லோக்ய நிர்ம்மாணத்ராண சம்சார காரணம் ஸ்ரீமன் ஸ்ரீரங்கநாதஸ்ய சாசனம் சாஸ்வதம் பரம்''

(இதன் பொருள் — மூவுலகங்களுக்கும் ஆக்கல், அளித்தல் அழித்தல் ஆகியவற்றின் காரணமான ஸ்ரீ ரங்கநாதருடைய இந்த சாசனம் சாசுவதமாகச் சிறந்து விளங்கட்டும்)

(சாசனம்)

"பொருப்பன்ன மாடம் பொலிந்து
தோன்றும் புதுவையர் கோன்
விஷ்ணுசித்தன் கோதைக்கு நாம்
வரக்காட்டின பிரணய பத்திரிகை
(நாச்சியார் திருமொழி 1-10,பா)
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும் பரந்த நாடும்
சித்தர்களும் தொழுதிறைஞ் சத்
திசைவிளக்காய் நிற்கின்ற
(பெரியாழ்வார் திரு மொழி 4. 9. 6.)
நல்லார்கள் வாழும் நளிர் அரங்கப் பெருநகருள்
நம் வீட்டில் சேரனை வென்றான்
மண்டபத்துச் சுந்தர பாண்டியன்
பந்தற்கீழ் அரியராயன் கட்டிலில்
இருந்து-உம்பரும் தும்புரு நாரதரும்
(நா. திருமொழி 11,5)

வந்து முகங் காட்ட, அவர்களுக்கு அழகோலக்கம் கொடுத்து இருக்கச் செய்தே, நம் வீட்டில் குடவர் கோவணவர் பூவிடுவர் தழை விடுவர் தண்ணீர் சுமப்பார் தண்டெடுப்பார் அணுக்கர் கணக்கர் மற்றும் நம் காரியத்துக்குக் கடவர் எல்லோரும் வந்து நம் கோதை வீட்டினின்றும் அர்ச்சகர் குடவர் கோவணவர் தண்டெடுப்பார் ஸ்ரீ ராமாநுஜ உடையில் வந்தார்கள் என்று, நாமும் சர்வ பரிகரமும் அணைத்துக் கொத்துள்ளாரையும் எதிரே போக விட்டுத் தம் வீட்டில் உள்ளாரையும் கூட்டிக் காண்பித்துக் கொள்ளும் அடைவிலே காண்பித்துக் கொண்டு, தாம் வரக் காட்டின சம்மானமும் சுவீகரிக்கும் அடைவிலே சுவீகரித்தோம். தாம் வரக் காட்டின சாசனமும் வாசித்துக் காட்ட அறிந்து கொண்டோம். தாம் சொல்லிவரக் காட்டினபடியாவது:—

நாம் பதினாறுயிரவர் தேவிமாருடனே
பெரிய மண்டபத்தில் விநோதித்து
(நா. திரு மொழி 7—9)
இருந்தோமென்று தம் சுற்றத்துத் தோழி
(திருப்பாவை 11-பா)
மார் தமக்குச் சொல்ல அப்பொழுது
தாம் புண்ணிற் புளி பெய்தாற் போலேயும்
(நா. திரு 13—1)
வேலால் துன்னம் பெய்தாற் போலேயும்
(நா. திரு 13—2)
நெஞ் சூடுருவ வேவுண்ட. நிலையும் தளர்ந்து,
(நா. திரு 13—3)

கொள்ளும் பயனென்றில்லாத கொங்கை
தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டவன் மார்பில் எறிந்து
தென்னழலைத் தீர்வேனே
(நா. திரு. 13—8)
என்றும் உள்ளே உருகி நைந்து
(நா. திரு. 13—8)
தாம் நம்மைப் பொருத்தமிலி என்றும்
(நா. திரு.14—6)
புறம் போல் உள்ளும் கரியான்
(நா. திரு. 14—7)
பெண்ணின் வருத்தம் அறியாத பெருமான்
(நா. திரு. 13—1)
வஞ்சகக் கள்வன், மாமாயன், பாம்பணை
யார்க்குத் தம்பாம்பு போலே நாவும் (10—3)
இரண்டு வாய்த்து நாணிலி என்றும்
தாய் சொல்லி வரக் காட்டினது (3—3)
தாம் மாமியார் மக்களாகையாலும் (2—1)
நாம் மாமனார் மக்களாகையாலும்
(திருப்பாவை—9)
நம் திறந்தூடல் கண்டுவப்ப வேண்டிச்
சொன்ன தாயிருக்கும்.
(நா.—திரு. 4. 11)
நாம் முப்பத்து மூவர் அமரர்க்கும் முன் சென்று
கப்பம் தவிர்ப்பது
திருப்பாவை 20
காரியம் ஆகவும் தேவ ரகசியமாகவும்
பெரிய மண்டபத்தில் இருந்தோம்
தாம் மாணவர் வைத்த பரிசிலே
இருந்தோம் என்றும் நாங்கள் எம்மில்
இருந்து ஒட்டி அகச்சங்கம்
(நாச்சியார் திருமொழி 5—6)
நானு மவனும் அறிந்து மென்றும்
பாசி தூர்த்துக் கிடந்த பார் மகட்கும்பண்
டொருநாள்
(நா. திரு. மொழி 11—8)
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே
என்றும்,
திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
மாசுடம்பில் நீர்வரா மானமிலாப் பன்றியாம்
நா. திரு 11.9
அண்ணாந்திருக்கவே யாங்கவனைக்கைப்
பிடித்து பெண்ணாளன்,
என்றும் செம்மையுடைய திருவரங்கர் என்றும்,
நா. திரு மொழி 11. 10:
சொன்னபடியே நாம் தம்மை யல்லது வேண்டுவதில்லை தம் வீட்டில் உள்ளவர்களைத் தாடக நிறுத்தி நில்லாமல் வரக்காட்டச் சொன்ன படியே அவர்களுக்கு வேண்டும் சத்காரங்களும் செய்து தமக்கு நாம் என்றும் பல்லக்கும் நாம் இருக்கும் குடைக்கும் நாம் பூணும் கண்டமாலை ஆபரணங்களும் பட்டு பருத்தி சுகந்த திரவியங்களும் வேண்டுமதும் கொடுத்து, தமக்கு அடுக்களைப் புறமாக நமக்குப் பூர்வம் நடந்து வருகிற சீர்மையில் விட்ட சகாப்தம் 1௦75 மேல் செல்லாநின்ற ஸ்ரீ முக [1375 சகம்] வருஷம் மீன ஞாயிற்றும் பூர்வபட்சத்து ஏகாதசியும் புதவாரமும் பெற்ற உத்தரத்துநாள்
13. 3. 1454 A. D.
உறங்கா வில்லி தாசன் ஆன மகாபலி
வாணாதிராயர் சீர்மையான மதுரை
மண்டலத்து முட்டநாட்டுத் திடியன் ஆன
திருவரங்க நல்லூர் எல்லையாவது.
மேலெல்லை-புத்தூர் மலைக்கும் வயிரவன் பற்றுக்கும் கிழக்கு, வடவெல்லை—வாரந்தூர் பற்றுக்கும் தெற்கு, கீழெல்லை-கருமாத்தூரில் குளத்துக்கும் மேற்கு. தென்னெல்லை புளியஞ் சோலைக்கும் குத்துக் கல்லுக்கும் வடக்கு, இந் நான்கெல்லைக்கும் உட்பட்ட மாவடை மரவடை பட்டடை பதிமுதல் மற்றும் அப்பேர்ப்பட்ட சமஸ்த பிராப்திகளும் கைக்கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ளவும். இப்படிக்கு திருவாய் மொழிந்தருளின மைக்கு அருளால் திருமந்திர ஓலை நாயகம் ஸ்ரீ ரங்க நாதப் பிரியன் எழுத்து"

இக்கல் வெட்டில் நாச்சியார் திருமொழிகளிலிருந்து எடுத்தாளப்பட்ட சொற்றொடர்கள் எதிரெதிரே குறிக்கப்பட்டுள்ளன.

மேலே எடுத்துக் காட்டிய உறங்காவில்லி தாசன் சாசனத்தின் கீழ் மற்றொரு சாசனம் திருமாலிருஞ் சோலை நின்றார் ஆன மாவலிவாணாதிராயர் தான சாசனம் ஆகப் பொறிக்கப் பட்டுள்ளது. அதன்படி 578—1926. மாங்குடி ஆன சுந்தரத்தோள் நல்லூர் என்ற கிராமத்தை சகம் 1399 ஏ விளம்பி வைகாசி 20 தேதியில் (1477. மே. 16 வெள்ளி) குடிக்கொடுத்த நாச்சியாருக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆடித் திருவிழா நடத்துவதற்காக அம்மன்னன் தானம் செய்தான். தானக் கிராமத்தின் நான்கு எல்லைகள் குறித்தும் "எல்லைகளுக்குட் பட்ட நன்செய் புன்செய் மாவிடை மரவிடை கீழ்நோக்கிய கிணறு மேல் நோக்கிய மரமும்

மற்றும் எப்பேர்ப்பட்ட சமஸ்த பிராப்திகளும்'' தந்ததாகக் கண்டிருக்கிறது. அரசனுடைய பட்டப் பிருதுகள் நிரம்ப வரையப்பட்டிருக்கின்றன.

அதே இடத்தில் எழுதப்பட்ட வேறொரு கல்வெட்டு (580—1926) சகம் 1468 பிரபவ (1546. ஜுன் 16) ஆண்டில் பராக்கிரம பாண்டியன் ஆணைப்படி காளிங்கராயன் உலகுடைய பெருமாளின் பொருட்டுப் பொறிக்கப்பட்டது.

இந்தக் கல்வெட்டிலும் நாச்சியார் திருமொழியிலிருந்து சில அடிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன—

“ஏதத் ஸ்ரீ விஷ்ணு சித்தஸ்ய
துகிது ஜகதாம் ஹிதம்
தேவியாயா: ஸ்ரீரங்க நாதஸ்ய
கோதயா: திவ்ய சாசனம்''

(விஷ்ணு சித்தருடைய திருமகளாரும் ஸ்ரீரங்க நாதருடைய தேவியாரும் ஆன கோதையின் திவ்ய மங்களமான சாசனம் ஜகத்துக்கு இதத்தைக் கொடுக்கட்டும்)

நம் யதாஸ்தானமான மென்னடை யன்னம் பரந்து விளையாடும் வில்லி புத்தூரில்
(நா. திரு. 5.5)
நம் வீட்டில் முத்துடைத்தாமம் நிறை தாழ்ந்தப் பந்தற் கீழ் அழகிய மணவாளன்
(திருமொழி. 6.6)
பள்ளிக்கட்டிலிலிருந்து நாமும் நம் வடபெருங் கோயிலில் பள்ளி கொண்டருளிய பரமஸ்சுவாமிகளும் நம் அடியாருக்கு ஓலக்கம் கொடுத்து இருக்கச் செய்தே''....... ....முதலியன்

இந்தச் சாசனத்திலும் நாச்சியார் திருமொழியில் உள்ள சொற்கள் ஆளபட்டுள்ளன. இதைப்போல திவ்வியப் பிரபந்தங்களில் உள்ள திருவாக்குகளை எடுத்து ஆளுவது ஒரு சிறந்த வழக்கமாக ஐநூறு ஆண்டுகளுக்கு முன் இருந்தது என்று நாச்சியார் திருக்கோயில் கல்வெட்டுக்கள் நிரூபிக்கின்றன.

ஸ்ரீ வில்லிபுத்தூர் நாச்சியார் கோயிலிலும் வடபத்திரசாயி கோயிலிலும் அறுபது கல்வெட்டுக்கள் வரை பிரதி செய்யப்பட்டுள்ளன. அவைகளில் பாண்டியர், திருவிதாங்கூர் மன்னர், விஜயநகரத் தரசர், மதுரை நாயக்கர் முதலிய அரச வம்சத்தினர்களின் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. பெரும்பாலும் அவைகள் கோயிலுக்குச் செய்த தான தருமங்களைப் பற்றியே கூறுகின்றன.

இவைகளில் நமது கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட கல்வெட்டுக்கள் நான்கே. அவைகளின் சுருக்கம் வருமாறு:—

1.	584/1926	மகாமண்டபம் கட்டினது சுந்தரத்தோளுடைய சார்வபௌம் மகாபலி வாணதி ராஜன்.
2.	577/1926 13-3-1454	திடியன் என்ற திருவரங்க நல்லூர்—தானம்—உறங்காவில்லிதாசன் மாபலி வாணதராயன் பிரணயபத்திரிகை — மேற்கோள்கள்.
3.	578/1926 16-5-1477	மாங்குடி சுந்தரத் தோள் நல்லூர் தானம் — திருமாலிருஞ் சோலை நின்றார்— மாவலி வாணதிராயர்.
4.	580/1926 18-4-1546	பராக்கிரம பாண்டியன் ஆணைப்படி காளிங்கராயனுக்கு நிலமும் வீட்டிடமும் தந்தது.

மேலே கூறியபடி திவ்வியப் பிரபந்தப் பாசுரச் சொற்றொடர்கள் ஆங்காங்கே எடுத்தாளப் பட்டுள்ளன.

அக்காலத்து அரசர்களும் சிற்பிகளும் பொதுமக்களும் ஸ்ரீ ஆண்டாளிடம் பக்தி மேலிட்டு, அரிய சொற்றொடர்களைச் சுவைத்து அனுபவித்திருக்கிறார்கள். இவ்வனுபவம் இந்நாளில் எங்கு உள்ளது?

★

பரமேசுவர மங்கலம் கல்வெட்டுக்கள்-III

திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனுர், M.A., M.O.L., Ph.D.

1. பரமேசுவர மங்கலத்துக் கல்வெட்டுகள் பதின் மூன்றுகும். அவற்றிற் குறிக்கப்பட்டுள்ள அரசர் பெயர்களும் அவர் ஆட்சிக் காலமும் காலமுறைப்படி கீழே காண்போம்:—

1. பல்லவ நிருபதுங்க வர்மன் — கி.பி. 850—880
2. சோழன் இராசேந்திரன் I — கி.பி. 1012—1044
3. சோழன் குலோத்துங்கன் I — கி.பி. 1070—1122
4. சோழன் இராசராசன் III — கி.பி. 1216—1246
5. பராக்கிரம பாண்டியன் — கி.பி. 1334—1352
6. வீரகம்பணவுடையார் — கி.பி. 1355—1376
7. கிருஷ்ணதேவராயர் — கி.பி. 1509— 530

எனவே, இவ்வூர் பல்லவர் — சோழர் — பாண்டியர்—விசயநகர வேந்தர் ஆட்சியில் இருந்து வந்தமை தெளிவு.

2. கயிலாச நாதர் கோயில் கல்வெட்டு அக் கோவிலைச் 'சைலேசுவரம்' என்கிறது. சைலம்—மலை, ஈசுவரம்—சிவன் கோவில்; மலை மீதுள்ள சிவன் கோவில் என்பது பொருள். இக் கோவில் ஆட்சியைக் கவனித்தவர் கணப்பெருமக்கள் எனப்பட்டனர்.

3. இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் (கி.பி. 710—775) அவன் படைத்தலைவனுன உதயசந்திரனுல் பாண்டியன், மண்ணைக்குடி என்னும் இடத்தில் முறியடிக்கப் பட்டான். அப்போரில் பங்கு கொண்ட வீரன் அல்லது படைத்தலைவன் மண்ணைக்குடி மறம் அடக்கை விழுப்பேரரையன்[1] எனப்பட்டம் பெற்றிருக்கலாம். நந்திவர்மனுக்குப் பிறகு ஏறத்தாழ நூருண்டுகள் கழித்து இப்பட்டம் உடையவன் மகன் இவ்வறத்தைச் செய்துள்ளான் என்பதை நோக்க, இப்பட்டம் பரம்பரைப் பட்டமாகியிருக்கலாம் என்று கருதுதல் பொருத்தமாகும்[2].

4. (1) ஊரின் முதற் பெயர் **பரமேசுவர மங்கலம்** என்பது.

(2) அடுத்துப் பரமேசுவர மங்கலம் என்ற **நிகரிலி சோழச் சதுர் வேதி மங்கலம்** எனப் பெயர் பெற்றது. நிகரிலி சோழன் என்பது முதல் இராசராசன் விருதுப் பெயர்களுள் ஒன்று. இவ்வூர் அதனைப் பெற்றதை நோக்க, முதல் இராசராசன் காலத்தில் இது சிறப்புற்றதாயிருந்த தென்னலாம். இது சதுர்வேதிகட்கு (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணர்க்குத்) தானமாக வழங்கப்பட்டதால் 'சதுர் வேதி மங்கலம்' எனப்பட்டது. எனவே, இவ்வூர் முதல் இராசராசனுல் சதுர்வேதி கட்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட தென்னலாம்.

(3) மூன்றும் இராசராசன் காலத்துக் கல்வெட்டில் பரமேசுவர மங்கலமான **சோழகுல திலகச் சதுர்வேதி மங்கலம்** என்ற புதுப் பெயர் காணப்படுகிறது. இப்பெயர் மூன்றும் இராசராசன் காலத்திலோ அவனுக்கு முன்னரோ இடப்பெற்ற பெயராதல் வேண்டும்.

---

1. விழுப்பரையன், விழுப்பேரரையன் என்பன சோழப் பேரரசர் தம் அரசாங்க உயர் அலுவலர்க்கு வழங்கி வந்த பட்டங்களாகும். 'விழுப்பரையன் புரம்' காலப்போக்கில் **விழுப்புரம்** என்றுயிற்று என்பது இங்கு அறியத்தகும்.

2. A.R.E. 1912, p. 89.

ஊராட்சி மன்றம்

5. பரமேசுவர மங்கலத்தில் ஊராட்சி மன்றம் முதல் இராசேந்திரன் காலத்தில் இருந்தமையைக் கல்வெட்டு உணர்த்துகிறது. அது கோவிலில் இருந்த 'இராசேந்திரன்' என்ற சதுக்கசாலையில் கூடியது. ஊராட்சியினருள் சம்வத்சர வாரியர்3 பன்னிருவராவர் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன அல்லவா? பரமேசுவரமங்கலம் வேதியரைக் கொண்ட சதுர்வேதிமங்கலம் ஆதலால் ஊராட்சி நடத்தியவர் அனைவரும் பிராமணராவர்.

6. விசயநகர ஆட்சி கி.பி. 14-ஆம் நூற்றுண்டின் பிற்பாதியிலிருந்தே தொடங்கியது. கி.பி. 1310-இல் மாலிக்-காபூர் படையெடுப்புத் தக்கணத்திலும் தென் இந்தியாவிலும் நடைபெற்றது. அக்காலத்தில் தமிழரசுகள் தத்தளித்தன. வீரகம்பண உடையார் பெரும் படையுடன் வந்து தமிழகத்தில் அமைதியை நிலைநிறுத்தினுர். அவரே விசயநகர அரசின் தென் இந்தியப் பிரதிநிதியாக இருந்தார். அவரது ஆட்சியில் கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன.

7. பரமேசுவர மங்கலம் கோயில்கள் சிதைக்கப்பட்டமையும் கோவில் கற்களைக் கொண்டு மசூதி மண்டபம் கட்டப்பட்டிருப்பதும் கருநாடகப்போர்கள் நடைபெற்ற காலத்தில் நிகழ்ந்த செயல்களெனக் கருதலாம்.

8. பட்டத்தாள் மங்கலம், உதயாந்திர மங்கலம் என்றாற்போல 'மங்கலம்' என்னும் பெயர் கொண்டுள்ள பெரும்பாலானவை வேதியர்க்கு வழங்கிய ஊர்களாகும். இரண்டாம் பரமேசுவரன் முதலில் அதனைப் பிராமணர்க்கு வழங்கியிருக்கலாம்; பின்னர் முதலாம் இராசராசன் காலத்தில் அவ்வூர் சதுர்வேதிகட்கு வழங்கப்பட்டது போலும்!

9. முதல் இராசேந்திரன் காலத்தில் இருந்த அரசாங்க உயர் அதிகாரிகளுள் வீரகோசர மங்கலம் உடையார் ஒருவராகலாம். அவர் மனைவியார் உடைய பிராட்டியார் சில நிலங்களை மடைப்பள்ளிப் புறமாகத் தந்தார் என்று இறுதிக் கல்வெட்டுக் கூறுகிறது. 'மங்கலம்' என்னும் சொல் காலப்போக்கில் 'மங்கை' என மருவி வழங்கலும் உண்டு. வரகுண மங்கலம் — வரகுண மங்கை எனவும், உத்தர கோசமங்கலம் — உத்தரகோச மங்கை எனவும் மருவி வழங்கியிருத்தல் காண்க. ஆயின், வீரகோசர மங்கலம், பரமேசுவர மங்கலம் என்பவை இங்ஙனம் மருவி வழங்கப் படவில்லை.

3. வாரியர் மரபினர் இன்றும் வாரியர் என்றே மலையாள நாட்டில் வழங்கப்படல் காணலாம். இது தமிழகத்தில் அம்பலகாரர் என்னும் பட்டம் போன்றது.

முடிவுரை :

இக் கல்வெட்டுக்களுள் பல சிதைந்தவை முடிவு இல்லாதவை—கண்ட இடங்களில் பதிக்கப்பட்டவை. இவற்றின் பிற பகுதிகள் காணப் படவில்லை. வேறு சில பகுதிகளைக் கொண்டவை சண்பகேசர் கருவறை உட்புறச் சுவர்களில் உள்ளன; வேறு சில அண்மையில் உள்ள மசூதி மண்டபச் சுவர்களில் உள்ளன. இவை அனைத்தையும் முறைப்படுத்திப் படியெடுத்துப் படித்துப் பார்ப்பின், மேலும் பல செய்திகள் அறிதல் கூடும். மேலே சொல்லப்பட்ட தெலுங்கு நூற் செய்தியையும் ஊர்ப் பெயரையும் நோக்க, இவ்வூர் இரண்டாம் பரமேசுவரவர்மனால் உண்டான தென்பதை அறியலாம்; கல்வெட்டுச் செய்திகளை நோக்க, இவ்வூர் கி. பி. 9-ஆம் நூற்றுண்டிலிருந்து 16-ஆம் நூற்றுண்டு வரையில் நல்ல நிலையில் இருந்தது என்பது அறியப்படும். *

* யான் இவ்வூரை நேரிற்கண்டு ஆராய்ச்சி நிகழ்த்தப் பேருதவி புரிந்தவர்கள் திருக்கழுக்குன்ற வட்டத்துப் பள்ளி ஆய்வாளர் திரு. இராம. கலியாணராமன், ஆசிரியர் வடிவேலு, பரமேசுவரமங்கலம் கிராம அதிகாரி மகனுர் திரு. ஏ. ஜே. சிவானந்த முதலியார், சண்பகேசர் கோயில் அருச்சகர் திரு. நாகரத்தின குருக்கள் என்பவராவர். இம்முயற்சியில் என்னுடனிருந்து உதவியவர் புலவர் சி. கயிலாயம், ஆசிரியர்கள் சி. சு. மணி, வி. வீரராகவன் ஆவர். இவர் அனைவர்க்கும் எனது உளமார் நன்றி உரியது.

ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள்

முன்னுரை :

ஒருநாட்டின் பெருமைக்குரிய காரணங்கள் பலவற்றுள், அந் நாட்டிற் பல சான்றோர்கள் தோன்றி யருளியிருத்தலும் ஒன்றாகக் கொள்ளப் பெறும். சிறந்துயர்ந்த அருட் சான்றோர்கள் தோன்றப் பெறாத நாடு, வேறு எத்துணை வகைகளில்தான் சிறந் திருந்தாலும், அஃது அறிஞர்களாற் பெரிதும் மதிக்கப் பெறுவதில்லை. அதுபற்றியே,

> " தள்ளா விளையுளும் தக்காரும்
> தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு "

என ஆசிரியர் திருவள்ளுவர், நாட்டிற்கு இலக்கணம் வகுத்தருளினார். இதன்கண் 'தக்கார்' என்றது, ஒரு நாட்டில் தோன்றும் அறிஞர்கள்-புலவர்கள்-கவிஞர்கள் - அருளாளர்கள் - சமயத் தலைவர்கள் ஆகிய சான்றோர் பெருமக்களைக் குறிப்பதாகக் கொள்ளுதல் பொருந்தும்.

தமிழ்நாட்டில் சான்றோர்கள் :

நம் தமிழ் நாட்டின் பலவகைச் சிறப்புகளுக்கும் காரணம், இங்குத் தோன்றிய சான்றோர்கள் எண்ணிலர் ஆதலேயாம்.

> "ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
> சான்றோர் பலர்யான் வாழும் ஊரே "

எனப் புறநானூறு என்னும் பழந்தமிழ் நூலில், பிசிராந்தையார் என்னும் புலவர் பெருமான், சிறந்த பெருமிதம் பாராட்டிக் கொண்டு மகிழ்ந்து பாடுகின்றார்! அஃது அவர் வாழ்ந்த ஊருக்கு மட்டுமே யன்றி, நாம் வாழ்கின்ற நம் தமிழ்நாடு - இந்திய தேசம் - முழுவதற்குமே பொருந்தும் என்பதில் ஐயமில்லை,

வரலாற்று நூல்கள் :

இந் நாளைய வரலாற்று நூல்களில், பெரியவர்கள் - சிறந்தவர்கள் என்று அரசர்களே குறிப்பிடப் பெற்று வருதலை, நாம் காண்கின்றோம். ஆனால் வரலாற்று நூல்களில் வரும் அரசர்களைக் காட்டிலும், நாட்டு வரலாறுகளில் புகழ்ந்தெடுத்துப் போற்றப் படுவதற்கு உரியவர்கள், அறிவுத் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் சிறந்து திகழ்ந்திருந்த சான்றோர் பெருமக்களே யாவர். *

ஸ்ரீ சாந்தலிங்கர் :

அங்ஙனம் தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகத் தோன்றி யருளியுள்ள சான்றோர்களுள்ளே, ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் அவர்களும் ஒருவராவர். இவர்கள் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவர்கள். சுவாமிகள் வீரசைவ சமயத்தைச் சார்ந்தவர். இளம் வயதிலேயே நற்குண நற்செயல்கள் உடையவராய்ச் சிவபிரானிடத்தும், சிவனடியார்களிடத்தும் பேரன்பு பூண்டு ஒழுகி வந்தார். இளமைப் பருவத்திலேயே சுவாமிகளுக்

---

* "Have we not taught the wrong way and accustomed the people of the world to call **Alexanders** and **Napoleons, Fredericks** and **Catherines**, the great of the world ?

The empire-builders from **Sargon** to **Hitler** have been ruthless men filled with egotism, callous to the fate of others, tracking their cruel way through the blood of the people to their senseless ends.

Vyasa and **Valmiki, Homer** and **Virgil, Dante** and **Shakespeare** use a universal perspective which makes all ages and all countries, their debtors."

—**Dr. S. Radhakrishnan.**

குத் திருவாவடுதுறை யாதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவரின் தொடர்பு திருவண்ணுமலையிற் கிடைத்தது. அவர்கள்பால் சுவாமிகள் உயர்ந்த பல உண்மைப் பொருள்களை உணரப் பெற்ருர்கள்.

ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள்.

இங்ஙனம் சுவாமிகள் திருவண்ணுமலையில் இருந்து வருங்கால், முருகனருள் பெற்றவரும், எண்ணிறந்த சித்திகள் கைவரப் பெற்றவருமாகிய பொம்மபுரம் ஆதீனம் - மயிலம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அவர்களைக் காண விரும்பி, அவர்கள் எழுந்தருளியிருந்த பொம்மபுரம் நோக்கிச் செல்வாராயினர். செல்லும் வழியில், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அவர்களின் தொடர்பும் துணையும், ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் அவர்களுக்கு இறையருளால் வாய்த்தது.

இந்தத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் தாம் சோணசைலமாலை, நால்வர் நான்மணிமாலை, திருவெங்கைக் கோவை, திருவெங்கைக் கலம்பகம், பிரபுலிங்க லீலை முதலிய புகழ்பெற்ற பல நூல்களை அருளிச் செய்த பெருந்தகையாவர். இவர்தம் தங்கையாகிய ஞானம்பிகை யம்மையைச் சாந்தலிங்க சுவாமிகள், ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளக் குறிப்பின் வண்ணம் திருமணம் செய்து கொண்டு, கோயம்புத்தூரையடுத்த பேரூர்க்குச் சென்று தங்கி, முதற்கண் சிலகாலம் இல்லறம் நடத்திச் சிவத் தொண்டுகள் செய்துவந்தார். பிறகு அவர்கள் இறையருட் குறிப்பின்படி துறவுநெறி கடைப்பிடித் தொழுகிச் சிறந்து விளங்கினுர்கள்.

பேரூர், கொங்குநாட்டுத் தலங்களுள் ஒன்று. புண்ணிய நதியாகிய காஞ்சி நதிக்கரையில் உள்ளது. கூத்தப் பெருமான் திருநடனம் புரியும் வெள்ளி மன்றத்தைத் தன்னகத்தே கொண்டது. மேலைச் சிதம்பரம், பிறவாநெறி என்னும் பெயர்களை யுடையது. சோழர்களாலும், பாண்டியர்களாலும், பிற்கால மன்னர்களாலும் திருப்பணிகள் செய்யப் பெற்றது.

அருட்காட்சி :

இத் தலத்தினையே தமக்குரிய சிறந்த இடமாகச் சாந்தலிங்க சுவாமிகள் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அங்கே ஒரு திருமடம் அமைத்து, அதன் கண் தங்கி அன்பர்களுக்கு ஞான நூல்களை விளக்கிக் கற்பித்துக் கொண்டும், ஏனைய நேரங்களில் சிவத்தியானத்தில் அழுந்தித் தனித்து நிட்டை கூடியும் வந்தனர். ஒருநாள் தமது தவ முதிர்வாலும், பக்குவ நலத்தாலும், பேரூர் அம்பலவாணரைப் பச்சைநாயகியம்மையுடன் விடையூர்தியின் மீது காணும் அருட் காட்சியை எய்தும் பேறு பெற்ருர். தாம் கண்ட அவ் வருட் காட்சியினைச் சுவாமிகள் தமது நூல்களிற் பல பாடல்களில் பாடி யிருக்கின்ருர்.

"பிரானே திருத்தில்லை யுளாய் !
அன்றுஇப் பேதை யேன்முன்
ஓர்ஆனே றிவர்ந்து அம்பிகையோடு
எளிது ஓடி வந்தாய் !
வரானே இனும்எம் இறைஎன்று
உனைநாடி வாடி
இரா நா யடியேற்கு எதிர்
தோன்றிலை இன்று! இதுஎன்னே?"

"உவந்தாய் எனது ஐம்புலனும்
இரிந்தோட ஓர்நாள்

தீவந்தான் சிறிதும் இல்லையால்
விடைதன்னில் மின்னேடு
இவர்ந்தே வர விளங்கில
என்னை கொல்லோ ?"
அவந்தான் மிகுபரவி உன்
லீலை அறிந்திலேனே"

என வரும் பாடல்களிற் சுவாமிகள், இறைவன் தமக்கு நல்கிய அருட்காட்சியின் திறத்தினை வியந்து அழகுறப் போற்றியிருத்தல் காணலாம்.

அரிய நூல்கள் :

சுவாமிகள் உலகமக்கள் ஓதியுணர்ந்து உய்யும் வண்ணம், நான்கு சிறந்த நூல்களை அருளிச் செய்துள்ளனர். அவைகள் முறையே கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார் என்பன வாகும். இந்நூல்களின் பெருமையினை அளவிட் டுரைத்தல் இயலாது. இவை உயிர்களிடத்து அருளுடைமை - இறையன்பு - உலகியற் பற்றொழித்தல் - சமரச ஞானம் ஆகிய சிறந்த பண்பாடுகளைப் பற்றி விளக்கி வலியுறுத்துவன.

கொலை மறுத்தல் என்னும் நூலுணர்ந்து கொல்லா நோன்பும், புலாலுணர்வு மறுப்பும் மேற் கொண்டோர் பலராவர். இந்நூல் பலவித வாதிகளின் கூற்றையும் எடுத்து, இனி வினவுதற்கு ஒன்றும் இல்லை என்னுமாறு, அவர்களின் வினக்களுக் கெல்லாம் விடையாக இருபத்திரண்டு செய்யுட்களால் முற்றுப் பெறுகின்றது. கொலைமறுப்பை உணர்த்தும் நூல்களுள் இது தலைசிறந்தது. வினக்களுக்குத் தரப்படும் விடைகள் எவ்வகையாலும் மறுத்தற்கு அரியன. வினவிற்கேற்ப, வினவுவோரின் தகுதிக்கேற்ப, விடைகள் அமைந்திருக்கும் முறைமை பயில்வோரை வியக்கச் செய்யும் ! இவ்வாறே ஏனைய நூல்களும் பலவகைகளிற் சிறப்புற்றுத் திகழ்கின்றன.

நூல்களின் பெருமை :

இந்நூல்களைப் பற்றி மகான் வண்ணச்சரபம் திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள் அவர்கள், தாம் இயற்றிய புலவர் புராணம் என்னும் அரும் பெரும் நூலில், பெரிதும் புகழ்ந்து போற்றிப் பின்வருமாறு பாராட்டிக் கூறியுள்ளார் :

"கூசல் அறக் கருணை
கூட்டும் கொலைமறுப்பும்,
ஈசனது பத்திக்கு
இனிதாம் சதகமும், பொய்ப்
பாசம் முழுதும்
பறித்தெறியும் தீபமும், நெஞ்சு
ஊசல்நிகர் ஆட்டொழிக்கும்
உந்தியும் ஆம் நூற்பெயரே"

"பெற்றதைக்கீழ் ஆக்கிப்
பெருததனை மேலாக்கும்
குற்றம் உயிரின்
குணம் என்றுஓர் பாசுரத்தில்
சொற்றனன்! அவ் வாறுபல
சொற்கள்! உலகு அத்தனையும்
விற்றளித்திட் டாலும்
விலைமேவா விண்டனனே"

"எம்மதத்தில் உள்ளவர்கள்
எந்நிட்டை சொன்னலும்
சம்மதமே யாம் எமக்குத்
தற்போதம் மாயில்எனப்
பொய்ம்மதத்தோர் நாணப்
புகன்றருளும் அப்புனிதன்
மும்மதமாப் போலும்
முழுஞான வீரன் அம்மா"

எனவரும் பாடல்களில், ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் அவர்களின் நூல்களைக் குறித்துப் புலவர் புராணம் போற்றி மகிழ்கின்றது. சுவாமிகளை "அப் புனிதன் மும்மதமாப் போலும் முழுஞான வீரன்" என்றும், அவர்தம் நூல்களை "உலகு அத்தனையும் விற்று அளித்திட்டாலும் விலைமேவாத மேம்பாடு மிக்கவை" என்றும் திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள் சிறப்புறப் போற்றி வியந்தனர் என்றால், அந் நூல்களின் பெருமையினை யுணர்த்த வேறு சான்றுகளும் வேண்டு

மோ? இந்நூல்களின் அருமை பெருமைகளை யெல்லாம் உணர்ந்தேயன்றே, சென்ற நூற்றாண்டில் செந்தமிழ்ச்சிவநெறிப் பெருஞாயிறாய் விளங்கிய யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள், இவற்றைச் சிறந்தெடுத்துத் தேர்ந்து கொண்டு ஆராய்ந்து பதிப்பித்தார்கள்.

மாணவர்கள் :

விருத்தாசலத்தில் சிறந்து விளங்கி மகாராஜா துறவு முதலிய புகழ் பெற்ற நூல்களை இயற்றியருளிய குமாரதேவர் முதலிய பலரும், சாந்தலிங்க சுவாமிகளின் மாணவர்களே யாவர். சென்னைக்கு அணித்தாகப் புகழ்ஓங்கி ஒளிரும் முருகன் தலமாகிய திருப்போரூரில் வாழ்ந்திருந்தவரும், திருப்போரூர்ச் சந்நிதி முறை என்னும் சிறந்த செந்தமிழ் நூலைப் பாடியருளிய ஞானப் பெருந்தகையும் ஆகிய திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள், ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளிடத்திலும்,அவர்தம் நூல்களின் மாட்டும் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டுவிளங்கி, சுவாமிகளின் மாணாக்கர் ஆகிய குமார தேவர்க்கு மாணாக்கர் ஆக வைகியவரே எனின், சுவாமிகளின் பெருமையை நம்மனோர் அளவிட்டு உரைத்தல் இயலுமோ?

திருப்போரூர் முருகனின் அருள் பெற்றுச் சிறந்துயர்ந்த ஞானப் பெருஞ் செல்வர் ஆகத் திகழ்ந்திருந்த சிதம்பர சுவாமிகள் அவர்கள் தாம், ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் அவர்கள் இயற்றிய 'கொலை மறுத்தல்' முதலிய நான்கு நூல்களுக்கும் செவ்விய உரை வகுத்தருளிய செம்மலாவார் எனின், அந்நூல்களின் பெருமைக்கும் ஓர் அளவு உண்டோ?

பேரூரில் திருமடம் :

இங்ஙனம் துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகளின் தொடர்பு உடையவராய், பொம்மைய புரம் - மயிலம் சிவஞானபாலைய சுவாமிகளின் அருளுக்கு உரியவராய், புலவர்கள் அனைவரும் "கற்பனைக் களஞ்சியம்" எனப் புகழ்ந்து கொண்டாடும் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் நட்பிற்கும் உறவுக்கும் பாத்திரராய்,விருத்தாசலம் குமாரதேவர் முதலிய மாணவர் பலர்க்கும் ஞான குரவராய், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் உரை வரையத் தக்க நூல்களின் ஆசிரியராய்,ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் விளங்கி யிருந்த ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் வைகி யிருந்ததும், சமாதி கொண்டருளியதுமான திருமடம்,கோவைக்கு அடுத்து மேலைச் சிதம்பரம் எனப் புகழ் பெற்று விளங்கும் பேரூர் என்னும் தேவாரப் பாடல் பெற்ற சிவதலத்தில், அமைந்திருக்கின்றது. சமய உணர்வும் தமிழுணர்வும் உடைய தக்கவர்கள் அனைவரும் சென்று கண்டு வழிபடத் தக்க பெருநலஞ் சான்றது அத் திருமடம்!

முடிவுரை :

அத் திருமடத்தின் சார்பில் தொடக்கப் பள்ளி - உயர்நிலைப்பள்ளி - தமிழ்க் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்கள் தோன்றித் தொண்டாற்றி வருகின்றன. ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் அவர்களின் அடிச் சுவட்டினைப் பின்பற்றி அவர்களின் பிரதிநிதியாக இருந்து தவத்திரு. இராமசாமி அடிகள் அவர்கள் தமிழையும் சமயத்தையும் பேணிப் புரந்து வருகின்றார்கள். ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளின் புகழும், அவர்தம் நூல்களின் பெருமையும் மக்களிடையிற் பெரிதும் பரவி, உலகுக்கு நலம் விளைவிக்கத் திருவருளை வழுத்துவோமாக ! —ஆசிரியர்.

செய்திச் சுருக்கம்

17-3-64 முதல் 31-3-64 வரை	ஸ்ரீ ஆலந்துறையார் கோயில், திருப்பழுவூர்.—பிரம் மோத்சவம்.
17-3-64 முதல் 30-3-64 வரை	ஸ்ரீ மத்யார் ஜுனேஸ்வரர் கோயில், இராஜேந்திரம், குளித்தலை தாலுகா. — பங்குனி உத்திரப் பிரம்மோத்சவம்.
17-3-64 முதல் 3-4-64 வரை	சென்னை ஏகாம்பரேஸ்வரர் கோயில், சென்னை. — பிரம்மோத்சவம்.
12-3-64 முதல் 13-3-64 வரை	ஸ்ரீ வில்வவனேச்வர சுவாமி, கோயில், திருவைகாவூர்—மஹாசிவராத்திரி.

ஆழ்வார் அனுபவம்

வித்துவான் திரு. வி. கே. ஸ்ரீநிவாஸாசாரி, ஸ்ரீவில்லிபுத்தூர்.

ஆனந்தமாக விளங்கும் பகவத் விஷய அனுபவத்தை மதிக்காமல், பிறவிப் பெருங்கடலில் விழுந்து அலமரும் ஆன்மாக்களை, அதிலிருந்து கரையேற்றுவதற்காகவே, வேதம் முதலிய தத்துவ நூல்களும், அடியார்கள் அருளிச் செய்த தோத்திர நூல்களும் தோன்றியிருக்கின்றன. அவைகள், பிறவிப்பிணிக்கு அருமருந்தான பொருள்களைக் கூறும் பொழுது, "செவி வாய் கண் மூக்கு உடல் என்று கூறப்படும் இச்சரீரம் இறைவனுக்குத் தொண்டு செய்யவே இறைவனால் படைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவனுக்கே உரிய இச்சரீரத்தை அவனுக்குத் திருத்தொண்டுகள் செய்வதில் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யவே பிறவிப்பிணிதானே அகன்றுவிடும்" என்று கூறியிருக்கின்றன. "விசித்திரா தேஹ ஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதம்" என்றும், "மாயவன் தன்னை வணங்க வைத்த கரணம் இவை" என்றும் வருகிற மேற்கோள்கள் இக் கருத்தை நன்கு மெய்ப்பிக்கின்றன.

தெய்வப்புலவர் திருவள்ளுவரும் இக் கருத்தை மிகமிக வலியுறுத்தும் நோக்கத்துடன் அருமையானதொரு திருக்குறளை அருளியிருக்கிறார்.

"ஒலிகளைக் கேட்க மாட்டாத செவிகளும், ஒரு பொருளையும் பார்க்க மாட்டாத கண்களும், எப்படி இருந்தும் பயனற்றவையோ அப்படியே, எண்வகையான நற்குணங்கள் சிறப்பாக நிரம்பப் பெற்ற இறைவனுடைய திருவடிகளை வணங்க மாட்டாத தலைகளும் பயனற்றன" என்ற கருத்துப்படக் கூறப்பட்டிருக்கும்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்
குணத்தான் தாளை வணங்காத் தலை"

என்ற அக் குறளை அனைவரும் அறிந்திருப்பர்.

இவ்வாறான உண்மைப் பொருளை இறைவனது இன்னருளால் அறியப்பெற்ற 'நம்மாழ்வார்' தம்முடைய மனம், வாக்கு, காயம் ஆகிய முக்கரணங்களையும் இறைவனுக்குத் தொண்டு செய்வதில் பயன் படுத்தி வாழ்ந்து வந்தார்.

இதனாலேயே இவ்வாழ்வார், "சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே, தந்தைதாய் என்றடைந்த வண்குருகூர்ச் சடகோபன்" என்று புகழப் படலானார்.

இவ்வாறு இருந்து வருகையில் ஒரு நாள் அவர் மிகவும் உளம் நொந்து, கவலை கொண்டிருந்தார். இதை அறிந்த அவருடைய அன்பர்கள் பலரும் அவரைச் சூழ்ந்து கொண்டு, "ஆழ்வீர்! ஏன் உள்ளம் நொந்து கவலையுடன் இருக்கிறீர் எப்பொழுதும் பகவானை நினைத்தும், சொல்லியும் உடல் குளிரக் குதித்தும் களிப்பவராயிற்றே ஏன் இப்படி கவல்கிறீர்" என்று கேட்கலாயினர்.

ஆழ்வாரும் அம் மெய்யன்பர்களை நோக்கி "நீங்கள் உரைக்கிறபடி பகவானை என்னுடைய நெஞ்சால் நினைத்தும், வாயால் அழைத்தும் இப்படிச் சிலவற்றைச் செய்ததுண்டு. நான் செய்த இச் செயல் குணமாகுமா? குற்றமாகுமா? என்று எனக்குள்ளே எண்ணிப் பார்த்தேன். இச்செயல் "குற்றம்தான்"

என்று என் அறிவிற்குப் புலனாயிற்று. ஆகவே, "இப்படித்தவறான செயலைச் செய்தோமே" என்று சிந்தனையுற்றிருக்கிறேன் என்றார்.

இதனைக் கேட்ட மெய்யன்பர்கள், "ஆழ்வீர்! இறைவனையே எண்ணவும், சொல்லவும் கொடுக்கப்பட்டிருக்கும் இக்கரணங்களை, நீவிர் இறைவனுக்கு அர்ப்பணித்தது குற்றமாகுமா? நீர் கூறுவது விந்தையாக இருக்கிறதே" என்று அகம் குழையக்கூறினர்.

ஆழ்வாரும் அவர்களது இன்மொழி கேட்டு, விழைந்து ஒரு நன்மொழி புகன்றார். "மெய் அன்பர்களே! நீங்கள் சொல்வது ஒரு விதத்தில் உண்மைதான். ஆனால் ஆழ்ந்து எண்ணிப்பார்க்கும் பொழுது மிகவும் அஞ்சும் படியாயல்லவோ இருக்கிறது? மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து வரும் நமது தீ மனம், எத்தனை பிறப்புகளில் எத்தனை தீய எண்ணங்களை எண்ணி எண்ணி அழுக்கடைந்திருக்கிறது. அப்படியே இவ்வாய், நல்ல சுவையுள்ள கனியிருக்க அதை விட்டிட்டுக் கைக்கும் தீங்காயை விரும்புவது போல இன்மொழிகளைப் பேசாது புன்மொழிகளையே பேசிப் பேசி எச்சில்வாயாக இருக்கிறதே. இத்தகைய பாழான நெஞ்சையும் வாக்கையும் கொண்டா அவ் இறைவனை நினைப்பது? சொல்லுவது? நீங்களே ஆராய்ந்து பாருங்கள். எப்பொழுதும் தூய உள்ளமும் வாலறிவும் உடைய நித்திய சூரிகளால், எந்தையே! (எங்களுக்கு வேண்டிய நன்மைகளைத் தானாகவே அறிந்து செய்பவனே) என்றும், எம்பெருமானே! (எங்களுக்கு ஸ்வாமியாக இருப்பவனே) என்றும் அழைக்கப்படுகிற அத்தனை உயர்வு உடைய இறைவனை மிகவும் தாழ்ந்த நான், அவ்வானவர்களைப் போல நெஞ்சால் நினைக்கவும் வாயால் அழைக்கவும் முற்படலாமா? இதனை ஊன்றி நோக்கினால், தேவதைகளுக்காக ஆக்கி வைத்த அவியுணவை நாய் தீண்டிக் கெடுத்தது போலல்லவா? புலனாகிறது. ஆகையினால்தான், அத்தூயரான நித்தியசூரிகள் அனுபவிக்கும் அவ் எம்பெருமானைப், பாவியேனான நான் என் நெஞ்சால் நினைத்தும் என் வாயால் சொல்லியும் கெடுத்துவிட்டோமே என்று கவலுகிறேன்" என்றாராம். அப்பாசுரத்தைக் காணலாம்.

"எந்தையே என்றும் எம்பெருமான் என்றும்
சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் பாவியேன்
எந்தை! எம்பெருமான்! என்று வானவர்
சிந்தையுள் வைத்துச் சொல்லும்செல்வனையே"

இதே கருத்தைத் திருமங்கையாழ்வாரும், "ஆவியை அரங்கமாலை அழுக்குடம்பு எச்சில் வாயால், தூய்மையில் தொண்டனேன் நான் சொல்லினேன் தொல்லை நாமம், பாவியேன் பிழைத்த வாறென்று அஞ்சினேற் கஞ்சலென்று, காவிபோல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றினரே" என்ற பாசுரத்தில் வெளியிட்டிருக்கிறார். ஆகவே ஆழ்வார்களுக்கு பகவத்விஷயத்தில் இப்படியும் ஒரு அனுபவம் உண்டு என்பது பாசுரத்தில் அறியக்கிடக்கிறது.

செய்திச் சுருக்கம்

15-3-64 முதல் 20-3-64 வரை — ஸ்ரீ விசுவநாத சுவாமி, கோயில், திருவிடை மருதூர் — அஷ்டபந்தன கும்பாபிஷேகம்.

12-3-64 முதல் 16-3-64 வரை — ஸ்ரீ மூங்கிலணை காமாட்சி அம்மன் கோயில் தேவதானப்பட்டி. — மகாசிவராத்ரி உத்சவம்.

18-3-64 முதல் 31-3-64 வரை — ஸ்ரீ மதன கோபால சுவாமி கோயில் பெரம்பலூர் — பிரம்மோத்சவம்.

12-3-64 முதல் 17-3-64 வரை — ஸ்ரீ செட்டி குருநாத சுவாமி கோயில், தெற்குமாசி வீதி மதுரை. — மகாசிவராத்திரி உத்சவம்.

ஒரு நம்பி

மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், தருமபுரம்.

'நம்பி' என்னும் சொற்பற்றி, 'பெருநம்பி' என்னும் கட்டுரையுட் கூறினோம். குலச்சிறையாரை, 'பெருநம்பி' என அருளிய ஆளுடைய நம்பிகள், அப்பூதி யடிகளாரை, 'ஒரு நம்பி' என்று அருளினர். 'பெருநம்பி' என்பதும் ஒருவாறு, 'தமக்கு ஒப்பில்லாதவர்' என்னும் பொருளைத் தருமாயினும், 'ஒரு நம்பி' என்னும் சொல்லே அப் பொருளுக்கு உரிய தாகும்.

இன்னும் அப்பூதியடிகளாரை, ஆளுடைய நம்பிகள், 'ஒருநம்பி' என்று அருளியதில் ஒரு நயமும் உண்டு. அஃதாவது, இன்னர் எனப் பெயர் முதலியவற்றல் அறியப்படாத ஒருவரை, 'ஒருவர்' என்று குறித்தல் இயல்பு. அதனல் 'ஒருநம்பி' என்பது அப்பூதி அடிகளார் தம் பெயரை வெளிப்படுத்திக் கொள்ளாத நிலையில் திருத் தொண்டுகள் பல புரிந்து வந்தமையை யும் குறிப்பது போல் நிற்பதாம்.

அறுபான் மும்மை நாயன்மார்களுள் அப்பூதியடிகளை ஆரூரர், பிறர் ஒருவரும் அவருக்கு நிகராகாத தனிப் பெருமை உடையவராக அருளிச் செய்தது என்னை? சிவபெருமானுக்குச் செய்யும் திருத் தொண்டினது பெருமையை அறிந்து, அதனையே பிற எல்லா வற்றினும் மேலாக மதித்து, அதன்கண் அளவிலா ஆர்வங் கொண்டு, அவ்வார்வ மேலீட்டால் தம்மை மறந்து ஒழுகினமையாலேயாம்.

அறுபான் மும்மை நாயன்மார்களும் திருத் தொண்டினது பெருமையை அறிந்து அதனைச் செய்தவர்களே. அதனல் தான் அவர்கள் அனைவருமே, 'திருத்தொண்டர்' எனப்பட்டனர் என்றலும், உழவாரப் படையாராகிய திருநாவுக்கரசரே திருத்தொண்டின் நெறியை உலகில் நிலை பெறுத்தியவர் என்பது அனைவர்க்கும் உடன்பாடு. அவரே அப்பூதி யடிகளது திருத் தொண்டின் பற்றினை அறிந்து வியப்புற்றர் என்றல், அவரது பெருமைக்கு ஒப்புச் சொல்லத்தக்க பெருமையுடையவர் வேறு ஒருவர் இருத்தல் கூடுமோ! அஃதாவது, அடியார்களுக்குள்ள பெருமைகள் எல்லாம் அவர்களுக்குத் திருத் தொண்டில் இருந்த பற்றினலே யாம். அவ்வகையில் நோக்கும் பொழுது, திருநாவுக்கரசரே . திருத்தொண்டர்களுள் ஒப்புயர்வற்ற பெருமை யுடையவராவார். அவரே மருண்டு நோக்கத் தக்க வகையில் அப்பூதி யடிகள் திருத்தொண்டில் பற்று மிகுந்திருந்தார் என்றல், அவருக்கு இணையானவராக உலகில் வேறெருவர் இருத்தல் கூடுமோ! அதனல் தான், நம்பியாரூரர் அவரை "ஒருநம்பி அப்பூதி" என்று அருளிச் செய்தார். அங்ஙனம் அவர் திருத்தொண்டில் ஒப்புயர்வில்லாத பற்று உடையவராய் இருந்த முறையை அறிதல் இன்றியமையாதது.

அப்பூதி யடிகள், சோழ நாட்டில் உள்ள திங்களூரில் அந்தணர் குலத்தில் தோன்றி வாழ்ந்தவர். சிவபிரானிடத்துப் பேரன்பு பூண்டவர். அதனல், இறப்பில் தவமாகிய சிவ புண்ணியச் செயல்களைச் செய்வதில் உயர்ந்து விளங்கி, அறத்திற்கு மாறுன களவு, பொய், காமம், கோபம் முதலிய குற்றங்களை இயல்பிலே நீக்கியவரானர். இவர் மேற்கொண்ட வாழ்க்கை, இல்வாழ்க்கையே.

சிவபத்தி மிகுந்து சிவபுண்ணியத்திலே ஈடுபட்டிருந்த இவர், நடுநாட்டிலே தோன்றிய திருநாவுக்கரசு நாயனரது வரலாற்றைக் கேள்வியுற்றர். 'அளவற்ற அடியார்களுள் ஒருவனகிய என்னையும் காத்தல் இறைவனது கடமை; அது நிற்க; எனது கடமை அவனுக்குத் தொண்டு செய்து கிடப்பதே' என்று கொண்டு, அப்பர் செய்துவரும் கைத்தொண்டின் சிறப்பையும், அதற்கேற்ப, அவருக்கு இறைவன் அவருக்குத் தோன்றத் துணையாய் இருந்து, சமணர் இழைத்த எண்ணற்ற தீங்குகளினின்றும் அவரைக் காத்தமையையும்

நினைந்து நினைந்து, அவரிடத்தில் அளவில்லாத அன்புடையவராய், அவரை நேரிற் கண்டு வணங்கப் பேரவாக் கொண்டார். ஆயினும், அக்கால நிலைமையில் அஃது அவருக்குக் கூடா மலே இருந்தது என்றாலும், அப்பூதி யடிகளார் தம்மை அப்பருடைய திருவடிக்கு அடியவ ராகவே உள்ளத்தால் ஒப்புவித்து விட்டார். அப்பரது திருப்பெயரை இடைவிடாது சொல் லிக் கொண்டே பிற கடமைகளைச் செய்தார். மற்றும், தம் பிள்ளைகள், வீட்டிலுள்ள நாழி, மரக்கால், துலாக் கோல் பசு, எருமை முதலிய எல்லாப் பொருள்களுக்கும், 'திருநாவுக்கரசு' என்றே பெயரிட்டு அழைத்துவந்தார். இவற் றால் அப்பூதி அடிகளுக்கு அப்பரைப்பற்றிய பித்து எந்த அளவில் மேலிட்டிருந்தது என்பது புலனாகும். ஆசிரியன் மாரிடத்தில் அன்புடை யவர் சிலரை நாம் அறிவோம்; என்றாலும், இத்துணைப் பேரன்புடையாரை நாம் அறிந்த தில்லை. ஆகவே, இவரை, ஆளுடைய நம்பிகள், 'ஒருநம்பி' என்று ஏன் அருள மாட்டார்!

அப்பூதி அடிகளார் செய்து வந்த சிவ புண்ணியங்களுள் சிவதலங்களுக்கு யாத்திரை செய்யும் சிவனடியார்களுக்காக ஏற்படுத்திய தண்ணீர்ப் பந்தரும், திருமடங்களும் சில அவைகளைக்கும், திருநாவுக்கரசு தண்ணீர்ப் பந்தர், 'திருநாவுக்கரசுமடம்' என்றே பெய ரிட்டு, அப் பெயர்களை அவற்றில் பல இடங் களிலும் எழுதிவைத்தார். (தொடரும்)

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

"திருக்கோயில்" இதழின் பழைய சந்தாத் தொகைகளை இன்னும் செலுத்தாமல் இருப்பவர்கள், அவற்றை உடனே விரைந்து அனுப்பி யுதவு மாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள். சந்தாத் தொகைகள், "உயர்திரு.

அறநிலைய ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை அலுவலகம்,
நுங்கம் பாக்கம், சென்னை-34."

என்னும் முகவரிக்கு அனுப்பப் படுதல் வேண்டும். அங்ஙனம் அனுப்புங்கால், அவரவர்களின் சந்தா எண்கள் தவறாமல் குறிப்பிடப் பெறுதல், மிகவும் இன்றியமையாதது ஆகும்.

சந்தா நேயர்கள், முழுவிவரங்கள் கொண்ட தங்கள் சரியான தபால் முகவரியையும் கூட, மணியார்டர் பாரத்தின் பின்புறம் திருத்தமாக எழுதி யனுப்புதல் வேண்டும்.

இதழுக்குச் சந்தா செலுத்திவரும் உறுப்பினர்களாக இருந்துவரும் கோயில்களாயின், ஒரே பெயரில் பல கோயில்கள் பல இடங்களில் இருப் பதனால், கோயிற் பெயர் - ஊர்ப்பெயர் - தாலுக்காவின் பெயர் - ஜில்லாவின் பெயர் ஆகிய விவரங்களுடன், சந்தா எண்ணும் தவறாமற் குறிப்பிட்டு எழுதி அனுப்புதல் மிகவும் அவசியம்.

சந்தா நேயர்கள் தமது சந்தா நிலுவைகளை, மேலும் காலதாமதம் இன்றி உடனே விரைந்து செலுத்தி யுதவும் படி, பெரிதும் வேண்டிக் கொள்ளப்படுகின்றார்கள்.

—ஆசிரியர்.

கோடம்பாக்கம் வடபழநித் தலவரலாறு நூல் வெளியீட்டு
விழாவிற் கலந்து கொண்ட பெருமக்கள்: (7-2-64)

மாயூரம் ஸ்ரீ மாயூர நாதர் கோயிலில் நடைபெற்ற பாவைமா நாட்டில் துணை ஆணையர் திரு. சோமசுந்தர தேசிகர், M.A., அவர்கள், பாவைப் பாடல் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசு வழங்குதல்.



திருமயிலைக் கபாலீச்சுரர் கோயிலும், தெப்பத் திருக்குளமும்.

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept. Madras-34. Printed at The United Printers, 3/27 Broadway, Madras-1.